
காகித ஓடம்
கே. எஸ். ஆனந்தன்
வீரகேசரி பிரசுரம்

வீரகேசரி பிரசுரம்: 22

COPY

# காகித ஓடம்

கே. எஸ், ஆனந்தன்

வெளியீடு
வீரகேசரி
த.பெட்டி 160,
கொழும்பு.

# "Kagitha Oadam"

by

K. S. Anandan.

*FIRST EDITION*

JUNE 1974.

*COPY RIGHTS*

RESERVED WITH
THE PUBLISHERS

VIRAKESARI
PIRASURAM 22

PRICE Rs. 3/40

Published by

VIRAKESARI

P.O Box 160, COLOMBO.

Sole Distributors:

EXPRESS NEWSPAPERS (Cey.) LTD.

185, GRANDPASS ROAD,
COLOMBO-14.

# ஆசிரியர் முன்னுரை

கல்யாணமாகி முதலிரவன்று, ''என்னைத் தீண்டாதே'' என்று கூறிய மணப்பெண்ணைப் பற்றி கதைகளிலும், சினிமாவிலும் படித்தும், பார்த்துமிருக்கலாம். அதற்குக் காரணம் அவள் விரும்பாத திருமணமாக இருக்கலாம். ஆனால், எமது கதாநாயகி ஒரு இலட்சியப் பெண். ஆண் குலத்தை வெறுத்தவள்—பின்னர் தன் மனதுக்குப் பிடித்தமான ஒருவனைக் காதலித்து, கல்யாணம் செய்து கட்டில் வரை சென்றுவிட்டு, ''என்னைத் தொடாதே'' என்று கூறுகின்ற ஓர் புதுமைப் பெண். அவளுடைய அர்த்தமற்ற பேச்சு, நினைவுகள், கற்பனைகள் எல்லாம் வாழ்க்கை என்ற கடலில் ஓர் காகித ஓடமாகும்போது, புடம்போட்ட தங்கமென நின்றாள் அந்த அழகு மயில். இவள் வெறும் கற்பனைப் பாத்திரமல்ல...!

எனது அபிமான வாசகரும், நண்பருமான ஒருவர் கூறிய உண்மைச் சம்பவத்தினை மையமாகக் கொண்டே இந் நவீனத்தை உருவாக்கினேன்.

எனது அபிமான வாசகர்களின் வரவேற்பாலும், ஆர்வத்தினாலும் வீரகேசரி புத்தக வெளியீட்டு நிறுவனத்தார் எனது புதிய படைப்பான இந் நவீனத்தை வெளியிடுகின்றனர். முதலில் எனது வாசகர்களுக்கும், புத்தக வெளியீட்டுத் துறையில், ஈழத்தில் ஓர் பொற்காலத்தை உருவாக்கிவரும் வீரகேசரி நிறுவனத்திற்கும், முக்கியமாக திரு. சி. பாலசச்சந்திரன் அவர்களுக்கும் எனது மனம் நிறைந்த நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

கே. எஸ். ஆனந்தன்,

'அன்பகம்'
இணுவில் கிழக்கு,
இணுவில்.

# பதிப்புரை

ஈழத்து வாசகர்களின் நன்மதிப்பைப் பெற்ற இளம் எழுத்தாளர்களில் திரு.கே.எஸ். ஆனந்தனும் ஒருவர். வீரகேசரி பிரசுர வரிசையில் அன்னாரின் ஆக்கம் இரண்டாம் தடவையாக இடம்பெறுகின்றது.

இது ஒரு குடும்பக்கதை. இன்ப வாழ்வை எதிர்நோக்கும் இரு இளம் நெஞ்சங்கள், வாழ்க்கையின் முதற்படியிலேயே சந்தேகம் என்னும் கொடிய சூறாவளியினால் தாக்கப்பட்டபோது, அவர்களின் உள்ளப் போராட்டங்களை அழகுறச் சித்தரிக்கின்றது இந் நாவல்.

இதில் ஒரு படிப்பினையும் உண்டு. சந்தேகமென்பது ஓர் கொடிய வியாதி. இதிலிருந்து தப்பவேண்டுமானால், இளம் தம்பதிகளுக்கிடையே 'இரகசியம்' என்பது இருக்கவே கூடாது. எங்கே 'மர்மம்' உண்டோ அங்கே சந்தேகம் தலைவிரித்தாடும்.

உள்ளத்தால் ஒன்றுபடும் இளம் காதலர்கள், பரஸ்பரம் தங்கள் உள்ளக்கிடக்கைகளை ஒளிவு மறைவின்றி அறிந்துகொள்ள வேண்டும். அப்போதுதான் இந் நாவலின் கதாநாயகிபோல் துன்பப் புயலில் சிக்கித் தவிக்காமல், தங்களைப் பாதுகாத்துக்கொள்ள முடியும்.

22.7.74. வெளியீட்டாளர்.


அடுத்த வீரகேசரி பிரசுரம்

— ஒரு புதுமையான கதை —

உணர்ச்சியூட்டும் சம்பவங்கள். ஒவ்வொருவரும் படிக்கவேண்டியது.

"ஒரு விலைமகளைக் காதலித்தேன்"

''இந்துமகேஷ்'' எழுதியது.

# காகித ஓடம்

## 1.

காலையில் எழுந்தது முதல் மிகவும் சுறுசுறுப்புடன் இயங்கிய உமாதேவி எட்டு மணியானதும் பாட சாலைக்குப் புறப்பட ஆயத்தமானாள். வட்டாரக் கல்வி அதிகாரி அன்று பாடசாலைக்கு வருவதாக இருந்ததினால் வழக்கத்திலும் பார்க்க நேரத்துடன் செல்லவேண்டி இருந்தது. எட்டு மணிக்கே வீட்டைப் பூட்டிக்கொண்டு வீதியில் இறங்கினாள். பக்கத்து வீட்டு வசுமதியும் அவளுடன் சேர்ந்து புறப்பட்டாள்.

காலையில் மழை பெய்திருந்ததினால் வீதி சேறும், சகதியுமாகக் காணப்பட்டது. அத்துடன் இடைக்கிடையே இருந்த பள்ளங்களில் நீரும் நிறைந்திருந்தது.

வட மாகாணத்தைச் சேர்ந்த பூநகரிப் பகுதியில் ஓர் கனிஷ்ட வித்தியாலயத்தில் உமாதேவியும், வசுமதியும் ஆசிரியர்களாகக் கடமையாற்றி வந்தனர். தலைமை ஆசிரியருக்குப் பாடசாலை அலுவல்களில் சில உதவிகளை உமாதேவியே செய்து வந்தாள். அதன் காரணமாகவே, அன்று அவள் நேரத்துக்குச் செல்ல வேண்டி இருந்தது.

யாழ்ப்பாணத்திலுள்ள ஓர் கிராமத்தில் பிறந்து, உத்தியோகம் காரணமாக பூநகரியில் குடியேறியிருந்தனர்

அவ்விளம் பெண்கள். புதிதாகப் பயிற்றப்பட்டு, பயிற்சிக் கல்லூரியினால் அங்கே கல்வி கற்பிக்க அனுப்பப்பட்டவர்கள். பூநகரி ஓர் கஷ்டமான பிரதேசமாயினும் குடும்ப நிலைமையை உத்தேசித்து அங்கே வாழலாயினர்.

ஓங்கி வளர்ந்த தென்னைகள்; அவற்றின் தலைமுறையாக வளர்ந்து படிப்படியாகக் குலைதள்ளி நிற்கும் இளம் கன்றுகள். மணற்பாங்கான அந்தப் பிரதேசத்தின் சூழலை அவைகளே ஆனந்தமாக வைத்திருந்தன. கடமையே பெரிதென எண்ணிய அவ்விளம் பெண்கள் பாடசாலை விடயங்களைப்பற்றியே கதைத்துக்கொண்டு செல்லலாயினர். அவர்களைக் கடந்து ஓர் உழவு இயந்திரம் உறுமிக்கொண்டு சென்றது. அவர்களின் கவனத்தை வேறு எதுவுமே கவரவில்லை.

மழையின் காரணமாக ஒதுங்கி நின்ற மந்தைகள் குறுக்கும் நெடுக்குமாக உலாவ முற்பட்டிருந்தன. ''பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது'' என்பார்களே அதே போன்று அந்த மந்தைக் கூட்டம் டிராக்டர்களையோ, கார், லொறிகளையோ கண்டு அஞ்சி ஓடுவதாயில்லை. பின்னே வந்துகொண்டிருந்த புதிய 'ப்பரீஸ்' கார் ஓயாமல் ஹோன் அடித்து ஒலி எழுப்பியும் பயனில்லாமல் போகவே, அந்தக் காரைச் செலுத்தி வந்தவன் மிகவும் ஆறுதலாகச் செலுத்திக், கொண்டிருந்தான்.

சற்றுத்தூரம் சென்றதும் ஒரு திருப்பம். அந்தத் திருப்பத்துக்காகக் ஹோனை அமுக்கிவிட்டுத் திரும்ப முயன்ற சமயம், ஒரு பக்கமிருந்து வீதியைத் தாண்டி ஓடியது ஓர் ஆட்டுக்குட்டி. இதனால் அவன் காரை மறுபுறம் சரித்துத் திருப்பியபொழுது வெள்ளம் தேங்கி நின்ற பள்ளமொன்றில் காரின் ஒரு பக்கத்துச் சக்கரங்கள் இறங்கி ஏறியதினால், அதே பக்கத்தில் வந்துகொண்டிருந்த உமாதேவி, வசுமதி ஆகிய இருவரின்மேல் நீர் சிதறிப் பறந்து தெளித்தது. இதைக் கவனித்த காரோட்டும் வாலிபன் காரின் பிரேக்கை அழுத்தி நிறுத்தினான்.

பரபரப்புடன் காரிலிருந்து இறங்கிய வாலிபனை நோக்கி. ''யூ பூல்'' என்று இரைந்து கத்தினாள் வசுமதி.

''மன்னிக்க வேண்டும். தற்செயலாக நடந்த ஒரு தவறுக்காக என்னை மடையன் என்று கூறுகின்றீர்கள். பரவாயில்லை. ஆனால், நான் இதை வேண்டுமென்று செய்யவில்லை......!'' என்று வருத்தப்பட்டான் அந்த வாலிபன்.

''காரிலே போறவங்கள், நடந்து போறவங்களைப் பற்றிச் சிந்திக்கணும். நடந்து போறவங்களை ஆடுமாடு மாதிரி நினைத்துக் கொண்டு காரை ஓட்டினால்......? இது எல்லாம் தெரியாமல் செய்கிறது தவறில்லை. தெரிந்துகொண்டு வேண்டுமென்றே செய்கின்ற திமிர். சன நடமாட்டமில்லாத பாதைதானே. அதுவும் இரு இளம் பெண்கள் என்றதும்......அங்கே விசாலமான இடமிருக்க இந்தப் பள்ளத்துள் தெரியாமலா காரை விட்டீங்கள்? உடையில் மட்டும் ஜென்டில்மென்டாய் இருந்தால் போதாது. அது உள்ளத்திலும், செயலிலும் இருக்க வேண்டும்'' என்றாள் வசுமதி

''முடிச்சிட்டீங்களா? நீங்க மட்டும் பேசாமல் நிற்கின்றீர்களே?'' என்று உமாதேவியைப் பார்த்தான் சிவசங்கரன் என்ற அந்த வாலிபன்.

''மிஸ்டர்! நடந்தது என்னவோ நடந்து விட்டது. இதற்கு வருத்தப்பட்டு என்ன செய்வது? வேறு நேரமாக இருந்தால் பரவாயில்லை. ஆனால், இன்று இன்ஸ்பெக்டர் வருவார் என்று கூறினார்கள். இப்படியே போனால்......'' இழுத்து நிறுத்தினாள் உமாதேவி.

''ஸ்கூல் இன்ஸ்பெக்டர்தானே? அவர் என்ன புஷ்பக விமானத்திலா வரப்போகின்றார்? இந்த வீதி இருக்கும் நிலை தெரியாமல்......ஏன் நீங்கள் பயப்படுகிறீர்கள்? நீங்கள்கூட உங்கள் தோழி பேசியதை ஆமோதிப்பதாகத் தெரிகின்றது. அதோ அந்த ஆட்டுக்குட்டி குறுக்கே வராதிருந்தால் நான் இந்தப் பக்கமாக வெட்டியிருக்க மாட்டேன். ஓர் ஜீவனுக்கு இரக்கம் பார்த்தேன். அதனால்,

உங்கள் முன் தலைகுனியும்படி ஆயிற்று'' என்று திரும்பினான் சிவசங்கரன்.

''ஆமாம். இவர் பெரிய புத்தர், யேசு பரம்பரையில் வந்தவர். ஆட்டுக்குட்டிக்காக இரங்கினாராம். செய்வதையும் செய்துவிட்டுக் கதையளக்கின்றார்'' என்றாள் வசுமதி.

''சரி. வேண்டுமெனச் செய்ததாக நீங்கள் நினைத்தால் அதற்கு நானென்ன செய்வது? இல்லை நீங்கதான் என்ன செய்ய முடியும்?''

''ஆண்பிள்ளை என்ற துணிவுதானே உங்களுக்கு. மிஸ்டர்! நாங்கள் பெண்கள்தான். ஆனால், எங்களிடம் வாலாட்டினால் ஒட்ட நறுக்கி விடுவோம்'' என்று கறுவினாள் வசுமதி.

''வசுமதி கொஞ்சம் பேசாமலிரேன். அவர்தான் மன்னிப்புக் கேட்டிட்டாரே. ஆட்டுக்குட்டிக்கு இரக்கம் பார்த்ததினால்தான் இப்படி நடந்திட்டதாய் கூறினாரே. அப்புறம் ஏண்டி பேசுறாய்?'' வசுமதியைச் சாந்தப் படுத்தினாள் உமாதேவி.

''ஆட்டுக்குட்டிக்கு இரக்கம் பார்க்கிறவங்க மனிதருக்குப் பார்க்கவில்லையே? வெள்ளாடு நனையுதென்று வேங்கைப்புலி அழுததாம். எனக்கு வாற ஆத்திரத்துக்கு......''என்று பற்களைக் கடித்தாள் வசுமதி.

''என்னம்மா செய்வாய்?''

''செய்து காட்டவா?'' நான்கு பக்கமும் பார்த்தாள் வசுமதி.

''மிஸ்டர் நீங்கள் போங்கள். யாராவது பார்த்தால் வீண் வம்பாகி விடும்'' என்றாள் உமாதேவி.

''வலியவன், தான் செய்தது தவறாயினும் தவறில்லையென்று சத்தம் போட்டுச் சொல்வான். ஆனால், ஒரு ஜீவனுக்குக் கருணை காட்டியதினால் ஏற்பட்ட ஒரு தவறை நான் தவறு என்று ஒப்புக்கொண்டபொழுதும், கொஞ்சம் கூட மரியாதையின்றிப் பேசுகின்றீர்கள். இதனால், எனக்கொன்றும் குறைவில்லை'' என்று கூறிவிட்டு அவன்

திரும்பிய சமயம், ''தொப்'' என்ற சத்தத்தைத் தொடர்ந்து அவனுடைய காற்சட்டை, சேட்டையெல்லாம் சகதி நீர் தெறித்துப் பறந்தது.

''வசுமதி'' என்று அவள் கரங்களை இறுகப் பிடித்தாள் உமாதேவி.

கண நேரத்தில் நடந்து முடிந்துவிட்ட அந்த நிகழ்ச்சியினுல் ஒரு விஞடி தடுமாறிப்போய் விட்டான் சிவசங்கரன். அவள் வெள்ளத்துக்குக் கல்லால் அடித்திருக்கிருள் என்பதை உணர்ந்து கொண்டான். அவன் இதழ்களில் குறுநகை மலர்ந்தது. ''தாங்கியூ மிஸ்'' என்று கூறிவிட்டு ஓரடி முன்வந்து, ''உங்களுக்கு ஆத்திரம் தீராவிட்டால் இன்னெரு கல் எடுத்து அடியுங்கள்'' என்ருன்.

''மிஸ்டர்! பிளீஸ் நீங்கள் போங்கள்'' என்று மன்ருடிஞள் உமாதேவி.

''நோ நோ, மன்னிக்கும் சுபாவம் மனிதர்களுக்கு மட்டுமே உரியது. சொல்லில் காட்டுவதைவிடச் செயலில் காட்டுவதுதான் மனிதத் தன்மை. நாய் கடித்தால் அதைத் திருப்பிக் கடிப்பவன் மனிதனுக இருக்க முடியாது. ஒரு ஜீவனுக்குக் கருணை காட்டினேன். அது தவருு? அதனுல் தெரியாமல் ஏற்பட்ட சிறிய தவறுக்கு இப்படிப் பழி வாங்குவீர்கள் என நான் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை'

''ஆஹா! நன்ருகக் கதைக்கத் தெரிந்தவர்கள் எதைத்தான் சொல்லமாட்டார்கள். காரிலே போகிறவர்கள் மற்ற உயிரைப்பற்றிக் கவலைப்படுகிறதாய் நான் அறிந்ததில்லை. காருக்குச் சேதம் வருமே என்ற கவலையில் ஜீவ இரக்கம் காட்டினுராம்'' வசுமதி உறுமினுள்.

''அம்மா தாயே! நீங்கள் நினைக்கும் மனிதர்களும் உங்களைப்போல இந்தப் பூமியில் வாழத்தான் செய்கிருர்கள். ஆனுல், நான் அப்படிப்பட்டவனில்லை. என் கார் நொருங்கி இருந்தாற்கூடக் கவலைப்பட்டிருக்க மாட்டேன். அதெல்லாம் உங்களுக்குத்தான் ஏன்? ஆனுல், ஒன்றுமட்டும் சொல்லுறன். இந்த ஆடை போனுல் இன்

ென்று வாங்கி விடலாம். ஆனால், மானம் போனால் அதைத் திரும்பி வாங்கிவிட முடியாது'' என்று கூறி விட்டுக்காருக்குள் சென்று அமர்ந்து 'ஸ்ராட்' செய்தான்.

''மிஸ் என்னைப்போல எல்லோரையும் நினைத்து விட்டால் நீங்கள் வாழ்க்கையிலே மிகவும் கஷ்டப்பட நேரிடும். கருணைக்கு இடமில்லையாயினும், அது மனிதர்கள் எல்லோருக்கும் வந்துவிடாது. நான் பணிந்து செல்வதால் என்னைக் கோழை என்றோ பலவீனன் என்றோ நீங்கள் நினைத்து விடலாம். எதற்கும் தெய்வம் என்ற ஒன்றிருக்கே. அந்த உண்மைக்கு மதிப்பளிப்பவன் நான். மீண்டும் சொல்லுறன்; தெரியாமல் செய்த தவறுக்காக மன்னித்து விடுங்கள்'' என்று கூறிவிட்டுச் சென்றான். அவனுடைய கார் சென்று மறையும்வரை கலங்கிய கண்களையே துடைக்காமல் பார்த்துக் கொண்டு நின்றாள் உமாதேவி.

வசுமதியின் செயலால் அவன் சீறிச் சினந்து பேசுவான், அவள் செய்த அதே செயலை அவனும் செய்யலாம் என்றெல்லாம் பயந்து போய் நின்ற உமாதேவிக்கு அவன் கூறிய வாக்கியங்கள், அவன் செயல் அனைத்துமே பிரமிப்பூட்டுவனவாக இருந்தன. அதுமட்டுமன்றி அவன் காரில் ஏறியிருந்து கூறிய அறிவுரைகள், வாழ்க்கையில் நன்கு பக்குவ நிலையடைந்த பண்பாடுடைய ஒரு அனுபவஸ்தனால் மட்டுமே கூறக்கூடியதாகும். அவனோ இளைஞன். செய்யக்கூடாத காரியங்களைக்கூடத் துணிந்து செய்யக் கூடிய இளமைப் பருவம். அந்நிலையிலும் எவ்வளவு பணிவு, அடக்கம், தன்னம்பிக்கை, பொறுமை இப்படியும் ஒரு ஆண்மகன் இருக்க முடியுமா என்று இது வரை காலமும் நினைத்தவளுக்கு, ஏன் இல்லை, நான் இருக்கின்றேன் என்று கூறிவிட்டுச் செய்வது போலல்லவா அவன் நடந்து கொண்டான்.

''உமா! நீ ஏண்டி கலங்கி நிற்கின்றாய்''? என்றாள் வசுமதி.

''அவன் மனிதன்தானே என்று சிந்திக்கின்றேன்''

''ஏன்''

''ஏனு? நீ செய்த செயலுக்கு நானுயிருந்தால் கன்னத்தில் அறைந்து அனுப்பியிருப்பேன். அவன் யேசு நாதர் கூறியதுபோல் இன்னொரு தடவை வேண்டு மானுலும் கல்லால் அடியென்ருனே. எனக்கு நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாக வேண்டும்போல் இருந்தது. நீ வீருப்பாய் பேசினுயே. அதற்கு அவன் சொன்ன பதில்... நினைக்கவே உள்ளம் கூசுது. நீ செய்த தவறுக்கு, பிராயச் சித்தமாக இந்த வெள்ளத்தில் விழுந்து எழுந்தாலும் பர வாயில்லைப் போலிருக்கு''

''உமா, என்னை மன்னிச்சிடடி. ஏதோ ஒரு வேகத் தில் நான்...''விக்கலெடுத்து அழுதாள் வசுமதி.

''உனக்கு எப்பவுமே முன்கோபம். சரி சரி, வா...... வீட்டுக்குத் திரும்பிப்போய் உடை மாற்றிக்கொண்டு புறப்படுவோம்'' என்று கூறியபடி நடந்தாள் உமாதேவி.

## 2.

பூநகரி கனிஷ்ட சைவத் தமிழ்க் கலவன் பாட சாலையில் தலைமை ஆசிரியர் தம்பித்துரை, வட்டாரக் கல்வி அதிகாரியின் வரவை எதிர்பார்த்துக் காத்து நின்ருர். மணி பதினென்ருகி விட்டது. அதே பாடசாலை யில்தான் உமாதேவி, வசுமதி ஆகியோரும் உதவி ஆசிரி யர்களாக இருந்தார்கள். மொத்தம் பதினெரு ஆசிரி யர்கள் அப்பாடசாலையில் கடமை ஆற்றினுர்கள். அவர் களில் நான்கு பேர் பெண்கள். அதிலும், இருவர் கல் யாணமாகாதவர்கள். தலைமை ஆசிரியர் தம்பித்துரை கண்டிப்பு நிறைந்தவர். கண்ணியமிக்கவர். கடமை உணர்ச்சி உள்ளவர். பின் தங்கிய கிராமத்தில் அந்தப்

பாடசாலை நல்ல நிலைமையில் இயங்கியதன் காரணம் அவர் என்றே கூற வேண்டும். அந்தக் கிராமத்து மக்கள் மத்தியில் ஏதாவது சண்டை சச்சரவு தோன்றினுல்கூட தம்பித்துரை வாத்தியார் சென்று மத்தியஸ்தம் வகித்துச் சமாதானம் செய்து வைப்பார். இதன் காரணமாக அவர் அந்தப் பாடசாலையில் பல வருடங்களாக நிலைத்து நிற்கும் ஒருவராகி விட்டார். சாதாரண உதவி ஆசிரியராக வந்தவர் தலைமை ஆசிரியராகவும் தொடர்ந்து எட்டாண்டுகள் பதவி வகித்து வருகின்றுர்.

''இன்ஸ்பெக்டர் வரமாட்டார் போலிருக்கே'' என்று கேட்டபடி அவருக்குச் சமீபமாக வந்து நின்ருள் வசுமதி. அதே சமயம் உமாதேவியும் அங்கு வந்து சேர்ந்தாள்.

''ஏன் சார் நாங்கள் எல்லோரும் ரெடியாக இருக்கின்ருேம் என்று கேள்விப்பட்டிருப்பாரோ இன்ஸ்பெக்டர்? சில சமயம் அவர் வராதுபோய் விடலாம் இல்லையா?'' என்ருள் உமாதேவி.

''உங்கள் கதைகளைக் கேட்டால் சிரிப்புத்தான் வருகின்றது. அவர் வந்தாலும் சரி, வராது விட்டாலும் சரி எமக்கு ஒன்றுமில்லை. ஆனுல், இந்தப் பகுதிக்கு இப்பொழுது புதிய ஆள் ஒருவர் வந்திருக்கின்றுர். பழைய ஆள் என்ருல் அவருக்கு எமது பாடசாலை நிலைமை தெரியும். வராமலும் விட்டிடுவார். ஆனுல், இப்ப வந்திருப்பவனே இளம் பொடியன். கண்டிப்பான பேர்வழி. நிச்சயம் வருவான் பாருங்களேன்'' என்று அவர் கூறி முடிப்பதற்குள், காணி அபிவிருத்தி அதிகாரி ஒருவரின் மோட்டார் சைக்கிள் ஒன்று பாடசாலை வளவினுள் நுழைந்து கொண்டிருந்தது.

''யாரோ வருகின்ருர்கள். நீங்கள் வகுப்புகளுக்குப் போங்கள்'' என்ருர் தலைமை ஆசிரியர்.

அவர்கள் வகுப்புகளுக்குச் சென்ற அதே சமயம், காணி அபிவிருத்தி இலாகா அதிகாரிக்குப் பின்புறம்

இருந்து வந்த வட்டாரக் கல்வி அதிகாரி மோட்டார் சைக்கிளை விட்டு இறங்கினார்.

''வணக்கம் சார். எங்கே காரைக் காணோம்?'' என்று முகமன் கூறி வரவேற்றார் தலைமை ஆசிரியர்.

''அது பெரிய கதை. குறிப்பிட்ட நேரத்துக்கும் பிந்தி விட்டேன். ஹலோ! என்னை இங்கே கொண்டுவந்து சேர்த்தமைக்கு மிக நன்றி'' என்று கூட்டி வந்த காணி அபிவிருத்தி இலாகா அதிகாரிக்கு விடை கொடுத்து அனுப்பிவிட்டு, தலைமை ஆசிரியரின் அறைக்குள் சென்றார் அந்தக் கல்வி அதிகாரி.

பாடசாலையின் அலுவல்களைக் கவனித்து ஆவன செய்த பின்பு, ''அப்பாடா இன்றைய பிரச்சினைகளை ஒருவாறு முற்றுப்பெற்றன'' என்றார் இன்ஸ்பெக்டர்.

''வகுப்புகளைப் பார்க்கலாமே'' என்றார் தலைமை ஆசிரியர்.

''மாஸ்டர்! நான் உங்கள் பாடசாலைக்குப் புதிய வனாக இருக்கலாம். ஆனால், உங்கள் சேவை, நீங்கள் பாடசாலையை எப்படி வைத்திருக்கின்றீர்கள் என்ப தெல்லாம் நான் அறிவேன். உங்களுக்கு ஏதும் பிரச் சினைகள் இருப்பின் தெரிவிக்கவும்'' என்றார் கல்வியதிகாரி.

''எங்களுக்கு எதுவித குறையுமில்லை. ஆனாலும், சில அபிவிருத்தி வேலைகள் செய்ய வேண்டியுள்ளன. இதுபற்றி நான் பல தடவை எழுதியும் எதுவித கவனமும் எடுக் கப்படவில்லை. நீங்கள்......''

''தாராளமாகக் கூறுங்கள். நான் அதுபற்றிக் கவனம் எடுக்கின்றேன்'' என்று கூறினார்.

பாடசாலைப் பிரச்சினைகள்பற்றிப் பேசி முடிவான பின்னர், இருவரும் அந்தப் பக்கத்துப் பாடசாலை நில வரங்கள்பற்றி உரையாடிக் கொண்டிருந்தனர். அதே சமயம் வெளியே கார் வந்து நிற்கும் ஓசை கேட்டு இருவரும் எழுந்து வெளியே வந்தனர். காரிலிருந்து சாரதியும், ஒரு நடுத்தர வயதுடையவரும் இறங்கினர்.

அந்த நடுத்தர வயதுடைய விவசாயி ஓடிவந்து வட்டாரக் கல்வி அதிகாரியின் காலில் விழுந்து, ''ஐயா, ஐயா நீங்கள் நல்லாயிருக்கணும். உரிய நேரத்தில் எங்களைத் தெய்வம்போலக் காத்தீர்கள். ஒரு மணி நேரம் பிந்தி இருந்தாலும் என் மனைவி உயிர் பிழைத்திருக்கமாட்டாள் என்று டாக்டரே கூறினார். நீங்கள் மனைவி மக்களுடன் நீடூழி வாழணும்'' என்று ஒரு வாழ்த்து மடலே வாசித்து முடித்தான்.

''நல்லது. பிறருக்கு ஏற்படக்கூடிய ஆபத்துகளுக்கு இயன்றளவு உதவுவதுதான் மனித நீதி. அதையே நானும் செய்தேன். ஆண்டவனுக்கு நன்றி கூறப்பா. அதுவே போதும்'' என்று அவனை அனுப்பி வைத்தார் கல்வி அதிகாரி.

''என்ன சார் இது 'நாடகம்?'' என்று கேட்டார் தலைமை ஆசிரியர் தம்பித்துரை.

''மாஸ்டர்! இவனுடைய மனைவிக்குப் பிரசவ வேதனை கண்டிருக்கிறது. வீட்டிலேயே சுகமாகப் பிறக்குமென்று இருந்தார்கள். முடியவில்லை. நான் போன சமயம் காணி அபிவிருத்திக் கந்தோரடியில் நின்று இவன் குமுறி அழுது கொண்டிருந்தான். அதனால்தான் அந்த ஆபீசில் வேலை செய்யும் ஒருவரிடம் என் காரைக் கொடுத்து, இவனுக்கு உதவி செய்யுமாறு ஏற்பாடு செய்து விட்டு வந்தேன். அதற்குத்தான் இது...'' என்று திரும்பியவன், தன்னையே பார்த்துக்கொண்டு எல்லா ஆசிரியர்களும் அங்கு கூடி நிற்பதையும் கவனித்தான்.

அவன்தான் வட்டாரக் கல்வி அதிகாரி என்பதை அறிந்து கொண்ட உமாதேவிக்கும், வசுமதிக்கும் உதறல் எடுத்தது. அவர்கள் இருவரும் தூண் மறைவில் பதுங்கி நின்று கொண்டனர். அங்கே அந்த விவசாயி குமுறி அழுததைக் கேட்டே அவர்கள் ஓடி வந்தனர். அங்கு நின்றது வட்டாரக் கல்வி அதிகாரி என அவர்கள் சற்றும் நினைத்திருக்கவில்லை. தலைமை ஆசிரியர், ''சார்'' போட்டுக் கூப்பிட்ட சமயமே அவன்தான் கல்வி அதிகாரி என்று

உண்மை அவர்களுக்குத் தெளிவாயிற்று. எல்லோரும் குற்ற உணர்வுடன் மெல்ல மெல்ல வகுப்புகளுக்குத் திரும்ப முயன்றனர்.

''எங்கே திரும்பி விட்டீர்கள்? வாருங்கள். பின் தங்கியுள்ள கஷ்டமான பிரதேசங்களில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்குச் சில சலுகைகளை அளிக்கக் கல்வியமைச்சு உத்தேசித்துள்ளது. உங்களுக்கு ஏதாவது பிரச்சினைகள் இருப்பின் நேரடியாக என்னிடம் கூறலாம். என்னால் இயன்ற அளவு உங்களுக்கு உதவி செய்யக் கடமைப் பட்டுள்ளேன்'' என்று சிவசங்கரன் கூறியபொழுது, ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் மலர்ந்த முகத்துடன் அவனை நெருங்கித் தங்களுக்குள்ள அசௌகரியங்கள் பற்றிக் கூறினார்கள்.

''நல்லது, நான் இதுபற்றி உடன் கவனித்து நடவடிக்கை எடுக்கின்றேன். ஏன் மாஸ்டர்! நீங்கள் இது பற்றி எதுவும் கூறவில்லையே'' என்று தலைமை ஆசிரியரிடம் கேட்டார் கல்வியதிகாரி.

''இவைகள் சாதாரண விடயங்களாச்சே''

''சாதாரண விடயங்கள்தான் உடனுக்குடன் கவனிக்க வேண்டும். இது உங்களை மட்டுமல்ல; மாணவர்களின் வசதிகளையுமே பாதிக்கக் கூடியவை. நேரம் இரண்டு மணியாச்சே. நீங்கள் சாப்பாட்டுக்குப் புறப்படவில்லையா? உங்களை எல்லாம் நேரில் சந்தித்தது எனக்கு மிகவும் சந்தோஷம்'' என்று கூறிவிட்டுத் தலைமை ஆசிரியர் அறைக்குள் சென்றார் கல்வியதிகாரி.

அவன் திரும்பி நடந்தபொழுது, அவனை உற்று நோக்கினாள் உமாதேவி. அவனுடைய முதுகுப்புற ஆடைகளில் சகதிநீர் படிந்து காய்ந்துவிட்ட அடையாளம் பளிச்சிட்டுத் தெரிந்தது. அதுபற்றி அவன் அக்கறைப்பட்டவனாகத் தெரியவில்லை. தங்களைப் பார்த்தும் தெரிந்து கொள்ளாதவன் போன்று காலையில் அப்படி ஒரு சம்பவம் நடந்ததென்ற நினைப்பே இல்லாமல் சென்று விட்டதை நினைக்கும்பொழுது சுருப்பும் பயமாக இருந்தாலும்

அவனுடைய பெருந்தன்மையை நினைத்து...!அவன் நினைவு அவள் மனத்தில் வேரூன்றிவிட்டது.

எல்லோருடைய மனத்திலும், எல்லோரும் இடம் பிடித்துவிட முடியாது. சிலருக்கு மட்டும்தான் அத்தகைய பெறுபேறு கிடைக்கின்றது. அதுவும் உமாதேவி போன்ற சுயகௌரவமும், நான் என்ற அகங்காரமும் உள்ள பெண்களின் மனதிலோ இடம் பெறுவதென்றால் அது அரிதிலும் அரிது. அன்று காலையில் நடந்தவை, அவன் கூறியவை யாவும் அவள் மன அரங்கில் திரும்பவும் ஒரு முறை நடைபெற்று முடிந்தபொழுது, ''உமா! இந்த மனுஷன் எவ்வளவு நெஞ்சழுத்தக்காரன் என்று பார்த்தியா. எனக்கு அவரைப் பார்த்தது முதல் உடலே நடுங்கிக் கொண்டிருந்தது'' என்றாள் வசுமதி.

''ஏண்டி நடுங்கினாய்? அப்போ வந்தவரைவிட வேறு மாதிரியா வந்தார்? அந்தஸ்தைக் கண்டவுடன் நடுங்குகின்றாய். ஆனால், ஆளுக்கு மதிப்புக் கொடுக்க மாட்டேன் என்கிறீர்கள். இதுதாண்டி சமூகம். வசுமதி, நாங்கள் திரும்பிப்போய் சேலை மாற்றிக்கொண்டு வந்தோம். அந்த ஆள் அப்படியே வந்திருக்கிறார் பார்த்தியா?''

''அது சரி உமா, அந்த ஆள் இதைவிட இன்னும் மோசமான இடத்துக்கு எங்களை மாற்றிவிட முயற்சிக்கிறாரோ என்னவோ?''

''உனக்கு எப்பவுமே நல்ல புத்தி கிடையாதடி'' என்று கூறிவிட்டு, உமாதேவி வீட்டுக்குப் புறப்பட ஆயத்தமான அதே வேளையில், திருமதி செல்லையா அங்கு வந்தாள்.

''ஏன் ரீச்சர்! புதிய இன்ஸ்பெக்டர் எப்படி? அது சரி, ரீச்சர் அந்த ஆள் ஏன் வந்து...'' என்று கதையை வளர்க்க முற்பட்டாள் வசுமதி.

''நல்ல பையன். வயதுக்கேற்ற குணமில்லை. மிகச் சாந்தம். என்ன இருந்தாலும் அவனுக்குத் தாராள மனசு'' என்று அந்த விவசாயிக்கு உதவியது முதல்

யாவற்றையும் நேரில் பார்த்தவள் போன்று கதையளந் தாள் திருமதி செல்லையா.

''மற்றவர்கள் சொல்வார்கள். ஆனால், செய்யமாட் டார்கள். இவர் சொல்லாமல் செயலில் காட்டுகிறார் இல்லையா ரீச்சர்?'' என்றாள் உமாதேவி.

''அதுதாண்டி அம்மா பாயின்ட்'' என்று கூறிச் சிரித்துக் கொண்டே வந்தவர்கள், தலைமையாசிரியரின் ஆபீஸ் அறைக்குச் சமீபமாக வந்தபொழுது உள்ளே தலைமை ஆசிரியரும், சிவசங்கரனும் உற்சாகமாகச் சிரிக்கும் சப்தம் கேட்டு நின்றனர்.

''தம்பி என்ன இருந்தாலும் நீங்கள் வீட்டுக்குப் போக மூன்று மணியாகி விடுமே. அதுவரை பசி பொறுக்குமா?'' என்றார் தம்பித்துரை.

''நாட்டிலே ஒருவேளை சாப்பாட்டுடன் எத்தனையோ உயிர்கள் வாழவில்லையா? நான் இப்படிப்பட்ட தொழில் செய்யப் புறப்படு முன்னரே இதற்கு ஏற்ற முறையில் பழகிக்கொண்டு விட்டேன். அதுமட்டுமல்ல, நான் உங்கள் வீட்டில் வந்து சாப்பிடுகின்றேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். அது நான் செய்யும் நல்ல காரியங் களுக்கு மாசு கற்பித்து விடுவதுடன், உங்கள் பெய ருக்கும் கெடுதியை உண்டாக்கி விடும். தம்பித்துரை மாஸ்டர் இன்ஸ்பெக்டருக்குக் காக்காய் பிடித்துத்தான் இப்படி எல்லாம் செய்வித்தார் என்று சிலர் பேச இடம் வைத்துவிடும். இல்லையா?''

''உண்மைதான் தம்பி. முன்பும் இப்படி ஒரு பழிச் சொல்லுக்கு ஆளாகியுள்ளேன். ஆனால், உலகம் பல தையும்தான் சொல்லும்...அதற்கெல்லாம்...!''

''மாஸ்டர்! இதில் தவறு எதுவும் கிடையாது. ஆனால், நான் எனது கடமைக்காக வந்தவிடத்தில் உங்கள் உபசரணைகளை ஏற்றுக் கொள்ளத்தான் மறுக்கி றேன். வேறு சந்தர்ப்பத்தில் நீங்கள் அழைக்காவிட் டாலும் நானே வந்து சாப்பிட்டு விட்டுத்தான் போவேன்'' என்று கூறிச் சிரித்தான்.

"நீங்கள் இங்கு வருமுன்னர் உங்களைப்பற்றி நான் கேள்விப்பட்டதெல்லாம்..." என்று கூறி நிறுத்திவிட்டு அவனைப் பார்த்தார் தலைமை ஆசிரியர்.

"கண்டிப்பு நிறைந்தவன். கர்வம் பிடித்தவன் என்று கூறியிருப்பார்கள். அதற்குக் காரணம் என் குடும்ப அந்தஸ்து. இந்த வயதில் இந்தப் பதவிக்கு நான் வந்த அதிர்ஷ்டம். பலருக்கு இதுதான் மன உளைச்சல். ஆனால், என்னைப் பொறுத்தளவில் நான் உண்மைக்கும், அன்புக்கும் அளிக்கும் மதிப்பு, போலிக்கும், அந்தஸ்து கௌரவங்களுக்கும் அளிப்பதில்லை" என்று கூறிவிட்டுப் புறப்பட்டான் சிவசங்கரன்.

"நான் கூறிய விடயம்..." வார்த்தைகளை இழுத்து நிறுத்தினர் தலைமை ஆசிரியர்.

"ஓ...அந்த இடமாற்றல் விடயம்தானே? நிச்சயமாகக் கவனிக்கின்றேன்"

அவன் காரில் ஏறிப் புறப்பட்டான். தலைமை ஆசிரியரின் விழிகள் பனித்து விட்டன. அதை உமாதேவி பார்த்து விட்டாள். அவர் அவனைத் தம்பி என்று அழைத்தபொழுதே அவர்களுக்கிடையில் ஏற்பட்ட நெருக்கம் எப்படிப்பட்டதாயிருக்க வேண்டும் என்று உணர்ந்து கொண்டாள்.

"ஏன் மாஸ்டர், அவரைப்பற்றி முன்னுக்குப் பயந்திட்டிருந்தீர்கள். இப்போ..." என்று சிரித்துக்கொண்டே கேட்டாள் உமாதேவி.

"தங்கச்சி, எல்லோரும் மனிதர்களாகப் பிறந்து விட்டாலும் அந்தப் பெருமை ஒரு சிலருக்குத்தான் கிடைக்கின்றது. அவர்களில் ஒருவன் இந்தச் சிவசங்கரன். பணக்கார வீட்டுப் பிள்ளையானாலும் தன்னை ஒரு பரம ஏழைபோல நினைத்துக் கொள்ளுகின்றான். அவ்வாறே நடந்தும் கொள்கிறான். நட்பும், தயையும், கொடையும் பிறவிக் குணம் என்பார்கள். அது அவன் பிறப்பினால் வந்தது. நல்ல குடும்பத்துப் பையன். அம்மா உமா!

அவன் என் மேலதிகாரி என்ற முறையில் நடந்துகொள்ள வில்லை. ஒரு தந்தையைப்போல நினைத்தே பழகினான். நானும் மனைவியும் சேர்ந்து பெற்றால்தான் பிள்ளையா? அவன் நடத்தையால், செயலால், என் பிள்ளை போன்ற ஓர் உணர்ச்சியை என் மனதில் தோற்றுவித்துவிட்டுச் சென்று விட்டான்'' என்றபொழுது உண்மையிலேயே அவர் விழிகளிலிருந்து நீர் பெருகியது.

இதுவரை காலமும் அவர் இவ்வாறு உணர்ச்சி வசப் பட்டதை அவள் கண்டதில்லை. அப்படிப்பட்டவரின் இத யத்தையே தொட்டுவிட்டுச் செல்லும் அந்த வாலிபன்!... நிமிடத்துக்கு நிமிடம் அவளின் இதயத்தில் அவனைப் பற்றிய நினைவுகள் தாவிப் படர ஆரம்பித்தன.

## 3.

மாலை வந்தது. அந்தப் பகுதியிலுள்ள வேறு பாட சாலைகளில் படிப்பிக்கும் ஆசிரியர்களும் வசுமதியின் வீட் டில் வந்து கூடத் தொடங்கினர். ஏதும் விசேஷம் நடந் தால் அந்த வட்டாரத்திலுள்ள ஒரே வகுப்பினர் தங் களுக்கு ஏற்பட்ட அனுபவங்களைப் பற்றி எடுத்துக்கூறி மகிழ்வது வழமையாகும். அன்றைய தினம் கல்வியதி காரி பாடசாலைகளுக்கு விஜயம் செய்தது பற்றிய புதினங் களைப் பரிமாறிக் கொள்வதற்காகச் சிநேகிதிகள் அங்கு கூடியிருந்தனர்.

கல்வி அதிகாரியாக வந்தவனே இளைஞன். பெரும் பாலும் இப்படியான வயதில் இந்தப் பதவிக்கு வருபவர் கள் மிகக் குறைவு. ஆனால், அவனுடைய படிப்பு, திறமை யாவையும் கொண்டு அதிர்ஷ்ட தேவதை அவனுக்கு அந்த அந்தஸ்தைக் கொடுத்துவிட்டாள். அவனைப்பற்றி ஒவ் வொருவரும் ஒவ்வொரு விதமாகக் கதைக்கலாயினர்.

ஆனால் எல்லோர் வாயிலும் அவனைப்பற்றிப் புகழ்ச்சியே வெளிவந்தது.

''பலரது புகழ்ச்சிக்கும், மதிப்புக்கும் உரிய இவன் எனக்குச் சொந்தமாகிவிட்டால்...'' என்ற நினைவிலே தவித்தாள் வசுமதி. பெரும்பாலும் அவனுக்குத் திருமண மாகி இருக்காதென்று அங்குள்ளவர்கள் கூறக்கேட்ட பொழுதுதான் இந்த நினைவு வசுமதிக்குத் தோன்றியது.

அதேசமயம் உமாதேவியின் மனதில், ''தான் இது வரை கற்பனை செய்த இலட்சிய புருஷன் சிவசங்கரனாக ஏன் இருக்கக்கூடாது'' என்ற நினைவு எழுந்தது. அவனைப் பற்றி அன்று எண்ண முற்பட்ட சமயமே அந்த நினைப்பும் தோன்றியது. இதுவரைநாள் அவள் எந்த ஒரு ஆண் மக னைப் பற்றியும் சிந்தித்தது கிடையாது. அதே வேளையில் தனக்கு வரும் கணவன் எப்படிப்பட்டவனாக இருக்க வேண்டுமென்பது பற்றி அவள் மனதில் அசைக்க முடியாத ஓர் தீர்மானமும் இருந்தது. தான் மணக்க இருப்பவன் பிற பெண்களை மனத்தால் நினைத்திராதவனாகவும், பிற பெண்களோடு பழகி — உறவு கொண்டிராதவனாகவும் இருக்க வேண்டுமென்ற தீர்மானம் அவள் உள்ளத்தில் வளர்ந்திருந்தது. அந்த உறுதி பூதாகாரமாக உரு வெடுத்து வளர்ந்தபொழுது, ஓர் கற்பனைக் கதாநாயகன் உருவமற்ற நிலையில் அவள் நினைவில் நின்றிருந்தான். சிவ சங்கரனைப் பார்த்தது முதல் அவளின் கற்பனைக் கதா நாயகன் ஓர் உருவம் பெற்றுவிட்டான்.

சிந்தனையில் லயித்திருந்த உமாவைச் சிநேகிதிகள் சீண்டினர். ''ஏன்டி உமா, பிடித்து வைத்த கல்லாட்டம் பேசாமல் இருக்கின்றாய்? அந்த இன்ஸ்பெக்டரைப் பார்த்து மயங்கிவிட்டாயா?'' என்றாள் கனகா என்ற குறும்புக்காரி.

''மயக்கமில்லையடி கனகா, ஏக்கம்.'' என்றாள் உமா.

''என்ன?'' என்று எல்லோரும் அவள் பக்கம் திரும் பியபொழுது, அன்று காலையில் நடந்தவற்றை விபரமா கக் கூறினாள் உமாதேவி.

''அவன் சட்டையைப் பார்த்தபொழுதே எனக்குக் கேட்கவேண்டும்போலிருந்தது, ஆனால், எப்படிக் கேட்பது என்று பயந்துதான் கேட்காமல் விட்டேன்'' என்றாள் கனகா.

அவர்களுடைய சம்பாஷணை அன்று இரவுவரை நீடித்தது.

## 4.

''ஒருவன் எவ்வளவுக்கெவ்வளவு நிறைவு பெற்றவனாக இருக்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு பிறர் குறைகளைப் பொறுத்துக் கொள்வதில் அன்பும் அமைதியும் காட்டுவான்'' என்று ஓர் அறிஞர் கூறிய வார்த்தைகளை அடிக்கடி மனதில் நினைத்து நிறைவுபெறுபவன் சிவசங்கரன். குற்றங்கள் பலவீனத்தின் காரணமாகவே உருவாகின்றன என்று அவன் கருதியதால் தன்னைத்தானே பலவீனனாக்கிக்கொள்ள அவன் என்றும் விரும்பியதில்லை. மன அமைதிக்கு மருந்தாக அமைவது நல்ல நூல்களே என்று, லீவு கிடைக்கும் நேரங்களில் அறிஞர்களின் நூல்களில் மூழ்கிக் கிடப்பான் சிவசங்கரன். அன்று லீவு நாளாகையினால் ஏதோ ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருக்கும்பொழுது, ''சித்தப்பா, உங்களைப் பார்க்க யாரோ வந்திருக்கிறாங்கள்'' என்றான் சிறுவன் குமார்.

''என்னைப் பார்க்கவா? உள்ளே கூட்டிவாவேன் குமார்'' என்றான் சிவசங்கரன்.

சில நிமிடங்களின் பின்னர் குமார் முன்னே வர, அவனைத் தொடர்ந்து அந்த அறைக்குள் நுழைந்தாள் உமாதேவி. அவளைப் பார்த்ததும் முதலில் அதிர்ச்சி அடைந்துபோன சிவசங்கரன், தன்னைச் சமாளித்துக்

கொண்டு, "குட்மோனிங், வாருங்கள்'' என்று வர வேற்ருன்.

''குட்மோனிங் சார்'' என்று புன்னகை பூர்த்தாள் உமாதேவி.

பூரணை நிலவைப் போன்ற வட்டமான முகத்தினைத் தவிர்த்து, ரோஜா மலர்களைக் கொட்டி அவள் மலர் மேனியை மூடி மறைத்திருக்கோ என்னும்படியாக, மலர்ந்த ரோஜாக்கள் நிறைந்த ஒரு காஷ்மீர் பட்டுச் சேலையை அவள் அணிந்திருந்தாள். அழகாகத் தலையை வாரிக் கொண்டை போட்டு மல்லிகைப் பூவும், கனகாம்பரமும் சேர்த்துக் கட்டிய மாலையை கொண்டையைச் சுற்றி அணிந்திருந்தாள். மல்லிகை மொட்டுக்களை நினைவூட்டும் வெண்பற்கள். அவற்றைத் தழுவி நிற்கும் அதரங்கள்—நறுக்கி வைத்த சிவப்பு ஆப்பிள் துண்டங்களை நினைவூட்டின. ''தவத்தின் உருவமாய் வந்ததோ இத் தையல்'' என்று யாரோ ஒரு தவமுனி கூறிய பெண்ணைப் போலக் காட்சியளித்த உமாதேவியை அவன் முதல் முறை பார்த்த சந்தர்ப்பம் வேறு. இன்ரூே அவள் உள்ளக் களிப்புடன் மனப் பூரிப்பாக வந்திருக்கிருள் என்பதை அவள் அங்கமே எடுத்துக் காட்டியது. காலையில் மலர்ந்த ரோஜாவின் பசுமையும், அழகும் அவள் முகத்தில் பிரதிபலிக்க அவனையும் அவள் உற்று நோக்கினுள்.

''உட்காருங்கள்'' என்ருன் சிவசங்கரன்.

''நன்றி சார். எங்கே என்னை உட்கார் என்று சொல்லாமல் விட்டுவிடுவீர்களோ என்று பயந்துவிட்டேன்'' என்று கூறிச் சிரித்தாள் உமாதேவி.

''ஏன் அப்படி நினைத்தீர்கள் ரீச்சர்?''

''அன்றைய கோபத்தில் என்னை...''என்றவள், அவன் சிரிப்பில் மயங்கி அவனையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

''ரீச்சர்! நீங்கள் என்னைப்பற்றித் தவருக நினைத்திருப்பீர்களானுல் அதை இனி மறந்துவிடுங்கள். அன்றைய சம்பவம் அன்ரூேடு எனக்கு மறந்துபோயிற்று. நீங்கள் அதை ஞாபகம் வைத்திருந்தால் அது உங்களைப்

பொறுத்தது. ஆனால் நான் ஒன்றுமட்டும் சொல்வேன். அந்த மற்றப் பெண் பழிவாங்கும் மன இயல்புகொண்டவள்.''

''நீங்கள் போனபின்பு அவள்கூட மிகவும் வருந்தினாள். அவளின் விடயமாகத்தான் இப்போ வந்தேன். அவளும் என்னுடன் வருவதாக இருந்தாள். ஆனால், பிரயாணம் செய்யமுடியாத நிலை. ஆகவேதான் நான் மட்டும் வந்தேன்.''

''நல்லது. நீங்கள் வந்ததில் எனக்கும் மகிழ்ச்சி. உங்கள் பாடசாலையில்தான் 'தமிழ்த்தின விழா'வுக்கான ஏற்பாடுகள் செய்துகொண்டிருக்கிறேன். அதற்கு உங்கள் உதவி எனக்குத் தேவை. உதவி செய்வீர்களென எதிர்பார்க்கின்றேன்.''

''நிச்சயமாக உங்களுக்காக மட்டுமன்றி, எங்கள் கடமையும் சேர்ந்திருக்கே'' என்று கூறிச் சிரித்தாள் உமாதேவி.

''உங்கள் பெயர் உமாதேவிதானே?''

''ஜேஸ் சார்.''

''உங்கள் சிநேகிதிக்கு அடுத்த மாதமே அவளின் சொந்த ஊருக்கு மாற்றம் கிடைக்கும். ஆனால், ஒரு சிறந்த விஞ்ஞான ஆசிரியையை என் வட்டாரத்தில் இருந்து இப்பொழுது இழக்க நான் தயாராக இல்லை. அதற்காக நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும்.''

''என்னை...''

''ஆமாம். அடுத்த வருட ஆரம்பத்தில் பயிற்சிக் கல்லூரியால் புதிய ஆசிரிய நியமனங்கள் நடைபெறும் வரை நீங்களும் இங்கேயே இருப்பதை நான் விரும்புகின்றேன்.''

''உங்கள் விருப்பம் அதுவானால் நான் கவலைப்படவில்லை.''

''கோபமில்லையே ரீச்சர்?'' என அவன் கேட்டபொழுது' உமாதேவி கலகலவெனச் சிரித்தாள்.

அதேசமயம் உள்ளே நுழைந்த குமார், ''ஏன் சித்தப்பா நீங்கள்தான் இன்ஸ்பெக்டராச்சே. இந்த ரீச்சர் கோபித்து என்ன செய்யமுடியும்?'' என்றான்.

அவன் கேட்டவிதம் உமாதேவியை மட்டுமன்றி சிவசங்கரனையும் சிரிக்க வைத்துவிட்டது.

''குமார்'' என்று கோபிப்பவன்போல் அழைத்தான் சிவசங்கரன்.

''ஏன் சித்தப்பா?''

''உனக்கு எத்தனை தடவை சொல்லியுள்ளேன், நான் யாருடனாவது கதைக்கும்பொழுது குறுக்கே பேசக்கூடாது என்று.''

''அதுசரி சித்தப்பா, நீங்கள்தானே சொன்னீங்கள் நியாயத்தை யார் வேண்டுமானாலும் கேட்கலாம் என்று. இல்லையா சித்தப்பா?''

''அட போக்கிரி! நான் கூறியதை எனக்கே கூறுகின்றாயா?''

''நான் போகிறேன் சித்தப்பா.''

''போய்ப் பாட்டியிடம் சொல்லி ரீச்சருக்கு...''

''அதெல்லாம் அப்பவே சொல்லிவிட்டேன்.''

''குட் போய்'' என்று அவனைத் தட்டிக்கொடுத்து அனுப்பினான் சிவசங்கரன்.

''வயதுக்கு மீறிய அறிவு. உங்கள் அண்ணன் மகனா?'' என்றாள் உமாதேவி.

''ஆமாம். அவன் வயிற்றில் இருக்கும்பொழுதே அண்ணன் இறந்திட்டார். பிறந்து மூன்றாம் ஆண்டில் தாயும் இறந்திட்டாள். இப்பொழுதெல்லாம் நானும் அம்மாவும்தான். அதனால்தான் கொஞ்சம் செல்லமாக இருக்கின்றான்'' என்று கூறியபொழுது அவன் விழிகள் கலங்கின.

''என்ன இருந்தாலும் இந்த அறைக்குள் வந்து போய்க் கொண்டிருந்தாலே அறிவு தானாக வளருமென்பதை இந்தச் சில நிமிடங்களிலேயே நான் உணர்கிறேன்'' என்றாள் உமாதேவி.

அதே சமயம் இரண்டு கோப்பைகளில் ஆவி பறக்கும் கோப்பியுடன் உள்ளே நுழைந்தாள் செளந்தரம்மாள். பார்த்தவுடன் கையெடுத்துக் கும்பிடவேண்டும் என்று நினைக்கக்கூடிய புனித உருவம். புன்னகை பூத்த முகம். வயதானுலும் குரலில் ஒருவித கனிவு.

''எடுத்துக்கம்மா''— தட்டிலிருந்து ஒரு கோப்பையை எடுத்து நீட்டினுள் செளந்தரம்மாள். உமாதேவி அதை மிகப் பணிவுடன் வாங்கிக் கொண்டாள்.

''ஏன் பாட்டி ரீச்சருக்குக் கோப்பி கொடுக்கலாம். ஆனுல், சித்தப்பாவுக்கு இரண்டாம் தடவை ஏன் கொடுக்கணும்? நான் ஒருத்தன் இருக்கிறது உங்களுக்கு ஞாபகம் இல்லையா?'' என்முன் அங்கே வந்து நின்ற குமார்.

''அடேயப்பா பெரிய மனுஷா! எனக்கு இல்லையடா உனக்குத்தான்டா. எடுத்துக்கோ'' என்முன் சிவசங்கரன்.

''சித்தப்பா, எப்ப பார்த்தாலும் பாட்டிக்காகத் தான் பேசுறீங்க; எனக்காக ஒருமுறையாவது பேசக் கூடாதா?''

''டேய் குமார்! தெய்வம்தான் நமக்குத் துணை. கண்ணுக்குத் தெரியாத தெய்வத்தைவிடக் கண்ணுக்குத் தெரியும் தெய்வம் யார் என்று சொன்னேன்?''

''தாய்.''

''அப்படியானுல் எங்க வீட்டில் பாட்டிதானே?''

''ஆமாம் சித்தப்பா. என்னை மன்னிச்சிடுங்கோ'' என்று கூறிவிட்டு, சிவசங்கரனுடைய கழுத்தைக் கட்டி அணைத்தான் குமார்.

''பார்த்தியாம்மா. இவனை மேய்க்க இந்த வீட்டில் யாராலே முடியும்?'' என்முள் செளந்தரம்மாள்.

''இப்படி ஒருவன் வீட்டிலிருந்தால் பொழுது போவதே தெரியாதிருக்கும். எனக்கு அவனை மிகவும் பிடிச்சிருக்கு'' என்முள் உமாதேவி.

''நல்லதாய்ப் போச்சு. இவனை நீங்களே கூட்டிப் போங்களேன் ரீச்சர்'' என்முன் சிவசங்கரன்.

''என்ன குமார் என்னோடு வர்ரீங்களா?'' என்றாள் உமாதேவி.

''ஏன் ரீச்சர் நீங்கள் இங்கே வாங்களேன்'' என்றானோ இல்லையோ எல்லோரும் சிரித்துவிட்டனர்.

''சரி சேர், நான் சென்றுவருகிறேன்'' என்று கூறிவிட்டு, செளந்தரம்மாளிடமும் குமாரிடமும் விடை பெற்றுப் புறப்பட்டாள் உமாதேவி.

''டாடா ரீச்சர்'' என்று கையாட்டிச் சிரித்தான் குமார். அவளை வாசல்வரை கூட்டிவந்து வழியனுப்பி வைத்தாள் செளந்தரம்மாள். அதுமட்டுமல்ல, அவள் உருவம் கண்ணுக்கு மறையும்வரை பார்த்துக்கொண்டு நின்றவள், ஏன்டா குமார், இந்த ரீச்சர் எங்கள் வீட்டுக்கு வந்தால் உனக்குப் பிடிக்குமா?'' என்றாள்.

''ஏன் பாட்டி நாங்கள் கூப்பிட்டால் வருவார்களா?''

''உனக்கு அவர்களைப் பிடிக்குமா?''

''எனக்கு பிடிச்சிருக்கோ இல்லையோ உங்களுக்குப் பிடிச்சுதா?''

''மகாலட்சுமி மாதிரி அழகாய் இருக்காள்.''

''புற அழகைப் பார்த்து மயங்கக் கூடாதென்று சித்தப்பா அடிக்கடி சொல்வாரே பாட்டி.''

''போடா மடையா. நீயும் அவனோடு சேர்ந்து உதவாக் கரையாய்ப் போனாய்'' என்று சீறினாள் செளந்தரம்மாள்.

''என்னம்மா சண்டை?'' என்று கேட்டுக்கொண்டே அங்கு சிவசங்கரன் வந்தான்!

''பாட்டி, அந்த ரீச்சரின் அழகிலே மயங்கிப்போய் நிற்கிறாங்கள், இல்லையா பாட்டி?'' என்று கூறிக்கொண்டே உள்ளே ஓடினான் குமார்.

''ஏன்டா சங்கர், இந்தப் பெண் சாருமதி மாதிரி இல்லே?''

''ஆமாம் அம்மா. அன்று முதலில் பார்த்தபொழுது நானும் அப்படித்தான் நினைத்தேன். ஆனால்...''

"சங்கர், இந்தப் பெண்...ணை உனக்குப் பிடிச்சிருக்காடா?"

"என்ன பாட்டி என்னைக் கேட்பது போலவே சித்தப்பாவையும் கேட்கிறீங்கள்."

"நீ வந்திட்டியா? போடா உள்ளே" என்று குமாரை உள்ளே துரத்திய சௌந்தரம்மாள், "சொல்லடா சங்கர். இவனுக்கும் அவளைப் பிடிச்சிருக்கு. அவளைப் பார்த்தால் நல்லவளாயும் தெரியுது."

"அம்மா, உங்களுக்குப் பிடிச்சால் சரிதான்."

"அவள் எந்த ஊர் என்று தெரியுமா?"

"இணுவில் என்று சொன்னாள். தாய், தகப்பனிருக்கின்றார்கள். அண்ணன்மார் கல்யாணம் செய்திட்டாங்கள். இவள் ஒருத்திதான் இருக்கின்றாள்" என்று தம்பித்துரை மாஸ்டர் இவளைப்பற்றிய விபரங்கள் கூறியுள்ளார். அவர் அந்த வீட்டோடு கொஞ்சம் ஈடுபாடுள்ளவர் போலத் தெரியுது."

"அவர் இங்கே வரமாட்டாரா?"

"அம்மா, எதற்கும் அவசரப்பட்டு முடிவு செய்ய வேண்டாம். எப்போதாவது அவர் இங்கு வருவார். வரும்போது விசாரித்துச் செய்." என்று கூறிவிட்டுச் சென்றான் சிவசங்கரன்.

சௌந்தரம்மாளின் உள்ளத்தில் ஒரே குதூகலம். அந்தக் கல்யாணமே நடந்து முடிந்துவிட்டது போன்ற ஒருவித பிரேமை. கல்யாணத்துக்கு எத்தனையோ பேர் கேட்டபொழுதெல்லாம் தட்டிக் கழித்து வந்தவன், "உங்கள் இஷ்டப்படியே செய்யுங்கள்" என்று கூறியதனால் அவளை அவனும் விரும்புகின்றான் என்பதுதான் பொருள். இதை உணர்ந்த சௌந்தரம்மாள், எப்படியாகிலும் விரைவில் அந்தத் திருமணத்தை முடித்துவிட முயன்றாள். மற்றத் தாய்மாரைப் போல சீதனம், பொருள், வரிசை என்று அவள் அங்கலாய்க்கவில்லை. தன் குடும்பத்துடன் ஒத்துப்போகக் கூடிய ஒரு பெண் மருமகளாக வரு

வதையே விரும்பினுள்: அந்தப் பெண் உமாதேவியாக இருக்க வேண்டுமென்று தனக்குள் முடிவு செய்துகொண்டாள்.

## 5.

வழமையான நேரத்துக்குப் பாடசாலைக்கு வந்த தலைமையாசிரியர் தம்பித்துரை, உமாதேவியின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார். தோழியர் இருவரும் பாடசாலைக்குள் வந்ததும் தலைமையாசிரியரின் அறைக்குள் சென்று வரவுப் புத்தகத்தில் கையொப்பமிட்டு விட்டுத் திரும்புகையில், "தங்கச்சி ஒரு கதை" என்று உமாதேவியை அழைத்தார் தம்பித்துரை.

"என்ன மாஸ்டர் சிரித்துக்கொண்டே கூப்பிடுகின்றீர்கள். ஏதாவது விசேடமா?" என்ருள் உமாதேவி.

"விசேஷம் என்ரு கேட்கின்ருய்? விரைவில் கல்யாணச் சாப்பாடு போடப் போகின்ருய்."

"உண்மையாகவா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் வசுமதி.

"என்ன தங்கச்சி சிரிக்கின்ருய்? உனக்கு விஷயம் எட்டியிருக்குப் போலிருக்கே" என்ருர்.

"மாஸ்டர்! நீங்கள் சொல்வதே எனக்குப் புரியவில்லை. உங்களுக்கு யார் சொன்னது?" என்ருள் உமாதேவி.

"எனக்கு யார் சொன்னதா? நான்தானே முற்ருக்கி விட்டு வந்திருக்கிறேன்."

"மாஸ்டர்! இது...இது..." என்று தடுமாறினுள் உமாதேவி.

"தங்கச்சி! இது சாதாரண விடயமல்ல. உன் வாழ்க்கைப் பிரச்சினை. நீ பெரிய இலட்சியங்களோடு இருக்

கின்ருய். உன் கொள்கைகள் என்ன என்று எல்லாம் எனக்குத் தெரியும். அதற்கு ஏற்ற பையனையே பார்த்திருக்கிறேன். அவனை உனக்கும் தெரியும். இதில் உன் வீட்டினருக்கும் பூரண சம்மதம். இருந்தாலும் உன் சம்மதத்தையும் அறிந்தபின்புதான் முடிவு கூறவேண்டும். ஆனல்... நீ கேட்டால் திகைத்துப் போவாய்.''

''அப்படி என்ன சார் பெரிய இதுவா?''என்று வசுமதி கிண்டல் செய்தாள்.

''என்னவோ, நீ அங்கே வாழ்க்கைப்படக் கொடுத்து வைக்கவேண்டும்.'' என்ருர்.

''மாஸ்டர்! காலையிலே வந்ததும் வராததுமாக நீங்கள் இந்தக் கதையை ஆரம்பித்துவிட்டீர்கள். இப்படி எத்தனையோ வந்துபோய்விட்டது. என் மனதுக்குப் பிடித்தமில்லாத எதையும் யார் வற்புறுத்திஞலும் நான் ஏற்கமாட்டேன். அப்புறம் நீங்கள்...'' என்று நிறுத்திஞள் உமா.

''தங்கச்சி! தம்பித்துரை இட்டகுறி தப்பாது. ஆளை அறிந்ததும் நான் வேண்டாம் என்ருலும் நீ விடமாட்டாய்.''

''யார் என்றுதான் சொல்லுங்களேன்?'' என்ருள் வசுமதி.

''நீ ஏன் தங்கச்சி அவதிப்படுகின்ருய்? உமா கேட்கட்டுமே.''

''சரி, சொல்லுங்களேன் மாஸ்டர்'' என்ருள் உமா. அவளுக்கும் அதை அறிந்துவிட வேண்டுமென்ற ஆவல் இருப்பினும், அவள் மனதில் இதுவரை இல்லாத ஒரு புதிய திருப்பம் சமீபமாய் ஏற்பட்டிருந்தது. அதன் காரணமாக இதில் அதிக அக்கறை இன்றியே கேட்டாள் உமாதேவி.

''உன் கேள்வியே சரியில்லை. நீ விரும்பாத எதையும் நான் வற்புறுத்தவோ, உன் தலையில் கட்டிவைக்கவோ தயாராக இல்லை. அதே சமயம் நான் கூறியதும் உனக்கு

பிடித்தமாக இல்லையென்று என்னையும் ஒருமாதிரியாக நினைப்பாய். ஆகவே நீயாக அறிந்ததும், நீ விரும்பினால் எனக்கு வந்து சொல். அதன் பின்பு அது பற்றி நான் முயற்சிக்கின்றேன்?'' என்று கூறி அந்தக் கதைக்கு முற்றுப் புள்ளி வைத்தார் தலைமையாசிரியர் தம்பித்துரை.

அவர் அவ்விடம் விட்டுச் சென்றதும் உமாவைப் பார்த்துப் புன்முறுவல் செய்தாள் வசுமதி. அவளுடைய அந்தப் புன்முறுவல் உமாதேவிக்கு ஆத்திரத்தை உண்டு பண்ணவே, ''ஏன் சிரிக்கிறே'' என்றாள்.

''சிரிக்காமல் அழச் சொல்லுறியா? இதோடு எத்தனை 'புறப்போஷல்' வந்துபோய்விட்டது. நானென்றால் பேசாமல் ஒன்றை ஏற்றுக்கொண்டு 'கடவுளே' என்று சந்தோஷமாக இருப்பேன். நீ என்னென்டால்...'' என்றாள் வசுமதி.

''வசுமதி! கல்யாணம் செய்வது கடமைக்காக என்று நினைத்தால் நான் வீட்டோடு இருந்திருப்பேன். இங்கே இந்த ஊரில் வந்து காயவேண்டியதில்லை. சிறு வயது முதலே எனக்கென்று ஒரு கொள்கை என் உள்ளத்தில் வேரூன்றி வளர்ந்துவிட்டது. அதன்படி நடந்தால் நான் மனப்பூர்வமாக ஏற்பேன். இல்லையோ இல்லைத்தான்.''

''ஏன் உமா நீ ஒருவனை நல்லவன் என்று நம்பிக் கல்யாணமும் முடிந்துபோச்சு என்று வைத்துக்கொள். அப்புறம் அவனைப்பற்றிய உண்மைகள் தெரிந்தால் என்ன செய்வாய்?''

''என்னவா? திருநீலகண்டருக்கு மனைவி சொன்ன அதே வார்த்தைகளை நானும் சொல்வேன். அப்படியே செய்தும் காட்டுவேன்.''

''போடி பைத்தியம். அந்தளவுக்கு மனிதர்கள் இருப்பார்கள் என்று நினைக்கின்றாயா? ஒருத்தனுக்கு வாழ்க்கைப்பட்டால் அவன் உன் இஷ்டத்துக்கா நடந்துகொள்வான்?''

''என்னைப்பற்றி உனக்கு நன்கு தெரியும். அப்புறம் ஏன் வீண் அலம்பல். என்னுடைய சொந்த விருப்பு

வெறுப்புகளை நான் மனம் விரும்பி ஏற்ருல்தானேடி. எந்த ஒரு பொய்மை நிலைக்கும் நான் என்னை அடிமைப் படுத்திக்கொள்ள மாட்டேன். அவ்வளவுதான்.''

''ஏன் உமா, சிலவேளை அந்த சிவசங்கர் உன்னை விரும்பியிருந்தால்... அவரே கேட்டிருந்தால்...?''

உமாவின் இதழ்களில் புன்முறுவல் தவழ்ந்தது. வசுமதியை ஒருமாதிரியாகப் பார்த்தாள். அவள் பார்வை யில் எத்தனையோ விடயங்கள் தொக்கி நின்றன.

''என்ன அப்படிப் பார்க்கிறே?'' என்ருள் வசுமதி.

''அவர் என்னை விரும்புவாரா? பைத்தியக்காரி! அவ ராவது என்னை விரும்புவதாவது? அவர்கள் குடும்ப நிலை என்ன? எங்கள் நிலை என்ன? அது வெறும் பகற் கனவடி வசுமதி.''

அவளுடைய கதையினூடே ஒருவித சோகம் கலந்த ஏக்கம் இழையோடியிருந்தது. அதனை நன்குணர்ந்தாள் வசுமதி. அவள் உள்ளம் தடுமாறியது. தன் உள்ளத்தில் வளர்ந்து நிற்கும் இனிய உணர்வுகள் அவள் உள்ளத் துள்ளும் உருவாகி நின்றபொழுதும், அதில் நம்பிக்கை இழந்த நிலையில் ஏக்கம் கொண்டிருப்பதையும் உணர்ந் தாள்.

''உமா! அதிர்ஷ்டம் சொல்லாமல் வருவதடி. சில வேளை அப்படி நடந்தாள்...?

''உனக்கு விசரடி. நடக்க முடியாதவற்றைப் பற்றி நினைத்து ஏன்டி வீண் மனக்கலக்கமடைய வேண்டும். நடக்கவேண்டியது எப்பவோ நடந்துதானே தீரும். அதற்குமுன் நாம் ஏன் பிரச்சினையை உருவாக்கிக் கொள்ளவேண்டும்'' என்று கூறிவிட்டு தன்னுடைய வகுப் புக்குச் சென்ருள் உமாதேவி.

''வணக்கம் ரீச்சர்.'' என்ற இனிய குரல்கள் அவளை வரவேற்றபொழுது, பதில் வணக்கம் கூறிவிட்டு நாற்காலி யில் அமர்ந்தாளாயினும், அவளுடைய நினைவில் நிழலாகக் குளிர்ந்தான் சிவசங்கரன்.

காலைச் சூரியனின் வெப்பத்தில் கலந்து வந்த குளிர் காற்று அவளுக்கு ஓர் புதிய உற்சாகத்தை உடலுக்கு அளித்த அதே வேளையில், உள்ளத்தில் தோன்றிய இங்கித மான நினைவுகளில் தான் எங்கே இருக்கிறேன் என்பதைக்கூட மறந்துவிட்டாள் உமாதேவி.

அவள் தோழி கூறியதுபோல சிவசங்கரனே அவளை விரும்பியடைய முன் வந்தால்...? அவள் உள்ளத் தாமரை மலரவிழ்ந்து மணம்வீச முற்பட்டது. அவனைப்பற்றி முன்னே நினைத்திருக்கின்றாளாயினும், 'எட்டாத கனி புளிக்கும்' என்று அந்த நினைவுகளையே ஒதுக்கிவிட்டிருந்தவள். இன்றோ மணம் விரும்பி மயங்கி நின்றாள்.

கள்ளங் கபடமற்ற தெளிந்த முகம். உள்ளத் தூய்மையைப் பிரதிபலிக்கும் பளிங்கு போன்ற பேச்சு. கன்ன வகிடு எடுத்துவிட்ட சுருள் கிராப்பு. அறிவின் முதிர்ச்சியால் இடைக்கிடையே வெள்ளிக் கம்பிபோல் நரைத்த சில கேசங்கள். அடுக்கினாற்போல ஒரே சீராக அமைந்த பல்வரிசையும், சிரிப்பும். பார்ப்பவர் மனதைத் தன் வசப்படுத்தும் உடற் பாங்கும், உயர்ந்த அந்தஸ்தும்... அவன் தன்னை விரும்பினால்...? தன் இலட்சிய புருஷனைக் கடவுளே மனமிரங்கி அளித்ததாய் அவள் மகிழ்ந்து கொண்டிருந்தாள்.

அவளுடைய அந்த அமைதி நிலையினைக் கலைக்க விரும்பாத மாணவிகளும் பேசாமல் இருந்தார்கள். அக்கம் பக்கத்து வகுப்புகளில் கேட்ட இரைச்சல் கூட அவளை எதுவும் செய்யவில்லை. இதுவரைநாள் எந்த ஆணைப் பற்றியும் நினைத்துக்கூடப் பார்க்காத அந்த உள்ளம் சிவசங்கரனை நினைத்தின்புறுவதிலேயே மயங்கிக் கிடந்தது.

"ஏன் உமா, உடம்பு சரியில்லையா?" என்று திருமதி நளினி கேட்டபொழுதுதான் சுய உணர்வடைந்தாள் உமாதேவி.

"என்ன கேட்டீர்கள் ரீச்சர்?" என்று அவளிடமே கேட்டாள் உமா.

"'சோர்ந்து போயிருந்தீர்கள். உடம்பு சரியில்லையா என்று கேட்டேன்.'"

"'நோ, நோ. அப்படி ஒன்றுமில்லை. ஏதோ ஒரு யோசனையில் ஆழ்ந்துவிட்டேன்'' என்று கூறிவிட்டு, பாடப் புத்தகத்தைப் புரட்டினாள் உமாதேவி.

அவள் தன் உடலை மட்டுமின்றி உள்ளத்தையும் புனிதமாகவே வைத்திருக்க விரும்பினாள். அப்படித்தான் நடைமுறையிலும் வாழ்ந்தாள். நான் தூய்மையானவள்; சோரம் போகாதவள் என்று கூறிக்கொண்டு உள்ளத்தாலும், உணர்வுகளாலும் இன்புற்று ஏங்குவதையும் நினைத்து மகிழ்வதையும் பேரின்பமாகவும் கருதுபவர்கள் பலருண்டு. அப்படிப்பட்ட ஒரு நிலையில் வாழக் கூடாதென்று கருதுபவள் உமாதேவி. அப்படிப்பட்டவள் இன்று சிவசங்கரன் என்ற காந்த நினைவில் தன் உணர்வுகளைப் பறிகொடுத்துவிட்டாள். உடலால் சேர்ந்து உறவு முறைகொண்டு வாழும் ஆணும் பெண்ணும்தான் சம்சாரிகளென்று உலகம் சொன்னாலும், நினைவால் ஒரு ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்ந்தாலும் அவர்கள் சம்சாரிகள் என்று நினைப்பவள் உமாதேவி. அந்தக் கோட்பாடு அவள் மனதை ஊறுபடுத்திவிட்ட அந்தக் கணமே கலங்கினாள். நிலவில் மலர்ந்த மலர்போல பளபளத்துப் பிரகாசித்த அவள் அழகுமுகம் வெய்யில் பட்டு வாடித் துவண்ட மலர் போல் ஆகிவிட்டது.

பாடப் புத்தகத்தில் பிரித்த பக்கம் அப்படியே கிடந்தது. அதில் எந்த எழுத்தும் அவள் கட்புலனுக்குப் புரியாத நிலையில் விழிகள் கலங்கி நின்றன. மனக் கதவின் தாழ்களைச் சற்று இளக்கிவிட்டதினால் ஏற்பட்ட விபரீதத்தை நினைத்துக் குமைந்தவளாய், மீண்டும் தன்னிலை பெற்றாள். மனக் கதவை இறுக இழுத்துத் தாழ்போட்டாள். அத்துடன் பாடத்தில் கவனம் முழுவதையும் பதித்துக்கொண்டாள்.

திண்ணிய நெஞ்சோடும் தெளிந்த நல்லறிவோடும் இருந்த உமாதேவி, அன்று ஏனோ பைத்தியம் பிடித்தவள் போல ஏங்கித் தவித்தாள். மணி இரண்டானதும் பாடசாலைவிட்டு வீட்டுக்குப் புறப்பட்டாள். அவளுடைய உள மாற்றம் உடலிலும் மாறுதலை ஏற்படுத்தி இருந்ததினால் அவளுடைய அழகு முகம் வாடியிருந்தது. திருதுருவெனப் பம்பரமாய்ச் சுழலும் விழிகளில் ஒருவித சோகம் படர்ந்திருந்தது. அவளைப் பார்த்தும் ஏதும் பேசாமல் குனிந்தபடியே புத்தகங்களை அணைத்துக்கொண்டு சென்றவளை, ''உமா'' என்று அழைத்தாள் வசுமதி.

''ம்'' என்றளே தவிர வேறு பதில் இல்லை.

''ஏன்டி ஒரு விதமாக இருக்கிறாய். சுகமில்லையா?''

''அப்படி ஒன்றுமில்லை. சிறிது தலைவலி.''

''ஏன்டி அவரை நினைத்துக்கொண்டிருந்தாயோ?'' என்று வசுமதி கேலியாகக் கேட்டுவிட்டுச் சிரித்தாள்,

''யாரைச் சொல்லுறே?''

''உனக்கு வரப்போகிறவரைப்பற்றி.''

''அதுவா? வந்தபின் பார்ப்போமே.'' என்று கூறி விட்டு எட்டி நடந்தாள் உமாதேவி.

வசுமதியின் கதைக்குக் கதையாய், கேள்விக்குப் பதிலாய் இப்படிக் கூறிவிட்டாளே தவிர அவள் உள்ளம் உண்மையிலேயே துடிதுடித்தது. அந்த அவர் சிவசங்கரனாக இருந்துவிட்டால்...? அப்படி ஒரு நினைவை நினைக்கவே அவள் உடலெல்லாம் புல்லரித்தது. அந்த நினைவே இனிப்பாகத் தித்தித்தது, 'தன் நினைவின்படி இருக்கக்கூடிய ஒருவனாய், எந்த ஒரு பெண்ணிடமும் மனதையோ, உடலையோ பறிகொடுக்காத தூய்மையாளனாய் தனக்கே சொந்தமானவனாக இருக்கக்கூடியவன்... அவன் சிவசங்கரனாக இருந்துவிட்டால்...?'

வீட்டுக்குள் சென்று மேசைமீது புத்தகங்களைப்போட்டவள் அப்படியே கட்டிலில் பொத்தென விழுந்தாள். உணவைப் பற்றியோ, உடையைப்பற்றியோ அவள் சிந்திக்க

வில்லை. தான் எங்கே இருக்கிறேமென்ற நினைவின்றிப் படுத்துக்கிடந்தாள்! அதேசமயம் அந்த வீட்டிலிருக்கும் வயதான அம்மாள் ஒருத்தி உள்ளே வந்து, ''பிள்ளை, உனக்கு ஒரு கடிதம் வந்திருக்கு'' என்று கூறிக்கொடுத்து விட்டுச் சென்ருள்.

அந்தக் கடிதம் வீட்டிலிருந்து வந்ததென்பதை எழுத்திலிருந்து புரிந்துகொண்ட உமாதேவி, கடிதத்தை அவசரமாகப் பிரித்துப் படித்தாள். ஒருமுறை படித்த கடிதத்தை பலமுறை படித்தாள். நெஞ்சோடு நெஞ்சாய் அணைத்தாள். கட்டிலில் படுத்துப் புரண்டாள். அறுசுவை உண்டியோடு உணவு உட்கொண்டபின் பாயாசம் அருந்திவிட்டு பஞ்சணையில் படுத்துக் கிடப்பது போன்ற உணர்வு மேலிட மீண்டும் கடிதத்தைப் பார்த்தாள். சிலவேளை தன் மனப் பிரேமையோ என்ற நம்பிக்கையீனத்திஞல்தான் மீண்டும் மீண்டும் கடிதத்தைப் படித்தாள்.

''சங்கர், நான் அதிர்ஷ்டசாலி. இல்லையெனில், உங்களை அடையக் கொடுத்து வைத்திருக்கணுமே.'' என்று தன்பாட்டுக்குப் புலம்பியவள், அவசர அவசரமாக முகம் அலம்பிவிட்டு ஏதோ சாப்பிட வேண்டுமென்பதற்காக கொஞ்சம் உணவு அருந்திவிட்டுத் தலைமை ஆசிரியர் தம்பித்துரை வீடு நோக்கி விரைந்து சென்ருள்.

## 6.

மதிய உணவுக்குப் பின் நாட்டுப் புகையிலைச் சுருட்டொன்றைப் பற்ற வைத்துக்கொண்டு சாய்வு நாற்காலியில் சாய்ந்திருந்தார் தம்பித்துரை. பாடசாலை நாட்களிலே இப்படியான சந்தர்ப்பத்தில்தான் பத்திரிகை படிப்பது அவரின் வழக்கம். அன்று வந்த வீரகேசரி நாளிதழை விரித்துப் பார்த்தவாறு சுருட்டை இழுத்துப்

புகை இன்பம் அனுபவித்தபடி கிடந்தார். வீட்டு வேலை களை முடித்துக்கொண்டு அவர் மனைவி பொன்னம்மாவும் வந்து அருகில் அமர்ந்தாள். பேப்பரை மடித்து ஒரு கையி லும், வாயில் கிடந்த சுருட்டை மறு கையிலும் எடுத்துக் கொண்டு எச்சி துப்பியபின், ''என்னப்பா வேலையெல் லாம் முடிஞ்சுதோ?'' என்ருர் மனைவியைப் பார்த்து.

''எனக்கு என்னங்க வேலை? நீங்கள் ஏதோ சொல்லப் போறன் என்றியள். அதென்ன சொல்லுங்கோவன் என் ருள் பொன்னம்மா.

''எங்களுக்குப் புதிதாக ஒரு இன்ஸ்பெக்டர் வந் திருக்கிருர் என்று சொன்னேனே ஞாபகமிருக்கா? அந் தப் பொடியனுக்கும் எங்கள் பாடசாலை டீச்சர் உமா வுக்கும் கல்யாணம் பேசி முடிவு செய்துவிட்டன்'' என்று கூறியபடி சுருட்டை வாயில் வைத்து இழுத்தார்.

''நீங்களே அந்த...'' ஆவல் தாங்காமல் குறுக்கிட் டாள் பொன்னம்மா.

''நீ ஒரு அவசரக் குடுக்கை. முழுதையும் கேளேன்'' என்றபடி தொடர்ந்தார். ''இண்டைக்கு உமாவுக்கும் கடிதம் வந்திருக்கும். இப்ப இங்கே வருவாள் பாரேன். அவளுக்கு மாப்பிள்ளை யாரென்று நான் சொல்லவில்லை. பெடியன்ரை வீட்டை இவள் என்னவோ காரியமாகப் போயிருக்கிருள். பெடியன்ரை தாய் இவளைப் பார்த்த தும் மனம் வைத்துவிட்டாள். அந்த மனுசி ஒரு சரசுவதி. பார்த்தால் கையெடுத்துக் கும்பிடத்தான் மனம் வரும்.''

''நான் கேட்கிறேனென்று கோபியாதையுங்கோ. அவை எக்கச்சக்கமான சீதனம் கேட்பினமே. உமாவுக்கு ஏது...?''

''அதுதான்டி இல்லை.''

''அப்படியா?'' என்று அதிசயித்த பொன்னம்மா, ''உதுதான் விதி என்கிறது. அவள் வந்த கல்யாணங்களை எல்லாம் வேண்டாமென்று உதறிவிட்டு இருந்தது இதுக் குத்தான்போலும். உமாவுக்கு விருப்பமோ?''

''அவனைப்போல ஒருத்தனை எந்தப் பெண்தான் விரும்பமாட்டாள்? இந்தக் கிழமைக்குள் அவனும் இங்கே வருவான் நீ பாரேன்.''

''அங்கை பார் பொன்னு. உமா வாற வரத்தைப் பார். எனக்குத் தெரியும் அவள் வருவாளென்று. நீ பேசாமல் உள்ளே போ பொன்னு'' என்று கூறிவிட்டு, சுருட்டை மீண்டும் வாயில் வைத்து நெருப்புக் குச்சியைத் தட்டிப் பற்றவைத்தார்.

அதே சமயம் வீட்டினுள் நுழைந்தாள் உமாதேவி. அவசர அவசரமாக நடந்து வந்ததினால் அவளுடைய அழகான முகத்தில் முத்துக்கள் சிதறினல்போல் வியர்வைத் துளிகள் பொங்கி நின்றன. அவளால் எதுவுமே பேச முடியவில்லை. வார்த்தையின்றி அவரைப் பார்த்துக் கொண்டு மௌனமே உருவாக நின்ருள்.

''என்ன உமா, அவசரமாக வந்திருக்கின்ருய்? உட்காரேன்'' என்ருர் தம்பித்துரை.

ஆனல், அவள் உட்காரவில்லை. குனிந்து அவரின் பாதங்களைத் தொட்டு வணங்கியபடியே, ''என்னை ஆசிர்வதியுங்கள்'' என்ருள்.

தம்பித்துரை அவளின் தலையை ஆதரவாகத் தடவினுர். மறு கரத்தால் வாயிலிருந்த சுருட்டை எடுத்து வெளியே வீசினுர். அவரது உள்ளமெல்லாம் இனம் புரியாத பாச உணர்வு மேலிட, விழிகள் கலங்கி நின்றன.

''உமா! எழுந்திரம்மா. உன் மனம்போலவே எல்லாம் நிறைவேற இறைவன் அருள் புரிவான்'' என்ருர்.

''சார்! நான் உங்களைத் தலைமையாசிரியராக மட்டும் நினைக்கவில்லை. இங்கே எனக்குத் தந்தைபோலவும் இருந்து, எனக்கு ஓர் உயர்ந்த வரனையும் தேடித் தந்திருக்கின்றீர்கள்.''

இதைக் கூறியபோது அவளுடைய அழகு முகம் நாணத்தால் சிவந்தது. விழிகள் ஆனந்த முத்துக்களை உதிர்த்தன.

''பொன்னு! இங்கே வாவேன். உனக்குப் பிள்ளை இல்லையென்றுயே: இதோ கல்யாணத்துக்கு ஆயத்தமாகி இருக்கும் உன் மகளை நீயும் ஆசிர்வதியேன்'' என்று மனைவியை அழைத்தார்.

பொன்னம்மா ஓடோடியும் வந்து உமாவைக் கட்டி அணைத்துக்கொண்டாள். அவள் உள்ளம் ஆனந்த பரவசத்தினுல் நடுங்கியது.

''உமா! நான் எல்லாம் கேள்விப்பட்டேன். உன்னைப் பற்றி இவர் கதை கதையாய்ச் சொல்வார். கடவுள் உனக்கு நல்ல வழி காட்டிவிட்டார். உன் மாமியாரே உன்னை விரும்பி எடுக்கின்றுள். நீ புண்ணியசாலியம்மா'' என்று அவளை ஆசிர்வதித்தாள்.

உமாவின் உள்ளம் கரைபுரண்டோடும் ஆற்றினைப் போலத் துள்ளிக் குதித்தது. வாழ்க்கையில் தான் நினைத்து வந்த கற்பனை வாழ்வு நிஜ வாழ்வாக மாறப் போகின்றதே என மகிழ்ந்தாள். ஆயிரமாயிரம் நினைவுகளோடு அவள் உள்ளம் ஆனந்தக் களிநடம் புரிந்தது. கிடைக்குமா? கிடைக்காதா? என்று ஏங்கிய அதிர்ஷ்டம் தன்னைத் தேடி வருவதென்றுல்... அதுவும் முன் கொடுத்து வைத்ததின் பலனே எனப் பெருமிதமடைந்தாள்.

''உமா, நான் அப்பொழுதே சொல்லியிருப்பேன். ஆனுல், எங்கள் வட்டாரப் பாடசாலைகளின் தமிழ்த்தின விழா முடியுமுன்னர் இந்த விடயம் வெளியே தெரியக் கூடாது. தவிர, அவன் அதாவது உனக்கு வரப்போகும் கணவனுக்கு இந்த விடயம் தெரியுமோ என்னவோ. ஆனுல், அவனுக்குத் தெரியக்கூடாதென்பது உன் மாமியாரின் உத்தரவு. எல்லாம் முற்றுனபின்பு தானே கூறுவதாக உன் மாமியார் கூறினுர்'' என்றபொழுது உமா நாணித் தலை குனிந்தாள்.

''ஏன் உமா இந்தக் கிழமைக்குள் தம்பி சாப்பிட வருவாளும். அன்று நீயும் இங்கே சாப்பிட வரவேணும். மறந்துவிடாதே. மறுத்தும் விடாதே'' என்றுள் பொன்னம்மா.

''உங்கள் விருப்பம் எதுவோ அதன்படி நடப்பேனம்மா'' என்று விடைபெற்றுப் புறப்பட்டாள் உமாதேவி.

புதர்க்காட்டு மரங்களெல்லாம் பூஞ்சோலைகளாகவும் தென்னைகளெல்லாம் பளிங்குக் கோபுரங்களாகவும் மாலை வெய்யில் மகோன்னதமான நிலவொளியாயும் அவள் மனதுக்குத் தோன்றின.

சிவசங்கர் என்ற பெயரை மனது நினைக்கும் தோறும் நெஞ்சமெல்லாம் இனித்தது. அவன் கையோடு கை சேர்த்து நடப்பது போன்ற பிரமையில் நடந்தாள். உள்ளத்தில் பொங்கிய உவகை வெள்ளத்துக்கு அணைபோட முடியாது தத்தளித்தாள். முதன்முதல் சங்கரைச் சந்தித்த அந்தப் பாதையின் திருப்பத்தில் வந்தடைந்த போது, காரோடு அவன் அங்கே நிற்பது போன்ற பிரமை அவளுக்கு ஏற்பட்டது. ஒருகணம் அந்த இடத்தில் அவள் பாதங்கள் தாமதித்து நின்றன. தனக்குள் தானே சிரித்துவிட்டு மீண்டும் நடக்கலானாள்.

நெஞ்சம் நிறைந்த நினைவுகளில் மனம் மிதக்க, அவள் உணர்வையெல்லாம் ஏகாந்த அலைகள் ஈர்த்துக் கொண்டிருந்தன. உணர்ச்சிகளுக்கு அடிமைப்படாத அவள் உடலும், உள்ளமும் அன்று விடிந்தது முதல் உணர்ச்சிக்காளாகித் துடித்துக்கொண்டிருந்தன. அவளின் அங்கங்கள் ஒவ்வொன்றும் இன்ப உணர்வுகளின் எழுச்சியால் இனம் புரியாத, இதுவரை அவள் அறிந்திராத வேதனையால் துடித்தன. ஆனாலும் அவள் மனத்தில் தான் நினைத்துவிட்ட வாழ்வை அடைந்துவிட்டேன் என்ற பேரின்ப நினைவுடன் விறுநடை போட்டாள்.

# 7.

மூற்பகல் பொழுதில் நடந்த விழா நிகழ்ச்சிகள் முடிவுற்று, மதிய உணவுக்காக எல்லோரும் சென்று விட்டிருந்தனர். அன்று சங்கருக்கு பகல் உணவு தம்பித்துரை வீட்டிலேயே ஏற்பாடாகி இருந்தது. தம்பித்துரை, சிவசங்கரன், உமாதேவி உட்பட இன்னும் இருவரும் அங்கே விருந்துண்டனர். பின்னர் மாலை நிகழ்ச்சிக்காக எல்லோரும் பாடசாலை மண்டபத்துள் கூடியிருந்தனர். அந்த வட்டாரம் பின் தங்கிய பிரதேசம் எனக் கணிக்கப்பட்ட போதும், பட்டின நாகரீகத்தை மிஞ்சும் அளவுக்கு மாணவ, மாணவிகள், ஆசிரியைகள் அலங்காரங்களுடன் வந்திருந்தனர். சிவசங்கரனின் வயதையொத்த அவனிலும் வயது குறைந்த இளம் ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள் அங்கு பிரசன்னமாகி இருந்த போதும் சிவசங்கரனைப் பற்றிய கதையே இளநங்கையர் மத்தியில் அடிக்கடி இடம்பெற்றது.

ஆனால் சிவசங்கரன் எவரைப் பற்றிய நினைவுகளுமின்றித் தன் கருமத்திலேயே கண்ணுயிருந்தான். அவனுக்கு அருகே அமர்ந்திருந்த உமாதேவியை பொறாமை பொங்கச் சிலரும், பெருமை பொங்கச் சிலரும் பார்த்துக்கொண்டிருந்தனர்.

எத்தனையோ இளம் உள்ளங்களை அந்த நிகழ்ச்சி பாதிப்பதாக இருந்தாலும், அவர்கள் இருவரும் அப்படி இருப்பது வசுமதிக்குப் பொறுத்துக்கொள்ள முடியாதிருந்தது. அவளுக்குக் கிடைத்திருந்த அந்தச் சந்தர்ப்பம் தனக்கு மட்டும் கிடைத்திருந்தால் ஒரே நாளில் அந்தச் சங்கரைத் தன் வசப்படுத்திவிடலாம் என்ற சிந்தனையே அவள் உள்ளத்தில் மேலோங்கி நின்றது. அதேவேளையில் உமாதேவி மீது ஆத்திரமும், வெறுப்பும்

வளர்ந்து கொண்டு வந்தது. அவளைப் பற்றியோ அவ ளோடு சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் பற்றியோ உமா தேவி அவளோடு எதுவும் கதைப்பதில்லை. அவள் கதைத் தாலும் உமாதேவி எதையாவது கூறி, அந்த விடயத் தைத் திசைதிருப்பி விட்டுவிடுவாள். இதெல்லாம் வசு மதிக்கு அவள் மீது அவநம்பிக்கையைத் தோற்றுவித் தது. ஆனால், சிவசங்கர் மீது அவள் பார்க்கும் பார்வை யின் உணர்வுகளை எப்படி என்று கணிக்க முடியாது வசுமதி குழம்பினாள். அன்றிரவு எப்படியாவது உமாதேவி யிடம் தன் மனக்கருத்தைத் தெரிவித்துத் தனக்கு உத வும்படி கேட்பது என்ற முடிவுடன் நிகழ்ச்சிகளை அவ தானித்தாள் வசுமதி.

அவள் நினைப்பதற்கு மாறாகவே எல்லாக் கருமங் களும் பெரும்பாலும் நிகழ்ந்துகொண்டிருந்தன. விழா முடிந்ததும் வசுமதி உமாதேவியைத் தேடினாள். ஆனால், உமாதேவி தம்பித்துரை மாஸ்டரின் மனைவியுடன் அவர்கள் வீட்டுக்குப் போய்விட்டாள். வேறு தோழிகளு டன் வசுமதி தனது வீட்டுக்குத் திரும்பினாள். உமாதேவி தன்னிடம் ஒரு வார்த்தைகூடக் கூறாது போய்விட்டாளே என்பதை நினைக்கும்பொழுது அவளுக்கு ஆத்திரமும், அழுகையும் வந்தது. எனினும் அவளுடைய ஒத்துழைப் பின்றி தன் காரியம் நடைபெறாது என்ற எண்ணத்தி னால் எப்படியும் இரவு அவள் வீடு திரும்பும் வரை விழித் திருந்து அவளோடு கதைப்பது என்று தீர்மானித்த வளாய் வீடுவந்து சேர்ந்தாள்.

அவள் வீட்டுக்கு வந்து அரை மணித்தியாலம்தான் இருக்கும், வசுமதியின் வீட்டுக்கு முன் ஒரு கார் வந்து நின்றது. வெளியே இருள் அடர்ந்திருந்தபடியால் எதுவும் தெரியவில்லை. ஐந்து நிமிடங்களின் பின்பு வீட்டுக் கத வில் தட்டும் சத்தம் கேட்டு வசுமதி வெளியே வந் தாள்.

''யார் உமாவா? காரிலே நீயா வந்தாய்?'' என்று கேட்டாள் வசுமதி.

''சத்தம் போடாதே வசுமதி. இன்ஸ்பெக்டர் வந்திருக்கின்ருர். நான் உன்னிடம் சொல்லாமல் அப்போ போய்விட்டேன். மன்னிச்சுக்கடி. ஹெட்மாஸ்டரின் மனைவி கூப்பிட்டார்கள். என்ன செய்வது என்று தோன்ருது போய்விட்டேன். வசுமதி, நான் அவசியமாக வீட்டுக்குப் போகவேண்டுமென்றிருந்தன். இன்ஸ்பெக்டர் தன் காரிலேயே கூட்டிப்போய்விடுவதாய்க் கூறினுர். உன்னிடம் சொல்லிவிட்டுப் போகத்தான் வந்தேன்'' என்ற பொழுது, தன் குரல்வளையை யாரோ நெரிப்பதுபோன்ற உணர்வுதான் வசுமதிக்கு ஏற்பட்டது.

''உமா நானும் வாரேண்டி'' என்று சொல்லவேண்டும் போல் இருந்தது. ஆனுல், ஏனே அவளால் அப்படிச் சொல்ல முடியவில்லை.

''வசுமதி! அடுத்த வாரமே உனக்கு ஊரோடு மாற்றம் கிடைக்கின்றது. நீ வீட்டுக்குவர விரும்பமாட்டாய் என்பதினுல் நான் முன்னமே கூறவில்லை. போய்விட்டு வாரன்'' என்று கூறிப் புறப்பட்டாள். அவளைத் தொடர்ந்து வசுமதியும் வெளியே வந்தாள்.

''ஹலோ மிஸ் வசுமதி நீங்களா?'' என்று அவளை வரவேற்ருன் காரிலிருந்த சிவசங்கரன்.

''ஜெஸ் சேர்! என்னை மன்னித்துவிடுங்கள் சேர்'' என்ருள் வசுமதி.

''ஏன்? எதற்காக?''

''அன்று நான் அப்படி நடந்து...'' என்று பேசமுடியாமல் நிறுத்தினுள்.

''அடடே! நீங்கள் இன்னும் அதை மறக்கவில்லையா? அது ரொம்பச் சின்ன விஷயம். அதைப் பற்றியே நினைத்துப் பயந்துகொண்டுதான் எனக்கு முன் வராது ஒளிந்துதிரிந்தீர்களோ?'' என்ருன் சிரித்தபடியே.

''இல்லை சார் நான் வந்து...''

''மிஸ் வசுமதி! உங்கள் மீது எனக்குக் கோபமோ வெறுப்போ கிடையாது. நான் எதிரிகளைக் கூட நண்ப

னாக நினைப்பவன். அது சரி, உங்களுக்கு முதலாந் திகதி முதல் ஊருக்கே மாற்றம் கிடைக்கின்றது தெரியுமா?''

''தெரியும் சேர்! அதற்காக என் நன்றி!''

''உங்கள் குடும்பநிலை பற்றி மிஸ்டர் தம்பித்துரை கூறினார். உங்களின் உண்மைநிலை தெரிந்ததால் நான் முயற்சியெடுத்து இந்த மாற்றம் கிடைக்க ஏற்பாடு செய்தேன். ஓ. கே. நேரமாகுது'' என்றான்.

அதேசமயம், ''வாரன் வசுமதி'' என்று கூறிக் காரில் ஏறி அமர்ந்தாள் உமாதேவி.

கார் கண்ணுக்கெட்டிய தூரம் மறையும் வரை வசுமதி பார்த்துக்கொண்டே நின்றாள். உள்ளத்தின் பொறாமை உணர்வுகளை அவிழ்த்துவிடும் வகையில் விழிகளிலிருந்து கண்ணீர் வழிந்து அவளின் நெஞ்சில் விழுந்துகொண்டிருந்தது. ஆனாலும் எரியும் நெருப்பில் நெய் வார்த்தது போன்று அவள் உள்ளம் மேலும் பொறாமை உணர்வினால் வெந்து கொண்டிருந்தது!

சிவசங்கரோடு தனிமையிலே... அதுவும் இரவு நேரம் காரில் செல்வதென்றால்...... வசுமதியின் உள்ளம் பல்வேறு சிந்தனைகளில் விரைந்து செயற்பட்டது. உமா வந்ததும் அவளிடம் நேரடியாகவே கேட்டுவிட வேண்டும் என்ற முடிவோடு அறைக்குத் திரும்பினாள். என்னதான் அந்த நிகழ்ச்சியை அவள் மறந்துவிட முயன்றாலும், உமா அவனுக்கருகில் அமர்ந்து சென்றது, அவள் மனதில் சிலையாக அமைந்துவிட்டிருந்தது. உமாவை எப்படித்தான் நல்லவள் என்று நம்பிய போதிலும் அவளும் பெண்தானே! அவளின் மனம் ஒரு நல்லவனிடம் ஏன் அடிபணிந்துவிடாது? என்ற ஒரு கேள்வியே அவள் அந்தரங்கத்தைக் குடைந்துகொண்டிருந்தது

அதேவேளையில் கார் நெடுந்தூரம் வந்துவிட்ட போதிலும், சிவசங்கரனும், உமாதேவியும் ஒருவரோடு ஒருவர் எதுவும் பேசாமல் சிந்தித்தவண்ணமாக இருந்தார்கள். அவன் ஏதாவது பேசமாட்டானா என்று ஏங்கிக்கொண்டிருந்தாள் உமாதேவி. அதேசமயம் விருப்பமானால்

அவளே முதலில் பேசட்டும் என்று மௌனமாகக் காரைச் செலுத்திக்கொண்டிருந்தான் சிவசங்கரன். காரின் உள்ளேயும் மின் விளக்கு ஒன்று மங்கலாக ஒளிபாய்ச்சிக்கொண்டிருந்தது. எவ்வளவு நேரத்துக்குத்தான் மௌனமாக இருக்க முடியும்? பொறுமையை இழந்தவளாகக் காரில் பொருத்தப்பட்டிருந்த சிறு வானொலிப் பெட்டியைக் காட்டி, "இது பாடுமா சேர்?" என்று ஒரு கேள்வியை முதலில் கேட்டாள் உமாதேவி.

"பாட்டு வேண்டுமா...?" என்று கேட்டுவிட்டு சுவிட்சைத் திருகிவிட்டான் சிவசங்கரன்.

"ஆயிரம் கண்ணுக்கு விருந்தாகும்—என்
அழகுக்கு ஒருவன் துணைவருவான்
அது நீயன்றோ, அது நீயன்றோ" என்ற சுசீலாவின் குரல் ஒலித்தது. வானொலியின் சுவிட்சைத் திருகி நிறுத்த சங்கரின் கரம் நீண்டபொழுது உமாவின் கரமும் அவளை அறியாமலேயே நீண்டு தடுத்த பொழுது சங்கர் சிரித்துக்கொண்டே கையை எடுத்துவிட்டான். உமாவுக்கு வெட்கமாகப் போய்விட்டது. கண்களை இறுக மூடிக்கொண்டாள். அந்தப் பாடலின் கருத்து அவள் உள்ளத்தினைத் திறந்துகொட்டுவது போல் அமைந்துவிட்டது. அடிக்கடி அவள் முகத்தில் தோன்றி மறையும் உணர்ச்சி வெள்ளத்தைக் கள்ளத்தனமாகப் பார்த்து ரசித்தான் சங்கர். பாடல் முடிந்த பொழுது அவளே வானொலியை நிறுத்தினாள்.

"ஏன் ஒரு பாடல் கேட்டதுடன் சலித்துவிட்டதா? என்ன?"

"இல்லை சேர். உங்களுக்கு இப்படிப் பாடல் பிடிப்பதில்லைபோலும்!"

"நோ, நோ... அப்படியில்லை. ஆனால், சமயம் சந்தர்ப்பம் தெரியாமல் இப்படிச் சில வேளைகளில் பாட்டைப் போட்டுத் தொலைத்துவிடுகின்றார்கள்."

"சமய சந்தர்ப்பங்களை நாமே உருவாக்கிக்கொள்ளுகின்றோம் என்பதுதான் எனது அபிப்பிராயம்."

''இருக்கலாம். ஆனால்......''

''சொல்லுங்கள்.''

''உங்களிடம் ஒரு விடயம் கேட்கலாமென்று நினைத்தேன். ஆனால், எப்படிக் கேட்பது என்று தெரியாமல் தான் இதுவரை மௌனமாக இருந்தேன்'' என்று கூறிவிட்டு மீண்டும் மௌனமானான்.

''அப்படி தயங்கக்கூடியவரல்லவே நீங்கள்!''

''இது என் சொந்தவிடயம். அதனால்தான் தயங்குகின்றேன்.''

''எதுவாயிருந்தால் என்ன?'' உமாவுக்கு உற்சாகம் மேலிட்டது.

''நீங்கள் இதில் அக்கறை காட்டுவதினாலும், உங்களைப் பற்றித் தம்பித்துரை மாஸ்டர் கூறிய கதைகளினாலும் நேரிலே உங்களிடமேயே கேட்டுத் தெரிந்துகொள்வது நல்லதென்று நினைக்கிறேன்.''

''எங்கள் ஹெட்மாஸ்டரே என்னைப் பற்றி...... அப்படி என்னதான் கூறியிருப்பார்?''

''மிஸ் உமா! கதையை வளர்க்காமல் விடயத்தைக் கூறிவிடுகின்றேன். நீங்கள் அன்று வீட்டுக்கு வந்து போனீர்களே! அதற்குப் பின்னர் உங்கள் பெற்றோர் ஏதாவது எழுதினார்களா?'' என்று இடையில் பேச்சை நிறுத்தி அவளிடமே கேள்வி கேட்டான்.

''எழுதினார்கள். என் கல்யாணவிஷயமாக.''

''அதேதான். என் அம்மாவுக்கு உங்களைப் பிடித்திருக்கின்றது. போன வாரம் தம்பித்துரை மாஸ்டர் வந்த பொழுது கேட்டிருக்கின்றார்கள். அவர் உங்கள் பெற்றோரிடம் கேட்டிருக்கவேண்டும். ஆனால்...''

''உங்கள் அம்மாவுக்குத்தானே என்னைப் பிடிச்சிருக்கு...'' என்று கூறித் தலையைக் குனிந்தாள்.

''நீங்கள் தவறாக நினைத்துவிட்டீர்கள். அம்மாவின் விருப்பம் எதுவோ, அதுவே என் விருப்பமும். அதனால் தான் அப்படிக் கூறினேன்.''

''என் பெற்றோர் என்ன சொல்வார்கள்? அவர்கள் மகிழ்ச்சியடைந்திருப்பார்கள். இதில் என்னிடம் கேட்பதற்கு என்ன இருக்கு?''

''அங்கேதான் விஷயமே இருக்கு. இது வரை எனக்கு எத்தனையோ கல்யாணம் பேசிவந்தனர். அம்மா எதையுமே விரும்பவில்லை. ஆனால், உங்கள் பெற்றோர் விரும்பிய சில திருமணங்களை நீங்கள் தட்டிக்கழித்துவிட்டீர்களாமே! அதனால்தான் உங்களிடமே நேரில் கேட்டுத் தெரிந்துகொள்ளலாமென்று நினைத்தேன். இப்போ கேட்டும்விட்டேன்.''

உமா தலையைக் குனிந்துகொண்டாள். அவள் விழிகளில் நீர் நிரம்பி நின்றது. அவன் அப்படிக் கேட்டதில் நியாயமிருந்தாலும் அவள் மனக்கருத்தினை அவன் உணர்ந்து கொள்ளாததினால்தான் அப்படிக் கேட்டிருக்க வேண்டும் என்று உணர்ந்துகொண்டாள்.

''என்ன பேசாமல் இருக்கின்றீர்கள்? நான் ஏதும் தவருகக் கேட்டேனு?'' என்ருன் சங்கர்.

''இல்லை, இல்லை... நான் என் பெற்றோர் விரும்பிய திருமணங்களைத் தட்டிக்கழித்தது உண்மைதான். அதற்கான காரணங்கள் கூட உண்டு.''

''தெரியும்! தம்பித்துரை மாஸ்டர் கூறினுர்.''

''ஆனுல், உங்களை முதலில் சந்தித்தபொழுதே நீங்கள் எப்படிப்பட்டவராக இருக்கவேண்டும் என்று தீர்மானம் செய்துகொண்டேன். நான் கற்பனையில் நினைத்திருந்த ஒரு இலட்சிய புருஷனைவிட மிகமிக உயர்ந்த நிலையில், தொடுவானத்துக்கப்பால் என் சிந்தனைக்கும் எட்டாத ஒருவராகத் தெரிந்தீர்கள். நினைவுகளாலேயே மாசுபடாத என் உள்ளம் உங்களை மறுமுறை சந்தித்த பொழுது மாசுபட்டுவிட்டது. அடைந்தால் உங்களை என்னுடையவராக அடையணும், அல்லது இப்படியே காலம் முழுதும் நினைவின் நிழலில் கழித்துவிடவே முடிவு செய்திருந்தேன். ஆனுல், தெய்வம் என்னை உங்கள் அன்னை உருவில் ஆட்கொண்டுவிட்டது.''

"உமா! இப்படியொரு நினைவுகூட எனக்குத் தோன்றவில்லையே! நான் பாக்கியசாலி."

"அப்படி இல்லீங்க."

"ஏன்?"

"நீங்கள் நினைத்தால் என்னைப் போல ஆயிரம் உமாக்கள் உங்களுக்குக் கிடைக்கலாம். ஆனால், எனக்கு உங்களைப்போல ஒருவர் கிடைக்க முடியுமா?"

"அதுதான் கிடைத்திருக்குதே! ஆனால் உன்னுடைய சம்மதந்தான் கிடைக்கவில்லையே!"

"இவ்வளவு தூரம் என் மனக்கருத்தைக் கூறிய பின் பும் என் சம்மதம் தெரிய வேண்டுமா?"

"ஆமாம் உமா. ஏன் அப்படிக்கேட்கிறேனென்றால் இந்த மனமிருக்கே இதற்கு ஆயிரம் வாசல்கள் உண்டு என்று கூறுவார்கள், எதுவானாலும் தான் நினைத்தபடி பெரிதாக ஒன்று கிடைக்க வேண்டும். அது எப்படியிருந் தாலும் பரவாயில்லை என்று நினைப்பவர்களும் உண்டு. அவர்கள் பேராசைக்காரர்கள். ஆனால், உம்மைப் போன்று லட்சியம், அது இது என்ற வரையறைக்குட் பட்டவர்கள் தாம் நினைத்தது போல ஒன்று கிடைத்து விட்டாலும்கூட ஏதாவது ஒரு காரணம் கூறித் தட்டிக் கழிக்க நினைப்பார்கள் இல்லையா?"

"உண்மைதான். ஆனால், நான் உங்களோடு தனித்து வர விரும்பிய பொழுதே உங்கட்கு ஆட்பட்டுவிட்டேன் என்பதுதானே பொருள்!"

"நன்று உமா! இந்தச் சந்தோஷத்தை எப்படிக் கொண்டாடுவது என்றே எனக்குப் புரியவில்லை."

உமா அவனை நிமிர்ந்து நோக்கினாள். கள்ளம் கபட மற்ற அவன் முகத்தில் மகிழ்ச்சியின் பூரிப்பு நிறைந் திருந்தது. அப்படியே அவனைக் கட்டி அணைத்துக் கொள்ளவேண்டும் போன்ற உணர்வு அவன் உள்ளத்தை உந்தியது. காற்றின் வேகத்தில் கலைந்திருந்த கிராப்பில் ஒரு சுருள் கேசம் அவன் முன் நெற்றியில் தொங்கி விளை யாடிக்கொண்டிருந்தது.

''என்ன பேச்சொன்றையும் காணும்? மனதிலே கற்பனைகளை வளர்க்காமல் கூறுங்களேன். இனி என்ன வெட்கம்?''

''ஒன்றுமில்லை. எனக்குக் கிடைத்த இந்தப் பெரு வாழ்வு பொருளாதாரப் பிரச்சினையால்... என்றுதான் பயந்துகொண்டிருக்கின்றேன்.''

''பொருளாதாரமா? சீதனப் பிரச்சினையா? நான் கேட்பதை உங்களால் கொடுக்க முடியுமா?''

''எதைக் கேட்டாலும் கொடுக்கச் சம்மதம்? இருப்பதைத்தானே கொடுக்க முடியும்?'' என்று கூறிச் சிரித்தாள்.

''சீதனத்துக்குப் பெண் பார்ப்பதாக இருந்தால் எப்பொழுதோ எனக்குத் திருமணம் நடந்திருக்குமே.''

''அந்தளவிலும் நான் பாக்கியம் செய்தவளே.''

''என்னை என் அம்மா சம்மதம் கேட்குமுன் யாரைக் கேட்டாங்க தெரியுமா?''

''தெய்வத்திடம்தான் கேட்டிருப்பாங்கள்.''

''ஆமாம். எங்கள் வீட்டில் குழந்தையும் தெய்வமுமாக இருக்கிறனே குமார். அவனிடம்தான் கேட்டார்கள். அவன் சம்மதித்த பின்பே என்னிடம் கேட்டார்கள்,''

''அவனுக்கு நான் நன்றி சொல்லணும்''

''உமா! நான் இதுவரை எனது திருமணம் பற்றி நினைத்ததுகூடக் கிடையாது. காரணம் அந்தப் பையன். அம்மாகூட என் திருமணத்தை ஒத்திப்போட்டதே அதனுல்தான். ஆனல் உம்மைப் பார்த்தபொழுது...''

''அவனை என் பிள்ளையாகப் பார்ப்பேன் என்று நினைத்திருப்பாங்க, அப்படித்தானே?''

''எனக்கு மனைவியாக வாழ்வதற்கு எல்லோருமே சம்மதிப்பாங்க. ஆனல், தாய் தந்தையே இல்லாத அவனைத் தன் பிள்ளையாகப் பார்த்துக்கொள்ள எவளும் விரும்புவாளா?''

"யார் விரும்பாவிட்டாலும் நான் அப்படி நடந்து கொள்வேன். கல்யாணத்துக்கு முன் நான் பெற்றதாக இல்லாமல் எங்கள் மூத்த மகன் என்ற நினைவோடு அவனை வளர்ப்பேன். உங்களுக்குக் குறைவிட்டாலும் அவனுக்கு எந்தக் குறையும் வைக்காது பார்த்துக்கொள் வேன்'' என்று அவள் கூறிக்கொண்டிருக்கும் பொழுதே ஒரு கரத்தால் அவள் கரங்களைப் பற்றிக் கண்களில் ஒற்றிக்கொண்டான் சிவசங்கர்.

''என்னங்க இது?'' என்று அவனருகே தள்ளி நெருங்கி உட்கார்ந்தாள்.

''உமா! வாழ்க்கை என்ற பதத்தில் கடைசி எழுத்து என்ன? சொல்லேன் பார்க்கலாம்?''

''கையுங்க!''

''அதே வாழ்க்கையில் இருவரைப் பிணைத்து வைப் பது எது தெரியுமா?''

''சொல்லுங்க.''

''நம்பிக்கை. அதில் கடைசி எழுத்து கை இல் லையா?''

''ஆமாம்!''

''இவற்றைப் போல எங்களைச் சேர்த்துப் பந்தப் படுத்தி ஒருவராக்குவதும் இந்தக் கைதான். ஒருவரை வாழ்த்தி வரவேற்பதும், தூக்கி எறிவதும் இதே கைகள் தான். மனதுக்குப் பிடித்ததை, பிடித்தமில்லாததை உடனே செயலில் காட்டிவிடுவதும் இவையே. அதனால் தான் என் நம்பிக்கைகளையெல்லாம் உன் கையில் ஒப் படைத்துவிட்டேனென்று இந்த அழகிய கைக்கு நன்றி கூறினேன்'' என்றான்.

''அப்பாடா! உங்களுடன் கதைத்தால் போதும். உங்களுக்கு மனம் அடிமையாகிவிடும்.''

''மனம் மட்டுமா உமா? இந்த அழகான உடலும் தான். அந்தக்கரையிலிருந்து இப்போது என்னோடு வந்து ஒட்டிக்கொண்டுவிட்டதே'' என்று கூறிக் கையைப் பற்றி யிருந்த கரத்தினை எடுத்து அவளை அணைத்துக்கொண்

டான். தேனுண்ட வண்டாகி அவன் கைப்பிடியில் துவண்டு சாய்ந்து கிடந்தாள் உமா.''

''நான் கொடுத்து வைத்தவள். இல்லையென்றால் கன விலும் நினைத்துப் பார்க்க முடியாத இந்த...''

''சொல்லேன் உமா.''

''ஹ்ஹும்.''

''சொல்லாவிட்டால் இப்படியே ஸ்ரேறிங்கை விட் டிட்டு இரண்டு கையாலுமே உன்னை'' என்று மிரட்டி ருன்.

''பரவாயில்லை. விட்டிடுங்கள். இந்த அணைப்பில் இறப்பு நேர்ந்தாலும் அதுவும் எனக்கு இன்பம்தான்.''

''பைத்தியக்காரி! இந்தப் பெண்களே இப்படித் தான்.''

''எப்படித்தான்?''

''அவசர முடிவு செய்துகொள்வதில் மேகத்தைக் காட்டிலும் விரைவானவர்கள் பெண்கள் என்று ஒரு சீன அறிஞன் கூறியுள்ளான்.''

''நான் என்ன கூறவந்தேன் தெரியுமா?''

''சொன்னல் தெரிந்துகொள்கிறேன்.''

''பாரதியின் பாடல் ஒன்றில், ''நித்தமுனை வேண்டி நினைப்பதெல்லாம் நீயாய், பித்தனைப்போல் வாழ்வதிலே பெருமையுண்டோ திருவே'' என்று கூறியிருக்கின்றார். நான் அதைப் பெருமையாகவே நினைக்கின்றேன். அப் படியே நாம் வாழணும் என்றும் நினைக்கின்றேன். இதில் தவறில்லையே சேர்.''

''சேர் ஆவது மோராவது. மை நேம் இஸ் சிவசங் கர். நீர் விரும்பினல் சங்கர் என்றே அழைக்கலாம்.''

''சரி சங்கர் நான் நினைத்தது தவறில்லையே!''

''இல்லை. அது நமது வாழ்வைப்பற்றிய ஒரு விடயத் தில் மட்டும். எமக்கு நமது வாழ்வு மட்டும் முக்கியமல்ல. பிற கடமைகளும் நிறைய இருக்கின்றன.''

''தெரியுமே!''

''வேறு என்ன தெரியணும்?''

''இன்னும் ஒரு மைல் போனால் உங்கள் வீடு வந்திடுமே சங்கர்.''

''வரட்டுமே. வீட்டுக்குத்தானே போகின்றோம். முதலில் எங்கள் வீட்டுக்கு. அப்புறம் உன் வீட்டுக்கு.''

''நான் உங்கள் வீட்டுக்கு நாளைக்கு வருகின்றேன். இன்று நேரே என்னை வீட்டில் கொண்டுபோய்ச் சேர்க்கணும்.''

''அதற்கென்ன அப்படியே செய்கிறேன்.''

''அதுக்கில்லை சங்கர்.''

''வேறு எதற்கு?'' என்று திரும்பி அவளைப் பார்த்தான். அவளுடைய செம்பவள இதழ்கள் துடித்துக் கொண்டிருந்தன. காரின் வேகம் குறைந்தது. அதைத் தொடர்ந்து காரினுள் சிரிப்பொலியும் எழுந்தது.

## 8.

**காலை** இளங்காற்றின் சீதளச் சுமையைத் தாங்கிக்கொள்ள முடியாது அவள் மென் உடல் நடுங்கிய பொழுது, போர்வையை இழுத்து மூடிக்கொண்டு இரு கரங்களையும் தோள்களைப் பற்றி இறுக்கியபடியே ஒருக்கழித்துக் கிடந்தாள் உமாதேவி. வீட்டிற்கு வந்து நான்கு நாட்களுக்கு மேலாகிவிட்டாலும், ஒரு நாள் சென்றது போன்ற உணர்வே தோன்றியது. இன்னும் மூன்று நாட்கள் சென்றுவிட்டால் சட்டபூர்வமாகச் சிவசங்கருக்கு அவள் மனைவியாகிவிடுவாள். திருமணப் பதிவுக்கு நாட் குறித்தாயிற்று. அதற்கிடையில் சங்கரோடு கழித்த அந்த இன்ப நினைவுகளில் அவள் உள்ளம் பூரித்துக் குலுங்கியது.

விழிப்பிலும் சரி, தூக்கத்திலும் சரி இரண்டுக்கும் இடைப்பட்ட மயக்க நிலையிலும் சரி அவன் நினைவே அவள் சிந்தனையில் தேங்கி நின்று தேனாக இனித்தது. மன்மதக் கலை பற்றி எதுவித சிந்தனையுமில்லாதிருந்த அவள் உள்ளம், என்று சிவசங்கரனைப் பற்றி நினைக்கத் தொடங்கியதோ அன்று முதல் அவள் உள்ளத்தில் தேனாறு பாய்ந்து கொண்டிருந்தது. நித்தம் நித்தம் ஒரு புத்தம் புதிய சுகத்தில் அவள் தோய்ந்து எழுந்தாள். அவள் உள்ளத்தினைப் போலவே உடலிலும் ஓர் புதிய மலர்ச்சி. பெண்மையின் பூரண எழில் மலர்ந்து அவள் மேனி எங்கும் வியாபித்துச் சிலிர்த்து நின்றது.

பெண் என்பவள் ஒரு புதிர். பெண் பற்றிய உண்மை நிலையுமே எவராலும் விடுவிக்க முடியாத ஒரு பெரிய புதிர். அதற்குக் காரணம் அவள் நிலையான மனமுடைய வளல்ல என்பதேயாகும். ஒரு பெண் ஏழு பருவங்களைக் கடக்கும் போது, அப்போதைக்கப்போது அவள் குண இயல்புகளிலும் மாறுதல் ஏற்படுகின்றது. இயற்கை அவளுக்கு வகுத்துவிட்ட நியதி அது. அந்த விதியில் அவளுக்கு அனுகூலமான திட்டங்கள் இருந்த பொழுதும், மனித ஒழுங்குகளை மீறும்பொழுது அவளைத் தண்டித்தும் விடுகின்றது என்பதும் உண்மை. இவைகளை நன்கறிந்த வள் உமாதேவி.

தான் எழுதிய கடிதம் இன்று வசுமதியின் கையில் கிடைக்கும். அவள் படித்துவிட்டு மகிழ்ச்சியடைவாள். பலதடவை படித்துவிட்டு மற்றவர்களுக்கெல்லாம் கூறு வாள். தன் தோழிக்குக் கிடைத்த அதிர்ஷ்டத்தை எண் ணிப் பூரித்துத் திரிவாள். தனக்குக்கூடச் சொல்லாமல் ஒளித்துவிட்டதற்காக நிச்சயமாகக் கோபிப்பாள் என் றெல்லாம் நினைத்தாள்.

''உமா! என்னம்மா மணி ஏழாகிவிட்டது. இப்படித் தூங்கினால்? அதுவும் பொம்பிள்ளைப்பிள்ளை. நாளைக்குப் போற இடத்திலே என்ன சொல்வாங்கள்?'' என்று கேட்

டுக்கொண்டு அறையுள் நுழைந்தாள் தாய் கனகம்மாள்.

''என்னம்மா நீங்கள். பிறந்த வீட்டில்தானே இந்த வாய்ப்பெல்லாம். அங்கே போனால் நான் இப்படிப் படுத்துத் தூங்கமுடியுமா?''

''போடி பைத்தியக்காரி. அந்தம்மாளைப் பார்த்தியா? அவங்கள் உன்னை மருமகளாக எடுத்தாலும் தனக்கு மகளாகவே நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த வீட்டில் நீ செய்கிற அரைகுறை வேலைகூட அங்கே உன்னைச் செய்யவிடமாட்டார்கள் பாரேன்.''

''இப்பவே சகலியைப் புழுகினால் எப்படியம்மா?''

''நான் புழுகலையம்மா. ஆனால், அவங்களைப் பார்க்கும் பொழுதே கையெடுத்துக் கும்பிடனும் போல் தோன்றுகிறது. செல்வச் செழிப்பிலும், செருக்கில்லாத எளிமையும், ஆடம்பரமும், அகங்காரமும் இல்லாத அமைதியான சாந்த குணமும் எல்லோருக்கும் வந்து விடக் கூடியதல்லவே. நீ புண்ணியம் செய்தவள். எழுந்திரம்மா நேரமாகுது'' என்று கூறிவிட்டுச் சென்றாள்.

வாழ்க்கை எல்லோருக்கும் ஒரேமாதிரியாக அமைந்து விடுவதில்லையே! பலதரப்பட்ட மனிதர்களைக் கொண்டது தானே சமுதாய வாழ்க்கை. எமது கையில்கூட ஐந்து விரலும் ஒரு மாதிரி இல்லை. இப்படிப்பட்ட இயற்கை நிலையை மாற்றி அமைப்பதாயின் மனிதனுடைய குண இயல்பு, நுகர்ச்சித் தன்மை ஒருவழிப்பட்டதாகப் பரந்து அமைந்திருக்கவேண்டும். அது முடிகின்ற காரியமா?

உமா குளிக்கும் பொழுதும்சரி, உடை மாற்றும் பொழுதும் சரி, உணவு உட்கொள்ள இருந்த பொழுதும் சரி தனக்குக் கிடைத்த வாழ்வின் பெருமித உணர்விலேயே கிடந்து தவித்தாள். தன் மன உணர்வுகளைப் பகிர்ந்து, கதைத்து இன்புற வசுமதிகூட இல்லையே என்ற வருத்தம் வேறு. அவளுடன் இருந்த பொழுது அந்த விடயத்தை மூடி மறைத்தவள் அவள் அருகிலில்

லாத பொழுது அதைச் சொல்லி இன்புற அவளில்லையே என்று ஏங்கினுள்.

உலகில் இப்படிப்பட்ட மன இயல்புடையோர் அதிகம். நேருக்குநேர் காணும்பொழுது ஒருவரைப் பற்றிப் பாராமுகமாக இருந்துவிட்டு, அவர்கள் இல்லாத இடத்தில் பார்க்கத் தவிப்பார்கள். இதற்கு மனேதத்துவ நிபுணர்கள் பல காரணம் கூறினுலும் சிலர் தமது சுயநலம் காரணமாகவே இப்படி இருந்துவிடுவதுண்டு. அந்த வகையில் தானும் ஒருத்தியாகிவிட்டோமே என்று எண்ணி வெட்கினுள் உமாதேவி.

அதேசமயம் பூநகரிலுள்ள தனது அறையில் உமாதேவியின் கடிதத்தை ஒன்றுக்குப் பல தடவையாகப்படித்துவிட்டாள் வசுமதி. அக்கடிதம் சில சமயம் தன் மனப்பிரமையாக இருக்குமோ அல்லது உமா வம்புக்கு இப்படி எழுதியிருப்பாளோ என்று எண்ணித் திரும்பத்திரும்பப் படித்தாள். கடைசியாக அவள் திருமணப் பதிவு நடைபெறும் திகதி குறிப்பிட்டிருந்ததைப் பார்த்ததும் அது உண்மைதான் என்று உறுதிசெய்துகொண்டாள். மீண்டும் கடிதத்தை ஒரு முறை வாய்விட்டே படிக்கலானுள்.

அன்புள்ள மதி,

இக்கடிதம் உனக்கு வியப்பையும், ஆச்சரியத்தையும் அளிக்கலாமாயினும், உன் வாய்க்குள் சீனிபோடவேண்டுமடி. ஆனுல் அப்படிச் சந்தர்ப்பத்தினை மூடி மறைத்து நடக்கும்படியானதால் நான் உன் வாய்க்குச் சீனிபோடவில்லை. மதி! முதலில் என்னை மன்னித்துவிடு. நீ அன்று கூறினுயே, ''சிவசங்கரன் என்னை விரும்பி மனைவியாக்கிக்கொள்ளக் கேட்டிருக்கலாம்'' என்று. அது உண்மையாகிவிட்டதடி. அன்று மாலையே எனக்கு இந்த உண்மை தெரிந்த பொழுதும் உன்னிடம்கூடச் சொல்லக்கூடாத நிலை. முற்றுக நிச்சயமாகும் வரை யாருக்கும் இந்த விடயம் தெரியாமலிருப்பதே நல்லது என்று ஹெட்மாஸ்டர் கூறியதால் நான் இதுபற்றி எதுவும் கதைக்கவில்லை.

இதை உறுதிசெய்யவேண்டும் என்பதற்காகவே அன்று அவரோடு தனியே காரில் வர விரும்பிப்புறப்பட்டேன். உனக்கே ஆச்சரியமாகவும், ஆத்திரமாகவும் இருந்திருக்கும். நான் வேண்டுமென்று அப்படிச் செய்யவில்லையடி மதி. எப்படியாவது அவர் என்னை விரும்புகிருரா என்பதை அறிய விரும்பினேன், மதி! ஆனல் அவர் சரியான அழுத்தக்காரரடி. அன்றைய பிரயாணம் பற்றி எழுதுவதானல் ஒரு புத்தகமே எழுதிமுடிக்கலாம். எனக்கு அன்று வீடுவந்தது எப்படியென்றே ஞாபகமில்லை. அவர் என் கரத்தினைப் பற்றிய பொழுது நான் என்னை மறந்தேன். எப்படி அவரோடு சேர்ந்திருந்தேன் என்றே நினைக்க முடியவில்லை.''

இவ்வாறு தாம் காரில் பிரயாணம் செய்த நிகழ்ச்சிகளைக் கதை எழுதுவதுபோல் பந்தி பந்தியாக எழுதியிருந்தாள் உமாதேவி. அவற்றைப் படித்துவிட்டு கடைசிப் பந்தியைப் படித்த பொழுது அந்த நிகழ்ச்சியை நேரில் பார்ப்பது போன்ற பிரமை ஏற்பட்டது வசுமதிக்கு.

''ஓடிக்கொண்டிருக்கும் காரில் உமாதேவியை ஒரு கரத்தால் அணைத்துக்கொண்ட சிவசங்கர் புன்னகை பூத்தபடியே காரின் வேகத்தைக் குறைக்கின்றான். உமாதேவி அவன் தோளில் குழந்தையைப் போல முகம் பதியக் கிடக்கின்றாள். முதல் அறிமுகம். ஒரு தரம், ஒரே தரம் அப்படிச் செய்தால் என்ன பாபம்? என்று துணிந்தவனக அவளை இழுத்து அவளுடைய செம்பவள இதழ்களில் ''இச்'' என்று ஒன்று கொடுக்கின்றான். உமா அப்படியே அவனைத் தழுவிக்கிடக்கின்றாள். அது மட்டுமா? காரினுள் சிறு மணிகள் பல சேர்ந்து ஒலிப்பது போன்ற கிண்கிணிச் சிரிப்பொலி அந்தச் சிரிப்பொலி இருளில் இருந்து ஒலியாகவும், ஒளியாகவும் வெளியாவதானல் அதற்குக் காரணம்?''

கடிதத்தில் உமா எழுதியிருந்தவையை வைத்துக் கொண்டு ஒரு திரைக்காட்சியையே மனதில் பார்த்துப் பெருமூச்செறிந்தாள் வசுமதி. அவள் உள்ளத்துள் வசு

மதிகள் இருவராய்ப் பிரிந்து நின்றனர். ஒருத்தி தன் சிநேகிதியின் பெருவாழ்வினைப் பார்த்துப் பொருமினாள். பொறாமைப்பட்டாள். இன்னொருத்தி மகிழ்ந்தாள். என்னவாயிருந்தாலும் அவள் தன் இன்பத்தின் இனிமைகளை பகிர்ந்து இன்புறுகின்றார்களே என்று பெருமைப்பட்டாள். ஆனால் முடிவில் அவள் மனம் ஒரு நிலைக்குத் திரும்பிய பொழுது, ''உமா என்னை ஏமாற்றிவிட்டாயேடி! எனக்கு மாற்றம் வாங்கித் தருவதாய் அவரைச் சந்தித்து நீயே அவரை வாங்கிக் கொண்டுவிட்டாயேடி!'' என்று வாய்விட்டே கூறிவிட்டாள். அதே சமயம் அவளை அழைத்துக்கொண்டு அங்கே வந்தாள் திருமதி செல்லையா என்னும் ஆசிரியை. அவளுக்கும் வசுமதிக்குமிடையில் கொள்கையளவில் ஒற்றுமை இருந்ததினால் அநேகமாக அவளைத் தேடிக்கொண்டு வருவாள்.

''வாங்க ரீச்சர். உங்களுக்கு ஒரு நல்ல செய்தி கூறப் போகின்றேன். மூர்ச்சை போட்டு விழுந்திடாதேயுங்கோ'' என்றாள் வசுமதி சிரித்தபடி.

''அதென்னடியம்மா மூர்ச்சை போடக்கூடிய செய்தி?'' என்று கேட்டாள் திருமதி செல்லையா.

''உமா இருக்கிறாளே, அவளை எங்கள் இன்ஸ்பெக்டர் கல்யாணம் செய்யப்போகின்றாராம்.''

''அடஉதுதானே? எனக்கு ஹெட்மாஸ்டரின் சம்சாரம் சொன்னாளே காலையில்.''

''என்ன உங்களுக்கு ஏற்கனவே இது தெரியுமா?''

''எனக்குத் தெரியாமல் என்னடி? அன்று தமிழ்த் தினவிழாவில் அவள் அவனைப் பார்த்த பார்வையில் நான் புரிந்துகொண்டேன். தேன் குடிச்ச நரிமாதிரியல்லே இருந்தாள். உனக்குச் சொல்ல நினைத்தேன். நீ பிறகு ஏசுவாய் என்று தான்டி பேசாமல் இருந்தேன். அமசடக்கியாக இருந்துவிட்டு நல்ல புளியங்கொம்பாகப் பிடித்துக் கொண்டாளே. எது எப்படியிருந்தாலும் இரண்டு பேருக்கும் நல்ல பொருத்தமடி வசுமதி.''

"இந்த விடயத்தைத் தொடக்கியவளே நான்தான் ரீச்சர். பாருங்களேன் கடிதத்தை'' என்று கடித்த்தை அவளிடம்கொடுத்தாள். கல்யாணமானவளானுலும்அந்தக் கடிதத்தைப் படிக்கும்பொழுது அவள் முகத்தில் மகிழ்ச்சி ரேகைகள் பல நுண்ணுணர்வுகளைத் தோற்றுவித்துக் கொண்டிருந்ததை உணர்ந்தாள் வசுமதி.

வெறும் நினைவுச் சுகத்தில் சுழலுவதைவிட சிறிது அனுபவச் சுகமும் பெறும்பொழுதுதான் நினைவுச் சுகத்துக்கு மேலும் இனிமை கூடுகின்றது போலும்! இல்லையெனில் திருமதி செல்லையா அந்தக் கடிதத்தினைப் படிக்கும் பொழுது அப்படி முகமாற்றமடைந்திருக்க முடியாது என நினைத்த பொழுது வசுமதியின் எண்ணங்கள் சிதறிப் புரண்டன.

''ஏன்டி வசு! நீ ரெயில்ஸ்டேசனுக்குப் போகின்ருயா?''

''போகிறதா? நான் இல்லாமல் நடக்குமா? உமா என்ன எழுதியிருக்கின்ருள் என்றுதான் பார்த்தியளே, ரீச்சர்! எனக்கு மாற்றம் கிடைத்ததே அவளால்தான். நான் இந்த வாரத்துடன் வீட்டுக்குப் போகின்றேன்.''

''ஏன்டி வசு! இங்கே இருந்தால் அவனைப் போல ஒரு இன்ஸ்பெக்டர் பெடியனை நீயும்...''

''ரீச்சர் என்னை என்னவென்று நினைத்தீர்கள்? உமா அப்படிப்பட்டவளுமில்லை. அவளை அவங்கள்தான் விரும்பிக் கேட்டிருக்கிருங்கள் தெரியுமோ?''

''ஏன்டி நீ துள்ளுருய்? என்ன இருந்தாலும் உன் உற்ற சிநேகிதியல்லவா? உன்னிடமே இந்த விடயத்தை மூடி மறைத்து மழுப்பினுளே! இப்படி இன்னும் எத்தனையை மூடி மறைத்தாளோ? வசுமதி! நீ ஒரு அப்பாவிப் பெண்ணடி. இல்லையென்ருல் நீயே அவனைப் பிடிச்சிருக்கலாம். அந்தப் பெரிய குடும்பம் இவளை ஏன்டி விரும்பி எடுக்கணும்? அங்கேயும் சூத்தை இருக்கணும். இல்லையென்ருல் அவன்ரை உத்தியோகத்திற்கு இலட்சுமி மாதிரிப் பெண்களோடு இலட்சம் இலட்சமாகக் கொடுக்க

ஆட்கள் இருக்கும் பொழுது இவளை ஏன்டி எடுக்கின்றார் கள்? எனக்கும் கொஞ்சம் தெரியுமடி வசு'' என்று நெருப்பை ஊதி மூட்டினுள் திருமதி செல்லையா. அந்த நெருப்பு வசுமதியின் மனதிலும் பிடித்து எரிய ஆரம்பித் தது.

# 9

காட்டாற்று வெள்ளம் போன்று தறிகெட்டுப் பாயும் இளமனசை அணைகட்டி, அழகான வாய்க்கால் போட்டு, இப்படித்தான் பயிரிட வேண்டும் என்று வழி வகுத்து வைப்பதுதான் திருமணம். அதற்கான முன்னேற் பாடாகத் திருமணப்பதிவு நடைபெற்றது உமாதேவிக்கு. அன்று அவளது உறவினர்கள், சிநேகிதர்கள் யாபேரும் வந்திருந்தனராயினும், வசுமதி மட்டும் வரவில்லை. ஆனல், அவள் கடிதம் மட்டும் எழுதியிருந்தாள்.

''உமா! நீ கொடுத்த வைத்தவள் மட்டுமல்ல, அனு பவிக்கவும் பிறந்தவள் என்பதை உன் அழகு மடல் பார்த்து அறிந்துகொண்டேன். உன் இலட்சிய வாழ்வு பூர்த்தியானதையிட்டு உன்னைவிட நான் மகிழ்ச்சி அடை கின்றேன். ஆனல், உன் மனது குழம்பும் சில கதைகளை நீ கேள்விப்படலாம். அதுபற்றிக் கவலையோ, அக் கறையோ காட்டாதே. மிகுதி நேரில்!'' என்று எழுதி முடித்திருந்தாள் வசுமதி. அப்படி என்ன கதை? சங்கரைப் பற்றியதாக இருக்குமோ? அவள் பளிங்கு மனதில் சிறு துரும்பு உறுத்த ஆரம்பித்தது.

திருமணப் பதிவு நடந்து இரண்டு நாட்களின் பின்பு சங்கரைத் தன் வீட்டிற்கு விருந்துக்கு அழைத்தாள் உமாதேவி. அன்று பகல் உணவை அறுசுவையுடன் உட் கொண்டான் சிவசங்கரன். உமாதேவியே பரிமாறினுள்.

''நீர்தான் சமையல் செய்தீரா?''

''ஏன் சந்தேகம் உங்கட்கு?''

''இவ்வளவு திறமையாக நீர் சமைப்பீர் என என்னுல் நம்ப முடியவில்லையே''

''நான் ரீச்சர் என்பதினுல் அப்படி நினைத்தீர்களா?''

''ஆமா. ஆனுல்?...''

''ஆனுல் என்ன ஆனுல்; நானே சமைத்துத்தானே சாப்பிடுகின்றேன். உத்தியோகம் பார்க்கும் பெண்களுக்குச் சமைக்கத் தெரியாது என்று நினைத்தீர்கள் போலும். நீங்கள் பயப்படாதீங்க. நான் நன்ருகச் சமைத்துப் போடுவேன்'' என்று கூறிச் சிரித்தாள் உமாதேவி.

''எங்க வீட்டில் உமக்கு அந்தப் பிரச்சினைக்கே இடமில்லை. அம்மா விட்டால்தானே நீர் சமைக்க முடியும்? அது சரி உமா, உமது தொழில் விடயமாக என்ன முடிவுக்கு வந்துள்ளீர்?''

''உங்கள் விருப்பம் எப்படியோ அப்படியே செய்கின்றேன். இனி எனக்கென்று ஓர் விருப்பம் தனித்துக் கிடையாதே''

''அப்படியா? உமா என் விருப்பம் எப்படி இருந்தாலும் உமக்கென்று ஒரு மனம் உண்டல்லவா? இன்று என் விருப்பம் என்பீர். இன்று நமக்கிடையிலான நெருக்கம் உம்மை அப்படிச் சொல்ல வைக்கின்றது. ஆனுல், நமக்கிடையில் ஒரு வேற்றுமை தோன்றும் பொழுது, ''உங்களால்தானே இந்நிலை ஏற்பட்டது. நான் தொழில் பார்த்திருந்தால் என் சுயகௌரவத்துடன் இருந்திருப்பேனே'' என்று கூறவரும். இல்லையா உமா?''

''என்னை அப்படிப்பட்டவளாக நினைக்கின்றீர்களா?''

''நான் நினைக்கவில்லை உமா. உம்மைப் போன்று லட்சியம், கொள்கை, சுயகௌரவம் என்று கூறுபவர்கள் சில சமயம் இப்படிக் கூறுவார்கள். அதனுல், சொல்லுகின்

றேன். உமது விருப்பம் எப்படியோ அப்படியே செய்ய லாம். எனக்கு ஆட்சேபனையில்லை''

''சரி என் விருப்பப்படியே செய்கின்றேன்''

''உமா''

''ம்''

''இப்படிச் சொல்லிவிட்டேன் என்று கோபமா?''

''எனக்கென்ன கோபம்? உங்களோடு கோபித்தால் எனக்கேது வாழ்வு? நான் என்னோடு கோபித்து ஆவது என்ன?'' என்று கூறிச் சிரித்தாள். இருவரும் சேர்ந்து சிரித்தனர்.

அவளுடைய வாழ்வில் வசந்தத்தின் இனிய தென்றல் மணம் கலந்து வீச ஆரம்பித்தது. காலங்களில் அவள் வசந்தத்தைப்போன்றவளானாலும் அவள் வாழ்வில் அது புகுந்து கொண்டபொழுது இனிமைக் கனவுகளில் மூழ்கினாள்.

அதே வேளையில் சிநேகிதி வசுமதி பற்றியும் அவள் நினைக்காத நாளில்லை என்றே கூற வேண்டும். அவள் தான் எப்படி மாறி விட்டாள்? திருமணப் பதிவுக்கு வர வில்லை. பின்னர், ஊரோடு மாற்றலாகி வந்தபொழுது கூட ஒருநாள்தான் அவளைப் பார்க்க வந்தாள். வந்திருந்த பொழுது, அவள் கதைத்த கேலிக்கதைகளை நினைத்துச் சிரித்தாள் உமாதேவி.

ஒருவனோ, ஒருத்தியோ தான் பெற்ற இன்பத்தைத் தன் மனதுக்குப் பிடித்தமான ஒருவரிடம் கூறும்பொழுது மேலும் மேலும் இன்புறுகின்றார்கள். அதேபோன்று மனக் குறையை மற்றவரிடம் வாய்விட்டுக் கூறும்பொழுது அமைதியடைகின்றார்கள். மனித வாழ்க்கையில் சுகதுக்கம் சுழல் சக்கரமாயினும், அச்சக்கரத்தைப் பின்னோக்கிச் சுழற்றிப் பார்க்கும் பொழுதும் ஒரு வகையான சாந்தி பிறக்கவே செய்கின்றது.

''ஏன் உமா என்னிடமே உண்மையை மறைத்து விட்டாயேடி? என்னிடமே உனக்கு நம்பிக்கை இல்லாமல் போய் விட்டது. இல்லையா?'' என்றாள் வசுமதி.

''அப்படியில்லையடி: நான் இதுபற்றி உன்னிடம் கூறி இருப்பேன். அப்புறம் அந்த விடயம் முற்றுப்பெருது போயிருந்தால் நீ என்னை எப்படி நினைப்பாய்...? புரியுதா நான் ஏன் சொல்லவில்லை என்பதற்குக் காரணம்''

''ஏன் உமா றெயில்ஸ்டேஷனுக்குப் பின்புறம் கார் விளையாட்டு...?

''ஏண்டி கார் விளையாட்டு?''

''அன்று எனக்கு எழுதினுயே...''

''ஓ அதுவா? இல்லையடி வசு. அன்று என்னை அறியாமலேயே ஏதோ ஒரு நிலை, அவருக்கென்று ஆட்பட்ட பின்பு...வெட்கமாயிருக்குதடி''

''உமா உனக்கு அந்தப் பாட்டு நினைவு இருக்கா?''

''என்ன பாட்டு?''

''வெட்கமாயிருக்குதடி—அந்த வேலவர் செய்திடும்
வேலையில்லா வேலை, வெட்கமாயிருக்குதடி''

என்று பாடிவிட்டுக் கண் சிமிட்டிச் சிரித்தாள்.

''வசு என்னைக் கிண்டல் பண்ணுவதற்கென்றுதான் வந்தாயடி?'' சிணுங்கினுள் உமாதேவி.

''என் கண்ணில்லை. நீ சிணுங்காதே. உன் விருப்பப் படியேதான் நான் நடப்பேன். எங்கே ஒருக்கால் சிரியேன். செங்கனி வாய் திறந்து சிரித்திடுவாய் கண்ணே''

''வசு! வசு! போதுமடி.''

''நீ இப்படிச் சொன்னுல்கூட அவர் விட மாட்டாரேடி''

இப்படி அவர்கள் அமளி துமளிப்பட்டுக் கொண்டிருக்கும்பொழுது உமாவின் தாய் அறைக்குள் நுழைந்தாள். அத்துடன் அவர்கள் கேலிப் பேச்சுக்களும் தடைப் பட்டு விட்டன. அன்றுபோன வசுமதி பின்பு வரவே இல்லை. இரண்டு தடவை கடிதம் எழுதினுள். பின்பு பதிலே இல்லை.

நெருங்கிய உறவாக இருக்கும்பொழுது தெரிந்து கொள்ள முடியாத சில குறைகள், உறவு அற்றுப்போன நிலையில் பெருங்குறைகளாகத் தெரிந்தன உமாவுக்கு.

அதுபற்றி அவள் வீண் கற்பனை செய்து பார்ப்பதில்லை. உமாதேவி எதிலும் பிரச்சினைகளை வளர்த்துக் கொள்ள விரும்புகின்றவளில்லை. பிரச்சினைகளைத் தீர்த்துக்கொண்டு நிம்மதி அடைவதிலேயே கருத்துடையவள். அவள் மனம் போலவே சௌந்தரம்மாளும் விரைவில் திருமணத்துக்கு நாட் குறிப்பிட்டு விட்டாள்.

திருமண அழைப்புக்கள் எங்கும் அனுப்பப்பட்டு விட்டன. தன்னுடைய சிநேகிதர்கள், உறவினர்கள் எல்லோருக்கும் அழைப்பு அனுப்பிவிட்டு, அந்த ஆனந்த மயமான தினத்தை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தாள் உமாதேவி. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு யுகமாகக் கழிந்து கொண்டிருந்தாலும், நினைவிலேயே வரப் போகின்ற அந்த இனிய நிகழ்ச்சியினை எண்ணிக் களிப்புற்றாள். கனவு மயக்கத்தில் களிப்புற்றுத் தவித்தாள்.

அணைபோட்டு அடைத்து வைத்திருந்த நீர்த்தேக்கம் அணை திறந்துவிட்டால் எப்படிப் பொங்கிப் பாய்ந்து செல்லுமோ அதேபோன்று உமாதேவியின் உள்ளமும் மகிழ்ச்சியினால் குமுறிப் புரண்டு இனிமையான நுண் அலைகளினால் வசந்தகீதம் இசைத்துக் கொண்டிருந்தது.

## 10.

காலை விடிந்தபொழுது மகிழ்ச்சியான மங்கள நினைவுகளுடனேயே கண் விழித்தாள் உமாதேவி. பூரண நிலவின் உதயத்தின்போது தோன்றும் மனோகரமான மந்தகாசம் அவள் முகத்தில் பிரதிபலித்தது. கனவுகளின் களி மயக்கம் அவளுடைய அழகு முகத்தில் இன்பப் போதையின் ரேகைகளை ஏற்படுத்தியிருந்தது. வெள்ளை தாமரையில் படபடத்துச் சிறகடிக்கும் கருவண்டுகளென அவளுடைய காவியக் கருவிழிகள் மயங்கிக் கிடந்தன

அவளைப் பார்த்த தாய் கனகம் பெற்ற பொழுதினும் பெரிதாய் மகிழ்ச்சி அடைந்தாள். தன் வயிற்றில் பிறந்த வளுக்குக் கிடைத்துவிட்ட பெருவாழ்வின் மகிழ்ச்சிப் பூரிப்பு. சோப்பும் கையுமாக அவள் கிணற்றடியால் வந்தபொழுது, "உமா" என்று உள்ளமெல்லாம் பொங்கும் பாசத்துடன் அழைத்தாள் கனகம்.

"என்னம்மா"

"என் கண்ணே! திருஷ்டி பட்டுவிடும் போலிருக்கேடி. உன் வாழ்வு இனிமையாக இருக்க அந்த உலகநாயகி தான் அருள்புரிய வேண்டும்" என்றாள்.

"என்னம்மா நீங்கள். "காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு" என்பார்கள். உங்கட்கு......"

"போடி பைத்தியக்காரி. உனக்கு உன் பெருமை தெரியாது. இரவு அம்மாளடியில் என்னென்னமாதிரி யெல்லாம் கதைத்தார்கள் தெரியுமா? என்னுடன் கதைக் காதவர்கள்கூட "கனகம் கனகம்" என்று..."

"போங்கம்மா. பெருமைப்படாதீர்கள்"

அவள் மனதில் சிவகாமி அம்மன் கோயிலும், அங்கே வீற்றிருக்கும் அம்பாளும், தினம் தினம், தான் அங்கே வேண்டி அழுததும் நினைவில் சுழன்றன.

இணுவில் கிராமத்தின் கிழக்கு மூலையில் புகையிரதப் பாதைக்கு மேற்குப் புறமாய் பனைகளுக்கு எதிரே உலக மக்களின் தாயாய் வீற்றிருக்கும் அன்னையின் அருளில் மயங்கிப்போய் நின்றாள்.

"என்னடி உமா?"

"அம்மா, கல்யாணமானதும் அவரோடு சென்று அம்மாளுக்கு ஒரு அபிசேகம் செய்ய வேண்டும் என்று நினைத்திருக்கின்றேன்"

"நானும்தாண்டி" என்று கூறியவள், அடுப்பில் பால் பொங்கி எரிந்த மணம் நாசியைத் துளைக்கவே, குசினியை நோக்கிச் சென்றாள்.

அந்த ஆனந்தமயமான காலைப்பொழுதில் அவள் நினைத்தவைக்கெல்லாம் மண் அள்ளிப் போட்டாற்போல

வந்தது அந்தக் கடிதம். மொட்டைக் கடிதமானாலும் அவள் மனதில் தோன்றிய—வசுமதி கூறிய சில விடயங்களுக்கான ஆதாரங்களும் அடங்கியிருந்தன. அதைப் படித்தபொழுது உலகமே இடிந்து நொருங்கி அவள் தலையில் விழுந்தது போன்ற நினைவும், அவதியும் அடைந்தாள்.

அவ்விடயத்தை யாரிடம் கூறுவது? யாருக்குச் சொல்வது? இன்னும் மூன்றே நாள்தான் திருமணத்துக்கு இருந்தது. அவள் மனம் பேதலித்தது. அமுதம் என்று எதை நினைத்தாளோ அதில் விஷம் கலந்து இருப்பதாக அவளை நம்பச் செய்து விட்டது அக்கடிதம்.

அன்பும், ஆசையும் சேர்ந்து இன்பப் பூரிப்பில் அது வரை ஆழ்ந்து கிடந்த உள்ளத்திலிருந்து பெருகிய ஆனந்தக் கண்ணீர், வெப்ப நீராகி அவளுடைய காவிய நயனங்களைக் கரித்துக் கொட்டியது. பெற்றவளிடம் சொல்லமுடியாத பெரும் வேதனை!

"அண்ணியின் தங்கைக்கு என்னைக் கேட்டவர்கள். அம்மா விரும்பவில்லை" என்று சிவசங்கர் கூறினாரே. அது எவ்வளவு பெரும் பொய் என்பதை அக்கடிதம் நிரூபித்தது. அந்த விடயத்தில் ஓர் மர்மமிருக்கின்றது என்பதை உணர்ந்து கொண்டு தவித்தாள் உமாதேவி. அதே சமயம் அங்கு வந்தாள் வசுமதி.

"உமா, என்ன இப்படி இருக்கின்றாய்? இரண்டு நாட்களே கல்யாணத்துக்கு இருக்கையில் உனக்கென்ன வந்தது? உடம்பு சரியில்லையா?" என்று அவளுடைய நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள் வசுமதி.

"வசுமதி! இதைப் பாரடி. என் நினைவெல்லாம்..." என்று வாய்விட்டுக் கதறினாள் உமா.

அவள் அப்படி அழுது ஒருநாளும் பார்த்திராத வசுமதிக்கு அவளைப் பார்க்க மிகவும் சங்கடமாக இருந்தது. குழந்தைபோலத் தேம்பித் தேம்பி அழுதாள் உமாதேவி. அவளுடைய அழகிய முகம் கன்றிச் சிவந்து போய்க் கிடந்தது.

''உமா, இது மொட்டைக் கடிதமடி! இதுபோல ஆயிரம் வரும். உனக்கு இப்படி வாழ்வு கிடைத்தது எல்லோருக்கும் பொறுமைதாண்டி. இதை நீ நம்புகின்றாயா?''

''நம்ப முடியாதுதான் வசுமதி. ஆனால், அவர் அண்ணியின் தங்கைபற்றிக் கூறியதுக்கும், அண்ணியின் மரணத்துக்கும்...நினைக்கவே உள்ளம் துடிக்குதடி வசு. என் கல்யாணம் நடக்காமல் போனால் எனக்கு எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும். அத்துடன் நிம்மதியாகவும் இருக்கும்''

''உமா! என்னுடைய பாடசாலையில் ஒரு ரீச்சரும் இப்படிக் கதைத்தவள்தான். ஏன் அப்படிக் கதைத்தாள் என்பதை அறிய முற்பட்டபொழுதுதான் உண்மையைப் புரிந்துகொள்ள முடிந்தது. அவளுடைய புருஷனும் சிவசங்கரனுடன் இன்ஸ்பெக்டர் இன்ரெவியூவுக்குப் போனவராம். அவருக்குக் கிடைக்காத பதவி சிவசங்கருக்குக் கிடைத்த பொறுமையில்...''

''பொறுமையால் கதைக்கலாமடி. ஆனால், நெருப்பில்லாமல் புகை வந்திருக்குமா? ஏதோ ஒரு மர்மமிருக்கிறபடியால்தானே இப்படிக் கதைக்க வந்தது''

''சரி. அப்படி என்று வைத்துக் கொண்டாலும் நீ அவரிடமே கேட்டறிந்து உன் சந்தேகம் தீர்ந்த பின்பு நிம்மதி பெறலாம் இல்லையா? வதந்திகளை நம்பி வாழ்க்கையைக் கெடுப்பதென்று தீர்மானித்து விட்டாயா?''

''அவரை இனிச் சந்திக்க முடியாதேடி''

''ஏன், கல்யாணம் முடிந்த பின்பு கேட்கலாம்தானே?''

''அதெப்படியடி?''

''உமா பதருதே. ''பதருத காரியம் சிதறுது'' என்று முதியோர் கூறுவர். எனக்கு நீயே அடிக்கடி கூறுவாய், அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வரக்கூடாது என்று இப்போ உனக்கு இதையே நான் கூறுகின்றேன், நீ அவசரப்படாதே. உன் முகத்தைக் கண்ணாடியில் பார். ஒளி இழந்த நிலவுபோல இருண்டு போய்க் கிடக்குதே.

எழுந்து முகத்தைக் கழுவி பவுடர் போடு உமா. கவலையை மறந்து சந்தோஷமாக இரு. இப்படி ஒரு கடிதம் வந்ததென்பதை அடியோடு மறந்துவிடு. பின்பு, ஆறுதலாய் அவரிடம் கேட்டுப்பார். உண்மை தெரியவரும். அதுவரை இக்கடிதத்தைப்பற்றி மறந்திரு உமா'' என்று தேற்றினாள்.

அவளுடைய ஆறுதல் வார்த்தைகளால் ஒருவாறு மனம் தேறினாள் உமா. என்றாலும், அவளுடைய அடி மனதில் ஏற்பட்ட அந்த வடு அப்படியேயிருந்தது.

சிவசங்கரை நினைக்கும்பொழுது அவள் தடுமாறினாள். அவனுடைய கபடமற்ற சிரிப்பும், குழந்தையுள்ளமும், களங்கத்தின் கறைபடியாத முகமும்! அவன் ஒரு சாவுக்குக் காரணகர்த்தாவாக இருந்திருப்பானா? இருக்க முடியாது என்று நினைக்கவும், முடிவு செய்யவும் முடியாதிருந்தது அவளுக்கு. ''இந்த நேரத்தில் இப்படி ஒரு வேதனையைத் தந்து வேடிக்கை காட்டுகிறாயே இறைவா! இது என்ன சோதனை? நான் கனவிலும் நினைத்திருக்காத பெருவாழ்வினை எனக்குத் தந்து, என் மனதில் ஆனந்த வெள்ளத்தினை ஓடவைத்து, அதில் நஞ்சையும் கலந்து......! இறைவா, எனக்கு அமைதியும், ஆனந்தமும் தந்தருள்'' என மனதுள் பிரார்த்தித்துக் கொண்டே வசுமதியோடு வேறு கதைகளில் கலந்து கொண்டாள்.

மனித மனமானது இல்லாத முடிவுகளை, கற்பனையில் அடங்காத பயங்கரங்களை நிஜம் என்று நம்பி, என்னென்னவோ எல்லாம் எண்ணி வேதனைப்பட்ட பின்பு, அது அப்படியல்ல என்று தெரிந்துகொண்டு ஒரு நிமிடத்தில் ஆனந்தமடைகின்றது. இப்படித் திடீர் மாறுதலுக்காளாகும் இருவித இயல்பினால் மனிதன் தன்னைத் தானே வதைத்து இன்புறும் இயற்கை நிலை ஏற்பட்டது போலும். மனிதன் தன் வலுவிழந்து எல்லோரும் கைவிட்ட நிலையில் இறைவன் என்ற அருவசக்தியின் துணையை நாடி ஆன்மீகப் பாதையில் அமைதியை நாடுகின்றான்;

இதே நிலையைத்தான் உமாதேவியும் இப்பொழுது நாடினாள். கடிதம் பொய்யாக இருக்க வேண்டும் எனப் பிரார்த்தனை செய்தாள்.

# 11.

இணுவில் கிராமத்தின் இனிமையான இயற்கை எழிலை ரசித்தவாறு வந்து கொண்டிருந்தான் சிவசங்கர். சாமை, குரக்கன், பயறு, மிளகாய்க் கன்றுகள், வெண்காயம் இப்படி ஒவ்வோர் பயிர் வகையை ஒவ்வோர் தோட்டத்திலும் பார்த்தபோது கண்களுக்கு ரம்மியமான காட்சியாக இருந்தது. இயற்கை வனப்புக்களின் அழகைக் காணும்போதெல்லாம் உமாவின் கட்டுக்கோப்பான உடலின் வனப்பே அவன் மனவானில் மிதக்கலாயிற்று. சூரிய வெப்பத்தையும் பொருட்படுத்தாது தோட்டங்களில் நின்று வேலை செய்யும் தொழிலாளர்களோடு தானும் ஒருவனாகச் சேர்ந்து நின்று பாடுபட்டால்......? இப்படிப் பட்ட விசித்திர நினைவுகளோடு ஒன்றியவனாய்க் காரைச் செலுத்திக் கொண்டிருந்தான். உரும்பராயிலுள்ள தன் சிநேகிதன் ஒருவனைக் கல்யாணத்துக்கு அழைப்பதற்காகவே சென்று கொண்டிருந்தான்.

அன்றைய பொழுது கழிந்தால், மறுநாள் திருமணம். உமாவோடு சேர்ந்து மாலை வேளைகளில் தோட்டப்பகுதிகளில் உலாவி வரவேண்டும். தனிமையாய் அனுபவிக்கும் ஊமையின்பத்தைப் பார்க்கிலும், பார்ப்பதை மற்றவர்களுக்குச் சொல்லியும், கேட்டும் அனுபவிக்கும் இன்பத்திற்கு நிகரே இருக்க முடியாது என்று நினைத்தவனாய், அந்த நினைவிலேயே மிதந்து கொண்டிருந்தான்.

அதே சமயம் சாய்வு நாற்காலியில் சாய்ந்தபடியே கிடந்த உமாதேவியின் நினைவில் பழைய நினைவுகளுடன்

புதிய மாற்றமும் சேர்ந்து அலை மோதியது. எத்தனையோ எண்ணக் கோட்டைகள் கட்டியிருந்தாள். அவை யாவும் இடிந்து சிதைந்து சாம்பலாகி விட்டதாகவே நினைத்தாள். கடிதம் வந்த பின்பு சங்கரைச் சந்திக்க அவளால் முடியவில்லை. சம்பிரதாயப்படி பொன்னுருக்கல் முடிந்தால் மாப்பிள்ளை பெண் வீட்டிற்குத் திருமணத்தன்றுதான் வர முடியும். அதற்கு முன்பு செல்வதில்லை. அதனால்தான் அவனைச் சந்தித்துக் கதைத்து அவளுடைய சந்தேகத்தினைத் தீர்த்துக்கொள்ள முடியவில்லை.

கல்யாணத்துக்குத் திகதி குறிக்கப்பட்டு விட்டால் ஒரு பெண்ணின் மனதில் ஆயிரம் நினைவுகளும், ஆனந்தக் கனவுகளும் தோன்றி மறைந்து கொண்டிருக்குமே! அந்த நினைவுக்கும், ஆனந்தத்துக்கும் இடமில்லாத வகையில் அவளுடைய அந்தராத்மா தூங்கிக் கிடந்தது. அவளுடைய மனதில் பதிந்துவிட்ட அவனுடைய் எழில் முகம் நினைவில் மிதக்கும் பொழுது, அந்த முகத்தில் எந்த விதமான கள்ளமோ, கபடமோ தோன்றவில்லையே! அத்தகைய உணர்வுகளுக்கு அவன் முகத்திலேயே இடமில்லாதபோது அவன் உள்ளமோ, உடலோ மாசுபட்டிருக்குமா? இருக்கக்கூடாது என்பதுதான் அவள் விருப்பமும். ஆனால், அவளைப் பொறுத்தமட்டில் அவள் சந்தேகங்களை உறுதி செய்யும் ஆதாரங்கள் இருக்கின்றனவே! அவளால் எதுவிதமான முடிவுக்கும் வர முடியவில்லை.

பனி தூங்கும் தென்னங் கீற்றுக்களும், செம்மஞ்சள் நிறத்தில் குலை தள்ளி நின்ற செவ்விளநீர் மரங்களும் நிலவொளியில் பார்ப்பதற்கே ஒரு புது உலகத்தை நினைவூட்டின. புள்ளினங்களின் ''கீச்சுக் கீச்சுச்'' சப்தமும், வண்டினங்களின் ரீங்கார ஓசையும் அந்தப் பிராந்தியத்துக்கே உரித்தான ஓர் தனிச் சொத்துப் போன்று விளங்க அங்கே பட்டாம்பூச்சியெனப் பறந்து திரிகின்றாள் உமாதேவி. மூன்று அடிக்குமேல் வளராத ஒரு செவ்விளநீர்க்கன்று குலைதள்ளி நின்றிருந்தது. அதைப்

பார்த்தபொழுது சங்கர் ஒருநாள் கூறிய அழகான உவமைகளின் நினைவு அவள் உடலில் ஒரு புல்லரிப்பை ஏற்படுத்தியது. பசும் பொன்னிறத்தில் பளபளத்த அந்த இளந் தெங்குக் குரும்பையை வருடினாள். அதில் உள்ள மென்மை...அவள் மெய்மறந்து நின்றபொழுது அவளை அணைத்து வருடியது யார் என்று துடித்துத் திரும்பினாள். அங்கு சிரித்த முகத்துடன் ''என்ன உமா?'' என்றபடி நின்றிருந்தான் சங்கர்.

''நீங்கள்...''

''உன்...இது அப்படியொன்றும் பிரமாதமில்லை. கவிஞர்கள், கற்பனைவாதிகளின் ஊறல்கள். போயும் போயும் நீர் இதில்போய் மயங்கி நிற்கின்றீரே'' என்றான்.

''போங்க சங்கர், எப்ப பார்த்தாலும் உங்களுக்குக் கேலிதான்'' சிணுங்கினாள் உமாதேவி.

''நீ போகச் சொன்னால் எனக்கு இங்கென்ன வேலை'' என்று திரும்பினான்.

''சங்கர்!'' என்று ஓடிவந்து அவனைக்கட்டி அணைத்துக் கொண்டாள்.

அந்த அணைப்பும், சுகமும் அப்படியே பல நிமிடங்கள் நிலைத்து நின்றன. அவள் உடல் எங்கும் சுடுசரங்கள் சென்று ஊடுருவுவது போன்ற வேதனை நிறைந்த இன்பம். அந்த வேதனைக்கு ஒத்தடம் கொடுப்பது போன்று மேலும் மேலும் அவனை இறுகத் தழுவினாள் உமாதேவி. அந்தத் தழுவலின் இறுக்கம் மேலும் கூடியபொழுது, ''உமா! என்னை இப்படியே கொன்று விடுவாய் போலிருக்கே'' என்று கேலியாகக் கேட்டான் சங்கர்.

அவளுடைய புண்பட்டிருந்த இதயத்தில் வேல் கொண்டு குத்தியது போலிருந்தது அவனுடைய கேள்வி. அவள் அடிமனத்தில் புதைந்து கிடந்த சந்தேக விஷம் அவள் உடல் எங்கும் பரவியது.

''விடுங்கள் என்னை'' என்று தூர விலகி நின்றாள்.

''என்ன நடந்தது? நான் சும்மா கேலியாகத்தானே கூறினேன் உமா''

''உங்களுக்குக் கேலிதான். ஒரு பெண்ணின் மனதைப் புண்படுத்துவது, அவளைச் சாகடிப்பது எல்லாமே உங்களுக்குக் கேலிதான்''

''உமா! நீ...நீ...'' என்று பின்னே நகர்ந்தான்.

''அவளுக்குப் பைத்தியம். நீங்கள் வாருங்கள் சங்கர்'' என்று அவனுக்குப் பின்னே நின்று ஓர் இனிய பெண் குரல் அழைத்தது. அவள் யார் என்று உமாவுக்குத் தெரியவில்லை. அவள் உருவ அமைப்பில் வசுமதியை ஒத்திருந்தாலும் தெளிவாக அவளைப் புரிந்து கொள்ள முடியவில்லை. உமாதேவி பார்த்துக்கொண்டு நிற்கும்பொழுதே சங்கரின் கரங்களைப்பற்றி இழுத்துக்கொண்டு சென்று மறைந்தாள் அந்தப் பெண்.

கண நேரத்தில் நடந்துவிட்ட அந்த நிகழ்ச்சியினால் திகைத்து நின்றுவிட்ட உமாதேவியின் பார்வையைவிட்டு அவர்கள் மறைந்துவிட்டபொழுது ''சங்கர்'' என்று பலமாகக் கதறிவிட்டாள் உமாதேவி.

''என்ன உமா, பகலிலேயே கனவு காண்கின்றாயா'' என்று அவளைக் கேலி செய்தாள் தாய் கனகம்.

''இல்லேம்மா வந்து...''

''போடி பைத்தியம். யாராவது பார்த்தால் சிரிக்கப் போகின்றார்கள். எழுந்து முகத்தைக் கழுவிவிட்டு வா'' என்று கூறிவிட்டுச் சென்றாள் கனகம்.

பெற்றவளின் முன் அவமானப்பட நேர்ந்தாலும் அவள் கனவில் கண்ட காட்சி...? மனப்பிரமையின் பிரதிபலிப்பா? இல்லை அப்படி ஒரு பயங்கரம் அவளுடைய எதிர்காலத்தில் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றதா? ''உமா! நாணயம் என்பது மனிதனுக்கு வேண்டிய ஒன்றுதான். ஆனால், அதற்குக்கூட இரு பக்கங்கள் உண்டு. அதேபோல மனிதனுக்கும் மாறுபட்ட குணங்கள் இருக்கலாம். அதற்காக ஒரு பக்கத்தினை மட்டும் நாம் விரும்ப முடியுமா?'' என்று ஒருநாள் சிவசங்கர் கூறினாரே,

அது ஏன்? தனக்காகக் கூறியதாயிருக்குமோ? இல்லையெனில் பொதுவாகக் கூறியதாயிருக்குமோ?

எந்த வழியில் சுழன்று வந்தாலும் பதில் கிடைக்காத கேள்விகளே ஒன்றன்பின் ஒன்ருகச் சுழன்றுகொண்டு வந்தன. கேள்விகளுக்குப் பதில் கிடைத்து விட்டால் மனம் நிம்மதியடையும். ஆனல், பதில் கிடைக்காத கேள்விகளால் அவள் இதயம் பாதிக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

வீண் நினைவுகள் மனித மனத்தைப் பாழடிப்பதுடன், உடலையும் பாதிக்கின்றது. இதனுல்தான் மிருகங்களுக்கு அப்படிப்பட்ட சிந்திக்கும் திறனை இறைவன் வைக்காது விட்டான் போலும். இல்லையெனில் அவைகளும் மனிதர்களைப்போல சிந்தித்துச் சோம்பிக் கிடந்துழல ஆரம்பித்து விடலாம் என எண்ணியவாறே எழுந்து சென்ருள் உமாதேவி.

## 12.

சிவகாமி அம்பாள் ஆலயத்தில் சங்கர், உமாதேவிக்கு திருமணநாண் சூட்டினுன். இணுவை நகரமே கண்டிராத வகையில் பிரபல்யமான திருமணவிழாவாக அது அமைந்திருந்தது. நண்பர்கள், உறவினர்கள் மட்டுமின்றி, வடமாநிலக் கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த பெரும் அதிகாரிகள் முதற்கொண்டு சிறு ஊழியர்கள் வரையிலும், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட கல்யாண ஊர்வலமே கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. ஊரெல்லாம் சிறியோர் முதல் பெரியோர்வரை இதே கதையாயிருந்தது.

எல்லோரும் விடைபெற்றுச் சென்ருர்கள். வசுமதி அவளிடம் விடைபெற வந்தபொழுது, ''உமா, குழந்

னைதத் தனமாக நடந்துகொள்ளாதே. புத்திசாலியாய் நடந்துகொள். நமக்கென்று லட்சியம், கொள்கை இனி ஏது உமா. எல்லாம் உனக்கு அவரேதான்'' என்றாள்.

அவளுடைய கூற்று உமாவுக்கு ஆத்திரத்தை உண்டு பண்ணியது. என்னைக் கேலி பண்ணுகிறாளா? என்னுடைய எண்ணத் தோல்வியைக் குத்திக் காட்டுகிறாளா? இல்லையெனில் என்னைப்போலத்தான் எல்லாப் பெண்களும். நீ சும்மா வேஷம் போட்டாயாடி உமா என்று இடித்துக் காட்டிப் புத்தி சொல்லுகின்றாளா? கேள்விக்கு மேல் கேள்வியாக எழுந்து அவள் உள்ளத்திலேயே ஒரு பூகம்பத்தை ஏற்படுத்தியது. ஆனால், அதை அடக்கிக்கொண்டு, ''நன்றி, நீ கூறுவதற்கு நன்றி'' என்றாள்.

அதே சமயம் தம்பித்துரை ஆசிரியரும் அவர் மனைவியும் வந்தனர். அவர்களைப் பார்த்தபொழுது நன்றி உணர்ச்சி மேலிட, அவளுடைய விழிகள் கண்ணீர் பொழிந்தன. அவை பன்னீர் மழையென அவள் நெஞ்சையும் குளிர்வித்தது.

''உமா! மனம்போல வாழ்வு எல்லோருக்கும் கிடைப்பதில்லை. ஆனால், எவனை உன்னுடையவனாக நினைத்தாயோ, அவனே உன் லட்சியக் கணவனாகக் கிடைத்திருக்கிறான். சகல செல்வமும் பெற்று பெருவாழ்வு வாழ இறைவன் அருள் புரியட்டும்'' என்று வாழ்த்தினார்.

எல்லோரும் விடைபெற்றுச் சென்றார்கள். மாளிகை போன்ற அந்த வீட்டில் சனசந்தடியே ஓய்ந்துவிட்டது. பட்டுவேட்டி சரசரக்க, மகிழ்ச்சி பொங்கும் மனத்தினனாய் உமாவுக்குப் பக்கத்தில் வந்து நின்றான் சிவசங்கர். அவனை நிமிர்ந்து பார்த்தபொழுது அவள் தன்நிலை மறந்தாள். அவன் தவறான செயல்களைச் செய்திருப்பான் என்று நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. களங்கமோ கலக்கமோ இன்றித் தெளிந்த நீரோடை போன்று தோன்றிய அவன் எளில் வதனத்தில் வேறு எந்தவிதமான உணர்வுகளையுமே காணமுடியவில்லை. மீண்டும் தலைகுனிந்து நின்றாள்.

''உமா! பல நாட்களாக உம்மோடு கதைக்கச் சந்தர்ப்பமே கிடைக்கவில்லை. ஆனால், இப்பொழுதுதான் கொஞ்சம் லீவு கிடைத்திருக்கின்றது'' என்று கூறி கீழே விரித்திருந்த ஒரு கம்பளத்தின்மீது உட்கார்ந்தான்.

''என்ன கதைக்க வேண்டுமென்று நினைத்தீர்கள்?'' என்று கூறி அவளும் இருந்தாள்.

''அப்படி ஒன்றும் இல்லை. ஆனால், உம்மோடு கதைக்கச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்றேன்'' எனக் கூறியவன், ''என்னப்பா பொம்மைகளை வைத்துச் சிறுவர்கள் கல்யாணம்செய்து விளையாடுவதுபோல எங்களை வைத்து... எனக்கு ஒரே களைப்பாயிருக்கு, இல்லையா உமா?''

''அப்படியா?'' என்றவள் எதுவுமே பேசாமல் சுட்டு விரலால் நிலத்தைக் கீறிக்கொண்டிருந்தாள்.

''உமா, எங்கள் ''டிரக்டர்'' இன்றுதான் உம்மைப் பற்றிக் கேட்டார். அப்புறம் சில முஸ்பாத்தியான கதைகளும் கூறினார்'' என்று கூறிச் சிரித்தான்.

அவன் கதை கதையாய் எவ்வளவோ கூறினான். ஆனால், அவளோ அவனுடைய கதைகளில் எதுவித அக்கறையுமின்றி இருந்தாள். அவன் கதைகளை அவள் கேட்டதாகவும் தெரியவில்லை. அலட்சிய மனோபாவத்துடன் மௌனமாக இருந்தாள். அவள் மனம் விகாரப்பட்டிருந்தது. அதன் காரணமாய் அவளால் எதையும் ஒருமைப்பாட்டுடனோ, அமைதியுடனோ ஏற்கவோ, கேட்கவோ முடியாதிருந்தது.

கொள்கை, லட்சியம் என்பவற்றைக் கடைப்பிடிக்கும் உள்ளத்தில் வலுவான நம்பிக்கைகள் இருக்க வேண்டும். அவை இல்லாத இடத்தில் மன நிம்மதியற்ற பதட்ட நிலையே என்றும் குடியிருக்கும். எதையும் தாங்கும் பக்குவமற்ற நிலையில் காரணமின்றிக் கோபமும், நன்மை தீமைகளை ஆராய்ந்தறியாது திடீரென முடிவுகளை மேற்கொள்ளும் நிதானமற்ற நிலையும், அவர்களுடைய வாழ்க்கையைத் துன்பப் படுகுழியில் தள்ளிவிடக் கூடும். அந்த நிலையையும் அறிவின் துணைகொண்டு தடுத்துவிடலாம்.

ஆயினும், தன் லட்சியத்தின் பிடிப்புக்கள் வலுவிழந்து, ஏமாற்றம் எனும் சூழ்நிலை தோன்றும்பொழுது எல்லா வற்றையுமே சந்தேக இருள் சூழ்ந்துவிடுகின்றது. இதே நிலையில்தான் உமாதேவி தடுமாறினாள். அவன் ஏற்றிய புதிய ஒளிகூட அவளின் சந்தேகப்புயலில் அவிந்து இருள் படர்ந்துகொண்டிருந்தது. அவனுடைய போக்கில் சில மாறுதல்கள் இருப்பதை உணர்ந்துகொண்ட சங்கர் மேலும் அவளுக்குச் சமீபமாக நெருங்கி உட்கார்ந் தான்.

''யாராவது பார்த்தால் சிரிப்பாங்க. அங்கேயே இருங்கள்'' என்றாள் உமாதேவி.

''உம்மோடுதானே. யார் சிரித்தால் எனக்கென்ன?''

''அது சரி, கூழைவாலன், நுளம்புக் கடிக்கு அஞ்சாது என்பார்களே; அப்படியா?''

''உமா! என்ன உமது பேச்செல்லாம் ஒருமாதிரியா யிருக்கு...'' என்று அவளை ஏற இறங்கப் பார்த்தான். அவளுடைய அழகிய முகத்தில் கடுகடுப்பு நிறைந்து காணப்பட்டது.

''ஏன் உமா, உன் உடம்புக்கு ஏதும்...?''

''உடம்புக்கு ஒன்றுமில்லை. மனதுக்குத்தான். அது பற்றிப் பின்பு பேசுவோம், பிளீஸ், நீங்கள் இப்போ என் னுடன் ஒன்றுமே பேசாமலிருப்பதே நல்லது'' என்றாள். அவளுடைய முக உணர்வுகளை அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை. உமாதேவி தலை குனிந்து கொண்டிருந்தாள்.

''உமா! என்னைப் பார்!'' என்றான் சங்கர்.

''பிளீஸ், என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள்.''

''நீயா இப்படி......? ஓ...கே... ஓ...கே...'' என்று எழுந்து சென்றான்.

அதேசமயம் அவனுடைய அண்ணன் மகன் குமார் ஓடிவந்து அவன் கரங்களைப் பற்றியவாறே, ''ஏன் சித் தப்பா, சித்தி பேசினாங்களா?'' என்றான்.

''ஏன்டா அப்படிக் கேட்கின்றாய்?''

''பாட்டி ஏசினால், உங்கள் முகம் எப்படி மாறிப் போமோ அப்படி இருக்கே சித்தப்பா.''

''அப்படி ஒன்றுமில்லையடா குமார். சித்திக்குத் தலை வலி பிடிச்சுட்டுதாம், வாடா வெளியே போய் வரலாம்'' என்று அவனையும் அழைத்துக்கொண்டு வெளி விருந் தைப் பக்கமாகச் சென்றான்.

இரவு மணி எட்டாகிவிட்டதுஎன்பதை அறிந்ததும் சௌந்தரம்மாள் எழுந்து வந்தாள். மருமகள் மட்டுமே தனியாக உட்கார்ந்துகொண்டிருப்பதைப் பார்த்து விட்டு, ''ஏனம்மா சங்கர் எங்கே'' என்றாள்?

''குமாருடன் வெளியே போனார்'' என்று ஏதுமறியா தவள்போல் கூறினாள் உமாதேவி.

''குமார் குமார்'' என்று அழைத்துக்கொண்டே வெளியே சென்றாள் சௌந்தரம்மாள்.

வெளியே விருந்தையில் நிம்மதியாகப் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தான் குமார். சங்கர் ஓர் சாய்வு நாற்காலியில் படுத்தபடியே கண்களை மூடியபடி கிடந்த வன் சௌந்தரம்மாளைப் பார்த்ததும் திடுக்கிட்டு எழுந் தான்.

''ஏன்டா சங்கர், அந்தப் பெண்ணைத் தனியே அங்கே விட்டிட்டு நீ இங்கே என்ன செய்கிறாய்?''

''அம்மா, இவன் குமார் வந்து...'' என்று தடு மாறினான்.

''டேய் சங்கர், அவன் சிறுபிள்ளை. அதற்காக நீயும் சிறுபிள்ளைத்தனமாக நடந்து கொள்ளாதே. நீ படித்த தவன். உனக்கு நான் புத்திசொல்ல வரவில்லை. புத்தியாய் நீ நடந்துகொள்ளப்பா.''

''இப்ப என்னம்மா நடந்தது? உமாதான் சொன் னாள் தலைவலி மாதிரி இருக்கு. கொஞ்ச நேரம் தூங் கணும் போலிருக்கு என்று. அதுதான் நான் குமாருடன் இங்கே...,'' என்று கூறிச் சிரித்தான். சௌந்தரம்மாளுக் கும் சிரிப்பு வந்துவிட்டது.

''ஏனம்மா உமா, தூங்கப்போறதாய்க் கூறிவிட்டு நீயும் உட்கார்ந்திட்டிருக்கே. அவனும் அங்கே உட்கார்ந்திட்டிருக்கான். படிச்ச பிள்ளைகளாம் போங்கள்'' என்று கூறிவிட்டு, ''அதுசரி, வாருங்கள் சாப்பிடலாம்'' என்று அவர்களைச் சாப்பிடக் கூப்பிட்டாள். உமா, சௌந்தரம்மாள் பின்னலேயே சென்றாள்.

இரவை விலக்கிவிட்டு நிலவு மலர்ந்திருந்தது. நிலவு மங்கை நிர்வாணமாகப் பவனிவந்து கொண்டிருந்தாள். திறந்திருந்த ஜன்னலினூடே இக் காட்சியைப் பார்த்துக்கொண்டு நின்ற உமாதேவி, கதவு பூட்டப்படும் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள். திருமண உடைகளைக் களைந்துவிட்டு சாரத்துடன் மேலே கையில்லாத பனியனும் அணிந்துகொண்டு நின்றிருந்தான் சங்கர். அவள் உள்ளமும் உடலும் மெல்ல நடுங்கின. பின்னர் பழையபடி ஜன்னலூடாகத் தெரிந்த வானத்தை வெறிக்கப் பார்த்தபடி நின்றாள்.

அடிமேல் அடி வைத்து அவளை நெருங்கிக்கொண்டிருந்தான் சங்கர். அவன் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் அவள் இதயத்தின்மேல் வைத்து அழுத்தி மிதிப்பதுபோலிருந்தது. நெஞ்சு படக் படக்கெனத் துடித்துக் கொண்டிருந்தது. சங்கர் பண்பாளன். அவள் மனநிலையை ஏற்கனவே அறிந்தவனாகையால் அவளோடு பழைய சுபாவத்துடன் கலகலப்பாகவே பேச எண்ணினான்.

''உமா! என்ன உடுப்பைக்கூட மாற்றாது வானத்தைப் பார்த்துக்கொண்டு நிற்கின்றாய்?'' என்றான்.

அவள் பேசவில்லை. திரும்பிப் பார்க்கவுமில்லை. என்ன நினைத்துக்கொண்டு அப்படி நின்றாள் என்றுகூட அவனால் உணரமுடியவில்லை.

''உமா இங்கே பார்'' என்று அவள் தோள்களைப் பற்றித் திருப்பினான் சங்கர்.

அவள் விலகிநின்றாள். அவளுடைய அழகிய காவியக் கண்கள் கலங்கியிருந்தன.

''என்ன நடந்தது? ஏன் இப்படி நிற்கின்றாய்? உன் மனம் நோகும்படி நான் ஏதும் செய்தேனா? அல்லது, இங்கே ஏதும் உனக்குப் பிடிக்காத விடயம் நடந்ததா? ஒன்றுமே சொல்லாமல் இப்படி நீ நடந்துகொள்வது ஏன் உமா? சொல்லேன் உமா?''

''சொல்லலாம் என்றுதான் முயற்சிக்கின்றேன். முடியவில்லையே. எப்படி ஆரம்பித்து எப்படி முடிப்பதென்று புரியவில்லையே. நீங்கள் எனக்கு மறைத்துவிட்ட விடயத்தை எப்படி உங்களிடம் கேட்பது?'' அவள் விழிகளில் நீரும், வாயிலிருந்து சொற்களும் கலந்து சிதறின.

''உமா! நீ எதுவானாலும் என்னிடம் கேட்பதற்குப் பயப்படவேண்டாம். மனதில் வைத்துக் குமைவதுதான் சரியில்லை. அது எனக்கும் பிடிக்காது.''

''மனதில் ஒன்றை வைத்துக்கொண்டு உங்களோடு ஆனந்தமாகச் சிரிக்கவோ மகிழவோ முடியவில்லையே.''

''அப்படி என்னதான் கேட்கணும்? மனதைத் திறந்து சொல்லேன்?''

''சங்கர்! எனக்குக் கிடைத்த பெருவாழ்வு குறித்து ஊரார் பெருமைப்படலாம்; என் பெற்றோர் மகிழலாம். என் உறவினர்கள், நண்பர்கள் பெருமைப்படலாம். ஆனால், நான் முன்பு இந்த வாழ்வு கிடைத்ததையிட்டு மகிழ்ந்தவள்தான். என் லட்சிய வாழ்வுக்கு ஆண்டவன் வழிகாட்டி விட்டதாக மகிழ்ந்தேன். ஆனால், கண்ணை மூடிக்கொண்டு வீழ்ந்துவிட்டேன் என்று பின்புதான் அறிந்தேன். நீங்கள் என்னை ஏமாற்றி விட்டீர்கள்?'' எனக் கூறிக் கோவெனக் கதறினாள் உமாதேவி.

சங்கர் எதுவும் புரியாமல் விழித்தான். அவனுக்கு என்ன பேசுவதென்றே புரியவில்லை. 'அவள் சுய நினைவோடு பேசுகின்றாளா? அல்லது சித்த சுவாதீனமா?' என்று தடுமாறினான். அவள், தன்னை ஏமாற்றியதாகக் கூறுகின்றாளே. அது என்னவாக இருக்கும்? அவளிடமே கேட்டுத் தெரிந்துகொள்வோமே என்று எண்ணியவனாக

அவளை நிமிர்ந்து பார்த்தான். அவளோ நிலத்தைப் பார்த்தவாறு நின்றிருந்தாள்.

''உமா, நீ படித்தவள்., லட்சியம் என்று வேறு பேசிக் கொள்கின்ருய். ஆகவேதான் நானும் உன் போக்கில் அவசரமின்றி அமைதியாக இருக்கின்றேன். நீயும் அவசரப்படாதே உமா. இப்படி உட்கார்ந்து பேசுவோமே. உனக்கு என்ன சந்தேகமோ அதைத் தீர்த்து வைக்கின்றேன். ஆனல், உன்னை ஏமாற்றிவிட்டேன் என்று கூறுகின்ருயே. அதை என்னுல் ஏற்றுக்கொள்ளவோ, பொறுமையுடன் கேட்கவோ முடியவில்லையே உமா.''

''என் மனம் உங்களுக்குத் தெரியும். நான் உங்களிடம் யாவும் கூறியிருக்கின்றேன். அதன் பின்பும் உங்களைப் பற்றிய விடயங்களை மறைத்துவிட்டீர்கள். இவள் வேறு ஊரவள்தானே. எங்கே தெரிந்துகொள்ளப்போகின்ருள் என்ற நினைப்புத்தானே?''

''உமா தேவையில்லாமல் வார்த்தைகளை அடுக்கிக் கொண்டு போகாதே. வாழ்க்கைப் பாதையில் சட்டத்தினுலும் சம்பிரதாயத்தினுலும் எம்மை பிணைத்துக் கொண்டாலும், இவற்றுக்கு அப்பாற்பட்ட இயற்கைப் பந்தத்துக்கு ஆளாக நிற்கும் இவ்வேளையில் ஓர் எதிரியுடன் பேசுவது போலப் பேசுகின்ருயே! நான் உன்னுடையவன். நீ என்னுடையவள். எதையும் இருவருமாக மனம்விட்டுப் பேசலாம்—தீர்க்கலாம். சுமுகமாகப் போகலாம்; இல்லையா?''

''அதைத் தீர்மானிக்கவேண்டியவள் நான். நீங்கள் கூறியது போன்று நான் உங்களுடையவளாகச் சட்டத்திலுலும், சம்பிரதாயச் சடங்குகளினுலும்தான் ஆக்கப்பட்டுள்ளேனே தவிர, என் மனப்பூர்வமாக இன்னும் இல்லை.''

''உண்மைதான். நீ அப்படி நினைக்கலாம். ஆனல், என்று உனக்கு என் இதயத்தில் இடமளித்தேனே அன்று முதல் நீ என்னுடையவள்தான். அதை என்னுல்கூட இனி மாற்றி அமைக்க முடியாது உமா'' என்று கூறியபொழுது

அவன் குரலில், பேச்சில் ஏன் உள்ளத்திலும் ஒருவித தளர்வு ஏற்பட்டது. அதைத் தவறாக நினைத்துவிட்டாள் உமாதேவி.

எதிர்ப்புக் காட்டுபவனிடம் தளர்ச்சி ஏற்படும் பொழுது மற்றவன் அதை அவனது பலவீனமாகக் கருதித் தனது பேச்சுக்கு, கொள்கைக்கு மேலும் விரைவான வலுவூட்டுகின்றான். உமாதேவியும் அப்படித்தான் நினைத்துத் தனது மன எழுச்சியின்—உணர்வின் விகாரங்களை வெளியிட ஆரம்பித்தாள்.

"சங்கர், நீங்கள் பொய் பேசமாட்டீர்கள் என்று கூறியுள்ளீர்கள்?"

"இப்பமட்டும் என்னவாம்?"

"சரி. அப்படியாயின் உங்கள் அண்ணியின் மரணம் எப்படி ஏற்பட்டதென்று கூறுங்கள்?"

"சிவபூசையில் கரடி நுழைந்தது என்பார்களே அது போல இன்றைய தினத்தில் இப்படிப்பட்ட கேள்விகள் தானா கேட்கணும்?"

"உங்களுடைய சமாதானங்கள் எதுவும் எனக்குத் தேவையில்லை சங்கர். நான் கேட்ட கேள்விக்கு நேரடியான பதில் தேவை."

"ஆல் ரைட் உமா. அண்ணி பற்றி என்ன நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்?"

"உங்கள் அண்ணியின் மரணம் பற்றி முதலில் கூறுங்கள்?"

"தற்கொலை. அதாவது சுவிசைட்."

"ஏன் தற்கொலை செய்துகொண்டார்கள்?"

"உமா! நீ படித்தவள். ஒருவருடைய மனதை மற்றவர் பெரும்பாலும் புரிந்துகொள்வதில்லை. உதாரணமாக உன்னையே எடுத்துக்கொள். நீ ஏன் இப்படியெல்லாம் என்னிடம் நடந்து கொள்கின்றாய்? நீதிமன்றத்தில் விசாரணை செய்வதுபோல நடந்துகொள்கின்றாயே. அண்ணி மரணமடைந்தபொழுது அதுபற்றிய காரணமும் எனக்

ருத் தெரியாமல்தானிருந்தது. ஆனால்... அண்ணியின் மரணத்தின்பின்பு அதுபற்றிய காரணம் எனக்குத் தெரிய வந்தது. அந்த விடயத்தை யாருக்கும் சொல்ல நான் விரும்பவில்லை.''

''உங்கள் அண்ணிக்கு ஒரு தங்கை உண்டல்லவா?''

''இருக்கிறாள்.''

''அவளை ஏன் நீங்கள் மணம் முடித்திருக்கக் கூடாது?''

''அவர்கள் கேட்டவர்கள்தான். அம்மாவுக்கு விருப்ப மில்லை.''

''காரணம்?''

''அவர்கள்மீது வெறுப்பாக இருக்கலாம்.''

''நீங்கள் கேட்டு அவர்கள் வேண்டாம் என்று மறுத் தார்கள் இல்லையா?''

''உமா! நான் சொல்வதுதான் உண்மை. நீ தவறாக நினைத்து மனதைக் குழப்பிக்கொண்டிருக்கின்றாய். தவ றான நினைவுகளை மனதில் வளர்த்து நீ குழம்பித் தவிப் பது போதாமல் என்னையும் மனம் நோக வைக்கின்றாய். வேறு என்ன இன்னும் கேட்கணும்?''

''உங்கள் அண்ணா, 'அக்ஸிடன்ரில்' இறந்தாரா அல் லது வேண்டுமென்று 'சுவிசைட்' பண்ணினாரா?''

''படித்த முட்டாள் நீ என்பதற்கு இதைவிட வேறு கேள்வி வேண்டுமா உமா? அக்ஸிடன்ற் என்பதற்குப் பொருள் தெரிந்தால், இப்படி நீ கேட்கமாட்டாய். விபத்து நினையாப் பிரகாரமாக ஏற்படுவது. தற்கொலை விரும்பிச் செய்வது. டூ யூ அன்டஸ்ரான் உமா.''

''ஜெஸ். ஐ அன்டஸ்ருட்.''

''உமா, இவற்றுக்கும் எனக்கும் எதுவித சம்பந்த மும் இல்லை. நீ ஏன் இவற்றையெல்லாம் கேட்டுப் பொன்னான நாளை மண்ணாக்குகின்றாய்?''

''உங்களுக்கும் இந்த விடயத்துக்கும் தொடர்பு உண்டு என்றுதானே நான் இதுபற்றிக் கேட்கின்றேன்.

என் மனதில் உங்களைப் பற்றிய கெட்ட எண்ணங்களைச் சுமந்து கொண்டு உங்களைத் தீண்ட என்னால் முடிய வில்லை. என் கணவர் உத்தமராய், சத்தியசீலராய் இருக்க வேண்டுமென்ற என் உயர்ந்த கோட்பாடுகளுக்கு உரியவர் என்று உங்களை நினைத்தேன். ஆனால்...'' அவள் குலுங்கிக் குலுங்கி அழுதாள். அவள் அப்படி அழுவதைப் பார்க்கச் சகிக்க முடியாதவனாக், அவளின் தலையை நிமிர்த்தினான்.

''டோன்ற் ரச் மீ'' என்று துடித்துப் பின்வாங்கினாள் உமா.

''உமா! நீ என்னை......''

''சங்கர், நீங்கள் உண்மையானவர் உத்தமர் என்றால், உங்கள் அண்ணி ஏன் இறந்தாள் என்ற காரணத்தை மறைக்காமல் எனக்குக் கூறுங்கள்.''

''உண்மைக்கும், சத்தியத்துக்கும் மதிப்பளித்ததினால் தான் அதை உனக்கு கூறமுடியாத நிலையில் இருக்கின்றேன்.''

''பொய்! பொய்!! உங்களுக்கும் அவள் மரணத்துக்கும் தொடர்பு உண்டு.''

''சடப். மீண்டும் அப்படிச் சொல்லி பாவத்துக் காளாகாதே உமா. காரணம் எனக்குத் தெரியும்தான். ஆனால் அதை வெளியிட முடியாது.''

''இதனால் உங்கள் நலன், என் வாழ்வே பாதிக்கப் படும் என்று புரியவில்லையா?''

''உமா! ஒருவன் தன் நலன் பாதிக்கப்படும் என்று தெரியும்பொழுது சத்தியத்தைக் கொன்றுவிடலாம். உண்மையைக் கைவிட்டுவிடலாம். ஆனால், மனைவி, மக்களை ஏலத்தில் விற்று, புலையனுக்கு அடிமையாகிப் பிணம் சுட்டபொழுதும் சத்தியமே பெரிது, பொய் சொல்ல மாட்டேன் என்றான் அரிச்சந்திரன். அந்த ஒரே காரணத்தினால் இன்றும் உண்மையென்றால் அது அரிச்சந்திரன் என்று அவன் பெருமை வாழ்கின்றது. நாடு, நகரம் மட்டு மன்றி, மனைவி, மக்களை இழந்தபொழுதும் அவன் உள்

ளம் தளரவில்லே. கேவலம் என் வாழ்வுக்காக......? அது வும் கணநேரம் கொண்டாடும் உறவுக்காக, இறந்து போன ஒரு ஜீவனின் வேண்டுகோளை நிராகரிக்கத்தான் வேண்டுமா?''

''உயிரோடு இருக்கும்— உங்களை விரும்பும் ஒருத்திக் காக உங்களால் இரக்கப்பட முடியவில்லை. செத்துப் போன ஒருத்திக்கு...... நீங்கள்... சங்கர் இப்போதுதான் எனக்குப் பல உண்மைகள் புரிகின்றன.''

''என்ன புரிகின்றது. பைத்தியக்காரத் தனமாக உளறும் உளறல்கள் எல்லாம் உண்மையாகிவிடுமா? உயி ரோடு இருக்கின்ருய் என்பதற்காக உன் உளறல்களைக் கேட்டு நான் நம்பிக்கைத் துரோகியாகணுமா? என் சொல்லை நம்ப மறுக்கும் நீ அந்தக் காரணத்தைக் கூறி ஞலும் நம்புவாய் என்பது என்ன நிச்சயம்? பிடிவாதக் காரர்களுக்கு எது உண்மையென்பது தெரியாது. தாங் கள் நினைப்பதுதான் உண்மையென்று சாதிப்பார்கள். மற்றவர்கள் கூறுவது அவர்களுக்குப் பெரிதில்லை.''

''சங்கர், நீங்கள் என்னை வேண்டுமென்றே 'இன் சல்ட்' பண்ணுறீங்கள். அதுவும் வேண்டுமென்றே செய் கின்றீர்கள்.''

''உன்னை புத்தியுள்ள பெண் என்றுதான் நினைத் தேன். உன்னைவிட உன் சிநேகிதி நல்லம்போலிருக்கே. யாரோ உன் வாழ்வில் பொருமைப்பட்டு இல்லாத பொல்லாத கதைகளை முடித்துவிட்டிருக்கின்ருர்கள். நீயும் அதை நம்பி... எப்படியாவது செய். ஆனல், உமா! சத் தியமாகச் சொல்லுகின்றேன். உன் லட்சிய நினைவுகளுக்கு மாருக நான் என்றுமே வாழ்ந்ததில்லை. உன்னை மனப்பூர்வ மாக விரும்பினேன். விரும்புகின்றேன். உன் வாழ்க்கையை கடுகளவேனும் துன்பத்துக்குள்ளாக்க வேண்டுமென்று நான் நினைத்ததில்லை. உன்னுடையதும் என்னுடையதும் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளாயிருந்தால் நான் ஏற்கனவே கூறியிருப்பேன். நம்மிருவருக்கும் அப்பாற்பட்டவைகளை

உனக்கு நான் கூறவில்லை. அது தேவையுமில்லை. அண்ணி யைப் பற்றிய கதைகளை மறந்துவிட்டோம். இந்த வீட்டில் ஒரு மங்கல மங்கையாக—வீட்டிற்கு ஒரு திருமகளாக நீ வருகின்றாய் என்று மகிழ்ந்திருந்தேன். நீ வரும் பொழுதே புயலாக வந்திருக்கின்றாய். தேவையில்லாமல் உன்னையும் வருத்தி, இருப்பவர்களையும் வருத்தும் நோக் குடன் வந்திருப்பதாகத் தெரிகின்றது. இனி உன் புத் திப்படி நடந்துகொள்'' என்றான்.

அந்த அறையில் சில நிமிடங்கள் மௌனமாய்க் கழிந்தன. பின்பு விக்கல் எடுத்து விசும்பி அழும் உமா வின் அழுகுரலே ஒலித்தது.

''உமா, இன்பக் கண்ணீர் பெருகவேண்டிய விழி களில் துன்பக் கண்ணீரா? சிரிப்பொலி கேட்க வேண் டிய அறையில் அழுகுரலா? இது உனக்கே நல்லாயிருக்கா உமா?''

''இதற்கெல்லாம் காரணம் நீங்கள். உங்கள் அண்ணி யின் தற்கொலைக்கான காரணம் தெரிந்தால் பல உண்மை கள் தெரியவரும். அதன் பின்புதான் என் வாழ்வு பற்றி என்னால் தீர்மானிக்க முடியும்.''

''அப்படிச் சொல்லாதே உமா. அழாதே'' என்று அவள் விழிகளில் பெருகும் கண்ணீரைத் துடைக்கக் கரத்தை நீட்டினான்.

''என்னைத் தொடாதீர்கள். உண்மை தெரியும்வரை நீங்கள் என்னைத் தீண்ட அனுமதியேன்.''

''உன் அனுமதி எனக்கு வேண்டுமா?''

''என் உடலைத் தீண்டும் உரிமை உங்களுக்கு இருக் கலாம். ஆனால் நான் விரும்பி...'' என்று மௌனமாக இருந்து கண்ணீர் பெருக்கினாள்.

''உமா! அண்ணியின் மரணத்துக்கான காரணம் உனது வாழ்வுக்கோ, உனது லட்சியத்துக்கோ சம்பந்தமில்லா தது. எனக்கோ, என் வாழ்வுக்கோ தொடர்பில்லாதது. இதைவிட நீ எதையும் என்னிடமிருந்து தெரிந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை. நீ, திருநீலகண்டரின் மனைவி

மாதிரி என்னைத் தொடாதே என்றால், இல்லை தொடத் தான் போகின்றேன் என்று நிற்க நான் மடையனோ, வெறியனோ இல்லை. இதுவரையில் அந்தமாதிரி நான் வாழவில்லை. உன்னை நினைத்தே அப்படி ஒரு மனநிலை எனக்கு உருவாயிற்று. எத்தனையோ ஆசைக் கனவுகளோடு உனக்காகக் காத்திருந்தேன். உமா! உனக்கு நான் என்ன துரோகம் செய்தேன்? என் நெஞ்சமறிய நான் யாருக்குமே துரோகம் நினைத்தது கூட இல்லை. நீ ஏன் இப்படி என்னை—என் வாழ்வைச் சீரழித்து வேடிக்கை பார்க்கின்றாய்...?'' என்று கூறிவிட்டுத் திரும்பி நின்றான். அவன் விழிகளில் நீர் முட்டி வழிந்துகொண்டிருந்தது.

''அழுவது ஆண்பிள்ளைக்கு அழகில்லை. நான்தான் அழுகின்றேனே. அதற்கென்று பிறப்பது பெண் இனமாச்சே. சங்கர்! நான் மனம் விரும்பி உங்களை ஏற்கமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டேன். அதற்கான காரணத்தை நீங்கள் அறிவீர்கள். இதைத் தவிர வேறு தடை ஏதும் இல்லை. இதோ உங்களுக்கென்று சட்டப்படியும், சம்பிரதாயப்படியும் தரப்பட்ட இந்த உடல் உங்களுடையது'' என்று அவனுடன் சாய்ந்துகொண்டு நின்றாள்.

''உமா! வடமொழியில் ஒரு சுலோகம் உண்டு. ஆண் உலகில் கிடைக்கக்கூடிய ஒன்றைத்தானும் கேட்பான். பெண் இருக்கிறாளே, அவள் கிடைக்காத ஒன்றைக் கேட்பாளாம். இது பொய்யாக இருக்கலாம் என நினைத்தேன். நீ அதை உண்மைப்படுத்திவிட்டாய். அதுமட்டுமில்லை உமா, சட்டம், சம்பிரதாயங்கள் எல்லாவற்றுக்கும் முன்பே உன்னை நான் விரும்பினேன். இப்போ நீ கூறுவதைப் பார்த்தால் நான் ஏதோ...? உமா! இப்படி அழகான உடல்களை நாளுக்கு ஒன்றாக என்றால் பெற்று இன்பமடைய முடியும். ஆனால் அது இன்பமல்ல. அப்படிப் பட்ட ஒரு இன்ப வாழ்வை நான் விரும்பியவனும் இல்லை. இப்போ சினிமாக்களையும், கதைகளையும் படித்து விட்டுப் பெண்கள் லட்சியம் அது இது என்று சினிமாக்

களில் வரும் சில கவர்ச்சிக் காட்சிகளால் மனம் பேத லித்து வாழ்வையே நரகப்படுத்துகின்றனர். படியாதவர் கள், கற்றுக்குட்டிகள்தான் இந் நிலையென்றால், நன்கு படித்த பெண்களும்... உமா! நீ, உனக்கு உயர்வு என்று நினைக்கின்ற இந்த நினைவு உனக்கு மட்டுமல்ல உன் இனத்துக்கே கேவலம் தரக்கூடிய ஒரு நிலையை உரு வாக்கிவிடும்'' என்று கூறியவன், சில நிமிடங்கள் அங்கே உலாவினான். பின்னர் மேசைமீதிருந்த கடிகாரத்தைப் பார்த்துவிட்டுக் கூறினான்.

''உமா, நேரம் பன்னிரண்டாகப் போகிறது. உடையை மாற்றிக் கொண்டு தூங்கு. ஒன்று சொல்கின் றேன். அதுவும் நீ உன்னைத் தீண்டக்கூடாதென்று கூறிய தால் கூறுகின்றேன். உன் மனம் உன் தவறுகளை நினைத்து வருந்தி, என்று என்னை மனப்பூர்வமாக ஏற்கின்றதோ அன்றுதான் நானும் உன்னை ஏற்பேன். உன்னை மட்டு மில்லை உமா உன் இனத்தை — அதாவது உன்போன்ற பெண்களை மனத்தால்கூட தீண்டமாட்டேன். உன் னுடைய வேண்டுகோளை] நான் நிறைவேற்றுவதுபோல எனக்கு நீ ஒரு உதவி செய்ய வேண்டும்.''

''சொல்லுங்கள்.''

''உனக்குக் கோபம் என்னுடன். என்னோடு வேண்டு மானால் எதுவும் சாதித்துக்கொள். ஆனால், என் தாயி டமோ, தாய் தந்தை இருவரையும் இழந்து நிற்கும் குமாரிடமோ உன் குரோத மனப்பான்மையைக் காட்டி விடாதே. உன் காலைப் பிடித்து வேண்டுமானாலும் கெஞ் சிக் கேட்கின்றேன்'' என்றபொழுது அவன் விழிகளில் இருந்து நீர் பெருகியது.

''சரி அப்படியே நடந்துகொள்கிறேன். வெளி உல கில் எங்களுக்குள் வேற்றுமை இல்லை'' என்றாள்.

அவளுடைய விசித்திரமான போக்கு என்னவென்றே அவனுக்குப் புரியவில்லை. இப்படிப்பட்ட மன உணர்வு சில உள்ளங்களில் பதிவது எதனால்? அதற்கு விடை அவ

னுக்குக் கிடைக்கவில்லை. பேசாமல் அந்த அறையின் ஒரு பகுதியில் படுத்துக்கொண்டான். இந்த ஒரு கேள்வியே பதில் கிடைக்காத சூனிய வெளியாய் எதுவுமே புரியாத நிலையில் அவன் மனதில் தேங்கி நிற்கத் தூங்கிவிட்டான் சிவசங்கரன்.

## 13.

திருமணம் முடிந்து நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. சிவசங்கரன் முகத்திலே எவ்விதமான மாற்றமும் காணப்படவில்லை. மனதைச் சமநிலைப்படுத்தவும், உணர்வுகளை அறிவுக்கு அடிமையாக்கிக் கட்டியாளவும் கூடிய மனமுடையவனுக்கு அகத்தைப் போலவே முகமும் மலர்ந்திருக்கும். "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்று அறியாமலா கூறினார்கள்?

அதே சமயம் உமாதேவிக்கு அதனால் பாதிப்பிருந்தது என்னவோ மறைக்க முடியாத உண்மைதான். ஒரே அறையில் அவனுக்குச் சமீபமாகப் படுத்துக் கிடக்கும் போதெல்லாம் அவள் தன்னுணர்வுகளோடு போராட்டமே நடத்தியிருக்கின்றாள். ஒவ்வொரு இரவும் கழிவது ஒவ்வொரு யுகமாகத் தோன்றிற்று அவளுக்கு. என்னதான் பிடிவாத குணம், அசட்டுக் கௌரவம் இருப்பினும், மென்மையான பெண்மை உணர்வுகள் அவள் உடலையும், உள்ளத்தையும் உலுப்பி எழுப்பும் சந்தர்ப்பங்களில் அதைக் கட்டிக் காப்பதே அவள் நோக்கமாகிவிட்டது.

புதுமணத் தம்பதிகள் மணமகளின் வீட்டுக்கு நாலாம் சடங்கிற்குப் புறப்பட்டபொழுது, உமாதேவியின் உள்ளம் மிகவும் சங்கடப்பட்டது. அந்தப் பெரிய வீட்டிலிருந்து கொண்டு தன்னைக் கட்டிக் காத்த அளவுக்கு, தன் வீட்டில்...அதுவும். அவர்கள் வீட்டுப் படுக்கை அறை

மிகவும் சிறியது. வெளி உலகுக்குத் தெரிய விடாமல் தங்கள் வேற்றுமையை மறைத்தாலும் உள்ளுக்குள் ஒரே அறையில்......?

"என்ன உமா யோசனை பலமாயிருக்கே?" என்று கேட்டபடி உள்ளே வந்தான் சங்கர்.

"ஒன்றுமில்லை"

"பொய் சொல்லாதே உமா. தன் வீட்டில் இனிப்பாகவும், அன்பாகவும் பேசுபவன் என் வீட்டிற்கு வந்து எப்படி நடந்து கொள்வானோ என்று நினைக்கின்றாய் இல்லை யா?"

அவனுடைய கேள்வி அவளைத் திக்குமுக்காட வைத்தது. "தான் நினைத்ததை அப்படியே அவன் கூறுகின்றான். அவனால் தன் மன உணர்வுகளைப் புரிந்து கொள்ள முடிகின்றதா? நினைப்பதை அப்படியே கூறுபவனென்றால் அவனுடைய மனோசக்திக்கு தான் அடிபணிய நேர்ந்து விடுமோ என்று அஞ்சினாள்."

"என்ன உமா அப்படியே சிலையாகி விட்டாய்? உனக்குப் பிடித்தமில்லாத எதையும் நான் செய்ய மாட்டேன். என்று என்னை நீ மனம் விரும்பி ஏற்கின்றாயோ அன்றுதான் நானும் உன்னை மனதாலும் சரி, உடலாலும் சரி தீண்டுவேன். ஆனால், நீ நினைத்தது போன்று நான் இல்லை. தங்கத்துக்கும், பித்தளைக்குமுள்ள வேறுபாடு உனக்குத் தெரியவில்லை. என்னை எப்படி நம்பப் போகின்றாய்? என்றைக்காவது ஒருநாள் உன் மனச் சாட்சியே உன்னைச் சுடும். அன்றைக்கு என்னை நீ உணர்ந்து கொள்வாய். உண்மை என்றுமே தன்னை மறைத்துக் கொண்டிருந்து மாண்டு போவதில்லை. அப்பொழுது எல்லாம் நான் கூறாமலேயே உனக்குப் புரியும் உமா" என்று கூறும்பொழுது அவன் விழிகள் கலங்கி விட்டன.

உமா தலையைக் குனிந்து கொண்டு நின்றாள். அவள் எதுவும் பேசவில்லை. பேச வேண்டிய யாவையும் ஒரே நாளில் பேசித் தீர்த்து விட்டாள். இனிச் செயலில்

காட்ட வேண்டும். அதன் தாக்கத்தினுல், தான் கேளாமலேயே உண்மை முழுவதையும் அவன் கூறவேண்டும். அதன் பின்புதான் அவனை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற திட்டம் அவள் மனதில் உருவாகி விட்டிருந்தது.

இதற்குக் காரணமாக அமைந்தது ஆண்களைப்பற்றி அவள் மனதில் நிறைந்திருந்த தப்பான எண்ணம்தான். இயல்பாகவே ஆண்கள் பலவீனர்கள் என்பது அவள் எண்ணம். வீரம், கொள்கை, லட்சியம் என்று பேசுபவர்கள் எல்லாம் பெண்களின் முன் நண்டனிட்டு வணங்குபவர்கள் எனப் பல நூல்களிலும், சினிமாவிலும், சரித்திரங்களிலும் படித்தும், கேட்டும், பார்த்தும் அறிந்தவற்றை மனதில் பதிய வைத்திருந்தமைதான் காரணம். எதையும் பெரும்பான்மை கொண்டே கணிக்கின்றோம். எஞ்சிய சிறு-பான்மை எப்படி என நாம் நினைப்பதில்லை. நினைப்பினும் அவர்களையும் எமக்குச் சாதகமான மனநிலையில்தான் கணித்துக் கொள்ளுகின்றோம்.

சிலசமயம் தன் எண்ணங்கள், செயல்கள் அத்தனையும் பைத்தியகாரத்தனமானதாக இருக்குமோ என்றும் நினைத்தாள். அடுத்த கணமே அவளுடைய இயல்பான கர்வம் தலைதூக்கி நின்றது. ''கொள்கைக்காக, லட்சியத்துக்காகப் போராடுபவர்களை உலகமே பைத்தியக்காரர்களாகத்தான் நினைத்திருக்கின்றது. ஏளனம் செய்தும் இருக்கின்றது. முடிவில் அவர்களது லட்சியம், கொள்கை வெற்றி பெற்றபோது ஏளனம் செய்தவர்களே பாராட்டிக் கௌரவிக்கின்றனர். சங்கர்! உங்களை நான் நேசிக்கின்றேன். ஆனுல், உங்கள் செயல்களை மன்னிக்கவோ, ஏற்றுக் கொள்ளவோ முடியாதவளாக இருக்கின்றேன். என் நலன் எனக்குப் பெரிதில்லை. என் லட்சியம்தான் எனக்கு உயிர். மற்றும் எதைப்பற்றியும் எனக்குக் கவலை இல்லை. கணவன் பரத்தை வீட்டுக்குப் போக வேண்டும் என்றபொழுது தலையில் சுமந்து சென்ருளாம் ஒரு பத்தினிப் பெண். அவளைவிட நான் பெரியவளல்ல. ஆனுல், அந்த அளவுக்கு நான் இல்லை. பெண் இனமே இப்படிச் சீரழிந்து போகக்

காரணமாக இருந்த அந்தப் பத்தினிப் பெண்கள்போல நானும் வாழத் தயாராக இல்லை. தன் நலன் கருதி அவள் அப்படி நடந்திருக்கலாம். நான்...'' அவள் மனதுக்குள்ளேயே ஒரு புரட்சி உலகம்.

''உமா'' என்று மீண்டும் அவன் அழைத்தபொழுது திடுக்குற்றுத் தன்னுணர்வு பெற்ருள் அவள். அவளுள்ளே வளர்ந்துவிட்ட கர்வத்தினுல் தன் முன்னே நிற்பவன் குற்றவாளிக் கூண்டில் நிற்பவன்போலத் தோற்றம் அளித்தான்.

தங்கள் காரியத்தைச் சாதிப்பதற்காக ஆண்கள் நயமாகவும், பயமாகவும், பரிந்து, நசிந்து பேசுவார்கள். பின்னர் தவறு என்று தெரிந்தாலும் தயங்காது தமது ஆசைகளைப் பூர்த்தி செய்து கொள்வார்கள் என்று கேள்விப்பட்டிருக்கின்ருள் உமாதேவி. அப்படித்தான் சங்கரும் இருப்பானே? என்ற ஒருவித பீதி அவளுள்ளத்தில் எழுந்தது.

மகிழ்ச்சியாகவும், நல்லுறவோடும் இருக்கும் பொழுது நல்லதாகவும், உண்மையாகவும் தோன்றும் சில விடயங்கள் அந்த உறவு முறிந்து பகை ஏற்படும் பொழுது தீயதாகவும் பொய்யாகவும், நம்பிக்கையற்றதாகவும் காட்சியளிப்பதுண்டு. அப்படி ஒரு நிலை உமாதேவியின் மனத்திலும் உருவாகி விட்டது. அவன் தன் மனநிலையைப் புரிந்து கொள்ளுமுன்னர் அதை மாற்றித் திசை திருப்ப வேண்டும் என நினைத்தவளாய், ''உங்களை ஒன்று கேட்கின்றேன். தவருக நினைக்கக் கூடாது. அது...'' அவள் தலை குனிந்தே நின்ருள்.

''உமா! நீ ஒன்றல்ல, ஓராயிரம் கேட்டாலும் நான்......ஐ ஆம் வெறி சொறி உமா. என்ன கேட்கணும்?''

''எனக்கு வந்த பரிசுப் பொருட்களை இன்னும் நான் பிரித்துக்கூடப் பார்க்கலை. என் சிநேகிதிகள் தந்தவற்றை எடுத்து வரட்டுமா?''

''உமா! உன் ''ப்ரண்ட்ஸ்'' தந்தவற்றை மட்டும் நீ எடுத்துப்போய் என்ன பார்க்கப் போறே. எல்லாவற்றையுமே எடுத்து வாவேன்'' என்று அவன் மிக ஆறுதலாகக் கூறியபொழுது, அவள் உள்ளத்தில் சுருக்கென ஏதோ குத்துவது போன்ற உணர்வு!

''என் மன உணர்வுகளைப் புரிந்து கொள்ளும் வல்லமை இவருக்கு எப்படி வந்தது?'' உமா திகைப்படைந்து நின்றிருந்தாள்.

''என்ன உமா எதுவும் பேசாமல் நிற்கின்றாய்? நீ பிரிவினை வாதம் பேசினாலும் என்னைப் பொறுத்தளவில் என் கொள்கை, லட்சியம் எல்லாம் என்ன தெரியுமா? ஜனநாயக ஒற்றுமை. அந்த ஒற்றுமையில் வேற்றுமையிருக்கும். பகைமையிருக்கும். ஆனாலும், அதில் எல்லாம் ஒற்றுமையான ஓர் அடிப்படையிருக்கும்''

''நீங்கள் தத்துவம் கூறுகின்றீர்களா?''

''நோ. அப்படியில்லை. குறுகிய வாதம் பேசும் உன் மனதில் பரந்த, விசாலமான ஓர் மனப்போக்கைத் தோற்றுவிக்க முயலுகின்றேன். உன் விருப்பம்போல நீ செய்யலாம் உமா''

''என் விருப்பப்படி நான் செய்வதாக இருந்தால் உங்களைக் கேட்டிருக்கமாட்டேனே''

''என் விருப்பம் இரண்டே இரண்டு. அதை நேற்றிரவு கூறினேன். அதைத் தவிர மற்றும் எதிலும் நீ உன் இஷ்டப்படி நடந்து கொள். என் அனுமதியும் உனக்குத் தேவையில்லை என்று நினைக்கின்றேன். நான் சொல்வது உமக்குப் புரிகின்றதா உமா?''

''ம்'' என்று ஒரு பெருமூச்சு விட்டாள் உமாதேவி.

சிவசங்கர் எதுவும் மேற்கொண்டு கூறாமல் வெளியே சென்று விட்டான். அதே சமயம் ''சித்தி சித்தி'' என்று அழைத்துக்கொண்டு உள்ளே வந்தான் சிறுவன் குமார்.

''ஏன் குமார் என்ன வேண்டும்?'' என்றாள் உமாதேவி.

"உங்களைப் பாட்டி வரட்டாம்" என்றதும் மறு பேச்சின்றி அவன் பின்னே சென்றாள் உமாதேவி. குமார் ஓடிச் செல்வதும், பின்னர் திரும்பி நின்று பின்காட்டி நடப்பதுமாய் பூசை அறைக்கு அவளை அழைத்துச் சென்றான்.

பூசை அறையின் மாடத்தில் அடுக்கடுக்காகப் பல சுவாமி படங்கள் வைக்கப்பட்டிருந்தன. ஊதுவத்தியும், சாம்பிராணியும் சேர்ந்து போட்டி போட்டு புகைந்து கொண்டிருந்தன. அந்த அறைக்குள் காலடி எடுத்து வைத்ததும் தெய்வ சந்நிதானத்தில் நிற்பதுபோன்ற ஒரு நினைவு உமாதேவிக்கு ஏற்பட்டது. கண்மூடிக், கை கூப்பி வணங்கியபடி இருந்தாள் சௌந்தரம்மாள். முத்துச் சுடரென ஒளிபரப்பி நின்ற குத்து விளக்கின் சுடரைப் பார்த்தபடி நின்ற உமாதேவிக்கு அந்த அறையில் நின்றுகொண்டு வேறு எதையுமே நினைக்கத் தோன்றவில்லை. கரங்கூப்பியபடியே நின்றுவிட்டாள்.

"உமா" என்று பாசப் பரிவுடன் அழைத்தபடியே சௌந்தரம்மாள் எழுந்து நின்றாள்.

"அம்மா" என்று அழைத்தபடி அவள் கால்களில் விழுந்து வணங்கினாள் உமாதேவி.

"எழுந்திரம்மா" என்று அவளை வாரி அணைத்துக் கொண்டே, "பெண்ணைப் பெறவில்லையே என்ற எனது ஏக்கத்தை அம்பாள் அகற்றி விட்டாள். உன்னை இந்த வீட்டு மருமகளாக்கி எனது நெஞ்சைக் குளிரவைத்து விட்டாள்" என்று கூறிவிட்டு, அங்கே நின்ற குமாரைப் பார்த்து, "குமார் நீ போய் சித்தப்பாவை அழைத்து வாடா" என்றாள். குமார் போய் விட்டான்.

"உமா! நான் அவனை வேண்டுமென்றே இவ்விடத்தைவிட்டு அனுப்பினேன். சிறு பிள்ளையானாலும் அவன் மனதில் துவேஷம் என்ற நச்சுத்தன்மை ஏறும்படி நாம் நடந்து கொள்ளக்கூடாது, உண்மைகூட சிலசமயம் மற்றவர்களுக்கு விஷம்போல் ஆகிவிடும்" என்றவள்

லட்சுமி படத்துக்கு முன்பிருந்த ஒரு பெட்டியை எடுத்துத் திறந்து அவளிடம் நீட்டினாள். இரு கரத்தாலும் வாங்கிக் கொண்ட உமா, "அம்மா இது இது......" என்று ஆனந்தக் கண்ணீர் சொரிந்தாள்.

"இவையனைத்தும் எனக்கு என் மாமியார் தந்தவை, இதை என் மூத்த மருமகளுக்கு நான் கொடுத்தேன். ஆனால், அவள்..." என்றபடியே வார்த்தைகளை முடித்துக் கொண்டாள்.

"அம்மா நான் பாக்கியசாலி" என்று அவற்றைக் கண்களில் ஒற்றிக்கொண்டு, "இதில் ஏதாவது ஒன்றை உங்கள் கையாலேயே எனக்கு அணிந்து விடுங்கள்" என்றாள்.

"உமா!" என்று அவளை இறுக அணைத்துக்கொண்ட சௌந்தரம்மாள், "உமா! நீயும் படித்தவள். நாகரிகப் பெண். என் மூத்த மருமகள் என்ன கூறினாள் தெரியுமா? "எனக்கு இந்த ஓல்டு மாடல் நகைகள் எதற்கத்தை" என்று கூறிவிட்டு, இவற்றை வைத்து விட்டே சென்றுவிட்டாள். அவள் நடத்தையையிட்டு நான் கவலைப்படவில்லையானாலும், அவள் ஒரு......வேண்டாம் உமா. அந்தக் குணக்கேடிபற்றி இந்த வீட்டிலேயே பேச்சு வேண்டாம். உன்னை மருமகளாக நான் நினைக்கவில்லை. இந்தக்கண முதலே நீ இவ்வீட்டின் திருமகளாகி விட்டாய். எனக்கு மனதில் இருந்த பழி நீங்கி விட்டது. இந்த நகைகள் "பாஷன்" சரியில்லையெனில் நீ திருப்பிச் செய்து கொள்ளம்மா" என்றாள்.

"அழகுக்காக அணிவதுதான் நகை என்றாலும், இவை உங்கள் அன்புள்ளத்தின் வாரிசுப் பொருட்கள், இவைகளை அணிவதில் எனக்குப் பெருமையே தவிர சிறுமை எதும் இல்லையம்மா. நான் பொருள் வசதி இல்லாத குடும்பத்தவளாக இருந்தாலும் இவற்றுக்கு ஆசைப்பட மாட்டேன். ஆனால், உங்கள் அன்பு உள்ளம் தான் என்னைப் பெருமைப்படுத்துகின்றது"

"போதும் அம்மா. இதுதான் எனக்கும் நிம்மதியைத் தருகின்றது. உமா தெய்வப் பெண்களான லட்சுமி, சரஸ்வதி, துர்க்கை மூவரும் ஒரு குடும்பத்தில் ஒற்றுமையாக இருப்பதில்லை. ஆனால், அவர்கள் ஒற்றுமையாக இருந்த எமது குடும்பத்தில் பெண்ணுருவில் வந்த ஒருத்தியே அதைக் குலைத்து விட்டாள். அந்த இழப்பு உன்னால் நிறைவுறும் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்படுகின்றது. அம்மா, இன்று நீ வீட்டுக்குப் புறப்படும் தருணத்தில் இவற்றை நான் ஏன் சொல்கிறேன் என்பதும் உனக்குப் புரியும்"

"உங்கள் மனம் கோணமல் நடப்பேன் அம்மா"

"என் மனம் பல்வேறு சம்பவங்களையும் சந்தித்துப் பழகியதுடன் எதையும் தாங்கும் சக்தியும் பெற்று விட்டது. உன் நிலைமை அப்படி இல்லை உமா. உன் மனம் நோகும்படியாய் இங்கு யாராவது நடந்தால் பொறுத்து நடந்து கொள். முக்கியமாக குமார் ஏதும் அறியாத சிறுவன். அவனை யார் பெற்றாலும் அவன் இந்தக் குடும்பத்தின் வாரிசு. அவனை..." என்றபொழுது சௌந்தரம்மாளின் குரல் தளதளத்தது.

"என் பிள்ளைபோல அவனை நான் கவனிப்பேன் அம்மா" என்றாள் உமாதேவி.

அதே சமயம் அவர்கள் உரையாடலைச் செவிமடுத்த வாறே உள்ளே நுழைந்த சங்கர், "என்னம்மா மருமகளுக்கு உபதேசமா?" என்றான்.

"மருமகள் முறையாக இருந்தாலும், உமா என் மகளடா சங்கர்"

"அப்படியானல் நான்......?"

"எந்த வீட்டுக்குப் போனாலும் உறவு முறை எப்படி இருப்பினும் அந்த வீட்டுப் பெரியவர்களுக்கு எல்லோரும் பிள்ளைகள்தான்"

"கதைப்பது சுலபம் அம்மா. வாழ்வதுதான் கஷ்டம். அது சரி. என்னை ஏன் அழைத்தீர்கள்?

"உனக்கு நான் என்னப்பா சொல்ல இருக்கு? நீ பெரிய பதவியில் இருந்தாலும் இவளுக்காக உன் மனைவி

யிடம் முரண்பட்டுக் கொள்ளாமல் நடந்து கொள்'' என்று கூறி விட்டு குமாரையும் அழைத்துக்கொண்டு வந்தாள்.

நகைப்பெட்டியும் கையுமாய், பூரண பொலிவுடன் ஆனந்தம் பொங்க நின்ற உமாதேவியை ஏற இறங்கப் பார்த்துக் கொண்டே வெளியேறினன் சங்கர். சில நிமிடங்கள் அந்த அறைக்குள்ளேயே நின்றுவிட்ட உமாதேவி வெளியே செல்லும்பொழுது கூடத்து அறையில் சங்கருக்கும் தாய்க்குமிடையில் நடந்த உரையாடல் அவள் செவிகளிலும் விழுந்தது. அந்த உரையாடலில் குமாரின் தாயின் பெயரே அடிபட்டதால் அதுவரை அவளுள்ளத்தில் நிறைந்திருந்த அமைதி பறிபோய்விட்டது.

# 14.

பொங்கி வரும் பெரு நிலவு இரவைப் பகலாக்கி ஒளி வெள்ளம் பாய்ச்சிக் கொண்டிருந்தது. யாரோ ஒரு பாடகரின் சாரங்கா ராக ஆலாபனை வானொலியிலிருந்து மிதந்து குளிர் வாடையுடன் கலந்து கொண்டிருந்தது. சாய்வு நாற்காலியில் சாய்ந்து படுத்தபடியே சங்கீத ரசனையில் ஈடுபட்டிருந்தான் சிவசங்கரன். அவனுக்குச் சமீபமாக உட்கார்ந்திருந்தாள் உமாதேவி. உமாதேவியின் வீட்டுக்கு அவர்கள் வந்து மூன்று நாட்களாகி விட்டனவாயினும் அன்று அவள் மனதில் அவனைப்பற்றிய ஓர் சலனம் உறுத்திக் கொண்டிருந்தது. அவனையே உற்று நோக்கியவாறு இருந்த உமாவின் மனத்திரையில் அன்று மத்தியானம் நடைபெற்ற நிகழ்ச்சி நிழற்படம் போன்று விரிந்தது.

நகரத்தில் உள்ள வசதிகள் கிராமப்புறங்களில் இருப்பதில்லை. குளிக்கும் அறையில், குழாய் நீரில்

குளித்தவனுக்கு உமா வீட்டுக் கிணற்றில் நீர் இறைத்துக் குளிப்பது கஷ்டமாக இருந்தபோதும் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கவே பத்துப் பதினைந்து வாளிக்கு மேல் குளித்துக் கொண்டே நின்றான். வீட்டின் பின்புறம் கிணறு இருந்ததினால் குளிக்கச் சென்றவன் அதுவரை திரும்பவில்லையே என்று பார்த்துவர உமா கிணற்றடிக்குச் சென்றாள். திறந்த மேனியுடன் அரையில் துவாய் கட்டிக் கொண்டு நின்ற சிவசங்கரனைப் பார்த்தபொழுது அவள் ஒரு கணம் இந்த உலகினையே மறந்து நின்றாள்.

சிவந்த மேனியில் கறுத்து அடர்ந்து நின்ற ரோமங்களும், முத்து முத்தாய் நீர்த் துளிகளும், சோப்பின் சுகந்த மணமும் அவள் மனதைக் கிறங்கடிக்கும் ஓர் போதைப் பொருளாக அவன் விளங்கினான். அவனுக்கும், தனக்குமிடையில் இருந்த கருத்து வேற்றுமைகளை ஒரு கணம் அவள் மறந்தவளாய் அவனைப் பார்த்துப் புன்முறுவல் பூத்தாள்.

''என்ன உமா! தண்ணீர் வேணுமா?'' என்றான் சிவசங்கரன்.

''வேண்டாம். உங்களுக்குக் குளித்தது போதாதா?''

''ஏன் உங்கள் வீட்டுக் கிணற்று நீருக்கும் கட்டுப்பாடா?'' என்று சிரித்துக்கொண்டே திரும்பியவன் கயிற்றுக் கொடியில் கிடந்த சாரத்தை எடுத்துக் கட்டிக் கொண்டு, துவாயை முறுக்கிப் பிழிந்து தலையைத் துவட்டினான். உமாவின் உடல் நரம்புகளில் புது வெள்ளம் பாய்ந்தது போன்று புதிய உணர்வுகள் குமுறிப் பாய்ந்தன. அடுத்த கணமே ஓடிச்சென்று, அவன் மார்பில் முகம் புதைத்துக்கொண்டு அப்படியே தழுவிக் கொள்ள வேண்டும் போலிருந்தது. அதற்கிடையில் ''உமா'' என்று அவள் மயக்க நிலையைக் குலைத்தது சங்கரின் குரல்.

''நீங்கள் குளிப்பதில் எனக்கு ஆட்சேபனை ஏதும் கிடையாது. ''இவ்வளவு நேரமும் குளிக்கின்றாரா? போய்ப் பாரேன் உமா'' என்று உங்கள் மாமிதான் என்னை அனுப்பினார்கள்''

"அதுதானே பார்த்தேன். பரவாயில்லை. உமக்கு என்மீது அக்கறை இல்லையானாலும், உம்முடைய அம்மாவுக்கு அக்கறை இருக்கே" என்று கூறியவாறு அவளை விலக்கிவிட்டு முன்னே சென்றான் சங்கர்.

அவனுடைய பேச்சும், செயலும் தன் மனக்கட்டுப்பாட்டை உடைத்து விடுமோ என அப்பொழுது அவள் அஞ்சவில்லை. அதற்குப் பதிலாக அவளுள்ளத்தில் ஆசையே கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்தது. அர்த்தமற்ற கொள்கைகளினால், தான் கட்டுப்பட்டுக் கிடந்து விட்டோமே என அவள் நினைக்கவில்லை. அவனுடைய அழகிய மார்பின் கவர்ச்சியே அவள் பருவ உள்ளத்தைத் தன் நிலை பிறழச் செய்து கொண்டிருந்தது. அவனுக்குப் பின்னால் சென்றபொழுது அவளுக்கு ஆனந்தமான ஒரு சுகமே தென்பட்டது. அறைக்குள் சென்று தலை வாரும் பொழுதுகூட அவள் மனவலைகள் அவனைச் சுற்றியே வட்டமிட்டன. அதேநேரத்தில், "உமா இப்படி வாரும்" என்றான் சங்கர்.

"என்ன சொல்லுங்களேன்" அவனுக்குச் சமீபமாக வந்து நின்றாள் உமாதேவி.

"உமா நீரும், நானும் வந்ததைப் பார்த்துக் கொண்டு நின்ற உமது தாயாரின் முகத்தில் நிலவும் மகிழ்ச்சிப் பெருமிதத்தைப் பார்த்தீரா?"

"ம்ம்" என்று புன்முறுவல் பூத்தாள் உமாதேவி.

"அந்த மகிழ்ச்சியைக் கெடுக்கும்படியாக நடந்து கொள்ளாதே. இந்த அறைக்குள் எப்படி வேண்டுமானாலும் பேசு, நடந்து கொள். வெளியில் நாம் சந்தோஷமாக இருப்பதாகவே காட்டிக் கொள். சிலசமயம் தப்பித்தவறி நான் உம்மிடம் உரிமை பாராட்டினாலும் அதைத் தப்பர்த்தம் செய்து கொள்ளாதே" என்று அவன் கூறியபொழுது அவள் உள்ளத்தில் சம்மட்டியால் அடித்ததுபோன்ற உணர்வே ஏற்பட்டது. அதுவரை தன்னுடைய லட்சிய நினைவை மறந்து, சாதாரணமான கவர்ச்சிக்கு ஆட்பட்டு விட்டேனே என்று வெட்கப்பட்

டாள். தன்னுடைய அற்ப மனத்தின் ஆசையை உணர்ந்து தான் அவன் அப்படிக் கூறினனே என்று எண்ணித் தலை குனிந்து நின்றாள்.

"ஏன் உமா! ஏதும் தவருகக் கூறிவிட்டேனு?"

"இல்லை. நான் என்னவோ ஏதோ என்று நினைத் தேன். நீங்கள்......"

"உமா! நான் புதிதாகக் கூறுவதற்கு எதுவுமே இல்லை. சொல்லாமல் எதையும் மறைக்கவும் இல்லை"

உமாவின் மனதிலிருந்து ஒரு பெருமூச்சு வெளி வந்தது. அதுவரை நாள் அவனோடு பழகியபோதும் அவனு டைய திறந்த மேனியைப் பார்க்கும் சந்தர்ப்பம் அவ ளுக்குக் கிடைக்கவில்லை. அதனால்தான் அவள் மனம் தடுமாறினள்.

"சங்கர்! எந்தக் கவர்ச்சியை வைத்து என் உணர்ச்சி களைத் தடுமாற வைத்தீர்களோ, அதே உணர்ச்சியினல் நீங்கள் தடுமாறி நிற்க உங்களுக்கு இதே வார்த்தையை நான் கூறத்தான் போகின்றேன். அப்போது பார்ப் போம்! என்று மனதுக்குள் கறுவியவாறே சென்று விட்டாள்.

அன்றிரவு படுக்கை அறையிலேயே ஒரு புத்தகத்தினைப் படித்துக் கொண்டிருந்தான் சங்கர். உமா அங்கிருந்த 'டிரான்சிஸ்டரை'த் திருகி விட்டாள். சென்னை வானெலி யில் திரைகானம் நடந்து கொண்டிருந்தது. இளமை நெஞ்சங்களின் இனிய கனவுகளுக்கு ஏற்ற பாடல்கள் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது. அந்தப் பாடல்களைக் கேட்டுக் கொண்டே படுக்கையில் புரண்டு கொண்டு கிடந்த உமாதேவி தூங்கி விட்டாள்.

படித்த புத்தகத்தை மூடி வைத்துவிட்டுத் திரும்பிய சங்கர் ஒரு கணம் மின்னலால் தாக்குண்டவன்போலத் தடுமாறி நின்றான். அறையில் ஒளி வெள்ளமாய்த் திகழும் வெளிச்சத்தில் கட்டிலில் படுத்துத் தூங்கிய உமாவின் சேலைகள் கலைந்து அவளுடைய முழங்காலுக்கு

மேலே சென்று விட்டிருந்தது. ஒரு காலை நீட்டி, ஒரு காலை மடக்கியபடி மல்லாந்து படுத்திருந்த உமாவின் பெண்மைக் கவர்ச்சி அவனுக்கு ஒரு சவாலாகவே அமைந்திருந்தது. ''தட்டுத் தடுமாறி நெஞ்சம் கைதொட்டு விளையாடக் கொஞ்சும்'' என்ற சினிமாப் பாடல் அவனுக்குப் போதையூட்டுவதாகவுமிருந்தது. ஒரு கணப்பொழுதில் அவனுடைய உள்ளம் விழித்துக்கொண்டது. 'டிரான்சிஸ்டரை'த் திருகி நிறுத்திவிட்டு விளக்கை அணைத்தான். சற்று மங்கலான ஒளி வெளியேயிருந்து தெரிந்தது. பேசாமல் சங்கர் கட்டிலில் படுத்துக்கொண்டு விட்டான்.

அதேவேளையில் தூக்கம்போலப் பாசாங்கு செய்துகொண்டு வேண்டுமென்றே அப்படிப் படுத்துக்கிடந்த உமாவின் உள்ளம் குமுறியது.

# 15.

திருமணமாகி மாதம் ஒன்றுக்கு மேலாகிவிட்டது. வசுமதியின் கடிதத்துக்குப் பதில் எழுத மேசைமுன் உட்கார்ந்திருந்த உமாதேவியின் மனதில் பல்வேறு சிந்தனைகள் தெளிந்துகொண்டிருந்தன. ''தோழனோடும் ஏழைமை பேசேல்'' என்ற பழமொழி அவள் சிந்தனையில் மூத்லிடம் பெற்று நின்றது. அதுபோன்று தனக்கும் கணவனுக்குமிடையில் உள்ள இரகசிய விடயங்கள் பற்றி அவளோடு பகிர்ந்துகொள்ளக்கூடாது என்று தீர்மானித்த பின்பு, அவளுக்கு வேறு எதை எழுதுவது என்று ஆலோசிக்கலானுள்.

வசுமதி எழுதிய கடிதத்தில் அவளுடைய கொள்கை, லட்சியம்பற்றிக் கிண்டல் பண்ணியதுடன், அவளுடைய நிகழ்காலம் பற்றிக் கேலிபண்ணி எழுதியிருந்தாள். அதைத்

நினைத்தபொழுது அவளுக்குச் சிரிப்பு வந்தது. அதே சமயம் அங்கே வந்த குமார், "என்ன சித்தி சிரிக்கின்றீர்கள்?" என்றான்.

"சும்மா சிரித்தேன். ஏன் சிரிக்கக்கூடாதா?"

"இங்கே யாருமில்லையே சித்தி" என்றவன், "ஓ! நீங்கள் அப்பாவை நினைத்துச் சிரித்தீங்களா?" என்று கேட்டுவிட்டு வெளியே ஓடிவிட்டான்.

அவன் சிறுவனாக இருந்தாலும் வயதுக்கு மீறிய அறிவு பெற்றிருந்தான். சில சமயங்களில் அவன் கூறும் வாக்கியங்கள் பெரியவர்களையே திணற அடித்துவிடக் கூடியதாக இருந்தன. அவன் கூறிச் சென்ற வார்த்தைக்கும் வசுமதி கடிதத்தில் எழுதிய ஒரு வசனத்துக்கும் ஏதோ தொடர்பு இருப்பதாக நினைத்தாள் உமாதேவி. உடனடியாக அவள் எழுதிய கடிதத்தை எடுத்துப் பிரித்துப் படிக்கலானாள்.

"உமா! உனக்கென்னடி? கல்யாணமாகு முன்பே ஒரு வளர்ந்த பையனுக்குத் தாயாகி இருக்கின்றாய். சிறுவன் குமார் உன் கணவரின் தமையன் மகன் என்றால் யாருமே நம்பமாட்டார்கள். அன்று திருமணத்துக்கு வந்திருந்த ஒருத்தி கூறியதுபோன்று உன் கணவனின் சாடை அவனிடம் அப்படியே தங்கியிருக்கின்றது. நீ அதிர்ஷ்டக்காரியடி உமா!" என்று அவள் எழுதி முடித்திருந்ததைப் பார்க்கும்பொழுது அவள் இதயமே பற்றி எரிவது போன்றிருந்தது.

முதல் தடவை கடிதத்தைப் படித்தபொழுது அவள் கேலிபண்ணி இருப்பதாகவே நினைத்திருந்தாள். குமார் அப்பாவை நினைத்தா சிரிக்கின்றீர்கள் என்றபொழுது அவள் இதயத்தில் ஏதோ ஓர் விழிப்பும், துடிப்பும் ஏற்பட்டது. அந்த நிகழ்ச்சியினால் அவள் உள்ளத்தில் பெரும் மாறுதலே ஏற்பட்டு விட்டது.

உண்மையில் குமார் சங்கரை அப்பா என்றும் சித்தப்பா என்றும் வாயில் வந்தபடி அழைப்பான். அது பற்றி எவருமே கவலைப்படுவதில்லை. உமா கூட அது

வரையில் அவன் அப்படி அழைப்பதைத் தவருக நினைத்த தில்லை. ஆனல், அன்று அவள் மனதில் ஒரு சந்தேகக் கல் விழுந்து விட்டது. அது சிறு விதையாக இருந்து பெரும் விஷ விருட்சமாக அவள் மனதில் வளர்ந்து நின்றது.

''சிலவேளை குமார் சங்கரின் மகனுக இருப்பானே? இதன் காரணமாகத்தான் சங்கரின் அண்ணன் இறந் திருப்பாரோ? இதே காரணத்திஞல்தான் அவர் அண்ணி தற்கொலை செய்திருப்பாளோ?'' என்ற கேள்விகள் அவள் மனதில் சுழன்று கொண்டிருந்தன. இந்தக் கேள்விகளுக்கு விடை கிடைக்கு முன்பே குமார், மீண்டும் அங்கே வந்தான்.

''குமார் இங்கே வாவேன்''

''ஏன் சித்தி?'' என்றபடி அவன் முன்னல் வந்து நின்ருன் குமார்.

அவனைப் பிடித்துக் கொண்டே ஒவ்வொரு அங்கமாகப் பரிசீலனை செய்தாள். அதே முகம், அதே கண்கள், அதே மூக்கு அப்படியே சங்கரை நகல் எடுத்து வைத்தது போன்றிருந்தது அவன் உருவம்.

''என்ன சித்தி! ஒன்றும் பேசமாட்டேங்கிறீங்களே?'' என்ருன் குமார்.

''ஏன்டா குமார்! சித்தப்பாவை மட்டும் அப்பா என்று அழைக்கின்ருய். என்னை அம்மா என்று அழைத் தால் என்ன?''

''அதெப்படி? நீங்கள் இப்பதானே வந்திருக்கிறீர்கள். எப்படி என் அம்மாவாக முடியும்?'' என்ற அவனுடைய குழந்தைத்தனமான பதிலில் அவள் பெரும் பாதகமான கருத்துக்களை எடுத்துக்கொண்டு விட்டாள்.

மர்மக் கதைகளில் வரும் 'சஸ்பென்ஸ்' வாசகர்களைத் திணற அடிப்பதுபோல அவள் உள்ளம் மர்மத்துக்கு மேல் மர்மமான நினைவுகளுக்கு விடை காணத் துடித்தது.

''ஏன் சித்தி என்னுடன் கோபமா?'' என்ருன் குமார்.

"போடா போ. உனக்கும் எனக்கும் என்ன உறவு?'' என்று தன் மனக் குமுறல்களை வார்த்தைகளாக வெடித்துச் சிதறி விட்டாள். அவனுக்கு அந்த வார்த்தைகளின் பொருளாழம் புரியா விட்டாலும் அவள் தன்னை வெறுக்கின்ருள் என்ற உணர்வு பளிச்சிட்டதும் அவளை விட்டகன்று விட்டான்.

மாலை மூன்றரை மணியளவில் சங்கர் ஆபீசால் திரும்பிவரும்வரை அவன் வெளி வாசலிலேயேஇருந்தான். காரை விட்டிறங்கிய சங்கர், ''என்னடா குமார்! முகம் ஒருமாதிரியாக இருக்கே. தூங்கிஞயா?'' என்று கேட்டுக் கொண்டே வந்தான்.

''இல்லே சித்தப்பா''

''அப்புறம் என்னடா?''

''ஒன்றுமில்லை சித்தப்பா''

''வாடா குமார்!'' என்று அவனையும் அழைத்துக் கொண்டு உள்ளே சென்ருன்.

''அம்மா! அம்மா!!'' என்று சங்கர் கத்திய சத்தத்தில் அடுப்பங்கரையில் இருந்த செளந்தரம்மாள் ஓட்டமாய் ஓடி வந்தாள்.

''அம்மா! உங்களுக்கு எத்தனை நாள் சொல்வது? இவனை என்ன பேசினீங்கள்?''

''நான் என்னடா பேசினேன்? குமார் எங்கேடா போயிருந்தாய் இவ்வளவு நேரமும்?'' என்று குமாரைக் கேட்டாள் செளந்தரம்மாள்.

''வெளிவாசலில் வந்திருக்கின்ருன். நீங்கள்கூட இப்போ அவனை...'' என்றவன், குமாரைத் தூக்கி அணைத்தபடியே, ''ஏன்டா சித்தி ஏதும் ஏசிஞளா?'' என்ருன்.

''இல்லையே'' என்றவன், ''எனக்குச் சைக்கிள் வாங்கித் தாரேன் என்று ஏமாத்தி விட்டீர்களே சித்தப்பா'' என்ருன்.

''ஓ!... அதுவா காரணம். நான் மறந்திட்டேன் குமார். நாளைக்கு வாங்கிஞல் போச்சு. இல்லையென்ருல் இப்போதே போகலாம். புறப்படு'' என்ருன்''

''இப்ப என்னடா அவசரம்? நாளைக்கு வரும்பொழுது வாங்கி வாவேன்'' என்றாள் சௌந்தரம்மாள்.

''ஆமாப்பா. நாளைக்கு வாங்கி வாருங்கள். மறக்கக் கூடாது. என்ன?'' என்றான் குமார்.

இவை யாவையும் கேட்டுக் கொண்டு அடுத்து என்ன நடக்குமோ என்று எதிர்பார்த்தபடி இருந்த உமா தேவிக்கு குமாரின் செயல் எதுவுமே புரியவில்லை. உடையை மாற்றிக்கொண்டு வெளியே வந்த சங்கர், ''உமா! நான், நீதான் ஏதோ சொல்லி விட்டாயாக்கும் என்று நினைத்து விட்டேன்'' என்றான்.

''ஏன் உங்களுக்கு நான் வேண்டாத பெண்டாட்டி தானே?''

''நோ. நோ. நீயாக அப்படி நடந்து கொள்கிறாயே தவிர நான் அப்படி நினைக்கவில்லை உமா. உன் மனதை நான் புரிந்து நடக்க வேண்டும் என நீ நினைக்கின்றாய். அப்படி நான் நடக்க வேண்டுமாயின் முதலில் நான் நம்பிக்கைத் துரோகியாகி விடுவேன். இரண்டாவது, என் சொந்த நலனுக்காகத் தேவைக்காக கட்டிய மனைவியிடமே பொய் சொல்ல நேரிடும். ஆகவே, நீ நினைப்பது போல என்னால் நடந்து கொள்ள முடியவில்லை. அதே சமயம் நீ உன் வரட்டுத்தனமான பிடிவாதங்களைக் கைவிட்டால்...அது உன் விருப்பம்'' என்று கூறியவாறே தன் அலுவலக அறையை நோக்கிச் சென்றான்.

நன்றாக பசியுள்ள ஒருவன் வீட்டினருடன் கோபித்துக் கொண்டு சாப்பிடாமல் இருப்பதுபோல, அதுவும் அறு சுவை உணவு வகைகள் அவன் முன்னே இருக்கப்பார்த்து ஏங்குவதுபோல இருந்தது அவளின் நிலை. நிமிட நேரத்தில் மாறும் கொள்கைகள் கொண்ட உள்ளத்துடன் போராடுவதே அவளுடைய நிலையாகி விட்டது.

அவள் சிந்தனையைக் கலைப்பதற்கென்றே வந்தவர்கள் போன்று வெளியே கார் நிற்கும் சப்தமும், நான்கைந்து பேரின் குரலும் ஒலித்தது. தொடர்ந்து ''வாருங்கள்'' என்று சங்கர் வரவேற்கும் குரலும், ''உமா!

எங்கே தம்பி?'' என்ற தம்பித்துரை மாஸ்டரின் மனைவியின் குரலும் சேர்ந்து ஒலித்தது.

''இங்கேதான் வாருங்கள்'' என்று கூறியவன் ''குமார்! குமார்!!'' என்று குரல் கொடுத்தான். குமார் வருமுன்பே உமாதேவி அவ்விடத்துக்கு வந்து சேர்ந்தாள்.

''எப்படி உமா சுகமாக இருக்கிறாயா?'' என்று கேட்டு அவளை குசலம் விசாரிக்க ஆரம்பித்து விட்டாள் தம்பித்துரை மாஸ்டரின் மனைவி.

''தம்பி உங்களைப்பற்றி இவர்களுக்கு அடிக்கடி கூறுவேன். இப்போ உங்களை ஒரு நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்க அழைக்க வந்திருக்கின்றார்கள். இவர்கள் என்னுடைய மைத்துனரும் மனைவியும்'' என்று கூறினார் தம்பித்துரை.

''நல்லது''

''இவர் கஸ்டம்ஸ் ஆபீசர், மிஸ்டர் சிதம்பரம்'' என்று அவரை அறிமுகம் செய்து வைத்தார்.

''வணக்கம் சார்''

''வணக்கம் மிஸ்டர் சங்கர்! உங்களைப்பற்றி என் மைத்துனர் வாய் ஓயாமல் கூறுவார். எனக்கும் மனதில் உங்களைப்பற்றி ஓர் மானசீக மரியாதை ஏற்பட்டிருந்தது. என் மகளுக்குச் சங்கீத அரங்கேற்றம் ஒன்று நடாத்த எண்ணியுள்ளோம். அந்த விழாவுக்கு உங்களை...'' என்று நிறுத்தினார்.

''நன்றி. இப்படி ஒரு சந்தர்ப்பம் அளித்தமைக்கு நான் மாஸ்டருக்குத்தான் நன்றி கூற வேண்டும்'' எனச் சிரித்துக் கொண்டே கூறினான். அவன் சிரிப்பில் எல்லோரும் கலந்து கொண்டனர்.

அன்று தம்பித்துரை மாஸ்டரின் வருகையினால் இரவு ஏழு மணி வரை சந்தோஷமான பொழுதாகவே கழிந்தது.

# 16.

இசை அரங்கேற்ற விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசிய பின்பு பார்வையாளர் பகுதியில் பிரமுகர்கள் வரிசையில் உமாதேவியுடன் இருந்தான் சிவசங்கரன். அவனுக்குப் பக்கத்திலிருந்த ஆசனத்தில் இருந்த பிரமுகர் எழுந்து வெளியே சென்றதும், ஒரு நவநாகரிகப் பெண் மணி வந்து அவனருகே அமர்ந்து, ''மிஸ்டர் சங்கர், உங்கள் பேச்சு நன்றாயிருந்தது'' என்று பேச்சை ஆரம்பித்தாள்.

''தாங்கி யூ மிஸ்...''

''மிஸ் சுமித்திரா''

''குட்''

''ஆர் யூ மறீட் மிஸ்டர் சங்கர்?''

''ஜெஸ். சீ இஸ் மை வைவ் உமாதேவி.'' என்று அவளை அறிமுகம் செய்துவைத்தான். சம்பிரதாயத்துக்காக அவளைப் பார்த்து, ''ஹலோ'' என்று கூறிச் சிரித்தாள். உமாதேவியும் பதிலுக்கு வேண்டா வெறுப்பாகச் சிரித்தாள்.

''மிஸ்டர் சங்கர்! 'மகளிர் கலாசாரப் பேரவை' என்று கேள்விப்பட்டிருக்கின்றீர்களா?'' என்று அவனைக் கேட்டாள் சுமித்ரா.

''ஜெஸ், கேள்விப்பட்டிருக்கிறேன்.''

''நான்தான் செக்ரட்டரி.''

''குட்.''

''மாதத்தில் ஒவ்வொரு கருத்தரங்கு நடத்துவோம். பிளீஸ் நீங்களும் அதில் பங்குகொள்ளவேண்டும்.''

''அதெற்கென்ன பங்கு பற்றலாம்.''

''வந்து மிஸ்டர் சங்கர்...'' என்று தொடர்ந்து

தேவையில்லாத ஊர்க் கதைகள் எல்லாம் கூறினுள். இசைக் கச்சேரிக்குப் பதிலாக அவளுடைய உளறலைத் தான் அவனுல் கேட்க முடிந்தது.

இசை அரங்கேற்றம் முடிந்து அவர்கள் வீட்டுக்குப் போனதும், ''சிச்சீ! அவளும் ஒரு பெண் ஜென்மமே! அவளுக்கொரு கலாசாரப் பேரவை'' என்று சீறினுள் உமா.

''ஏன் எரிந்து விழுகின்ருய் உமா? அவள் அப்படி என்ன செய்துவிட்டாள்?''

''அந்தச் சபையில் கதைப்பதற்கு வேறு ஆளில்லாமல் உங்களோடு ஏன் வெட்கம் மானமில்லாமல், தேவையில்லாமல் அலம்பணும்.''

''உமா! நீ தவருகவே நினைத்துத் தவருகவே பேசுகின்ருய். அலம்புவது பெண்களுக்குள்ள இயல்பானகுணம். அந்தச் சபையில் நான்தானே தலைமை வகித்தேன். அதன் காரணமாக அவள் என்னைப் பெரிய மனிதன் எனக் கருதியிருக்கலாம். அதில் என்ன தவறு?'' சிரித்துக் கொண்டே கேட்டான்.

''நான்சென்ஸ். அத்தனைபேர் மத்தியில் அவளுக்கு வெட்கமில்லாமல் உங்களோடு வந்திருந்து கதைத்தது நல்லதா?''

''அப்படியென்றல் உமது அகராதிப்படி அவள் தனிமையில் என்னைச் சந்தித்துக் கதைப்பதுதான் பண்பு என்று கூறுகின்ருய்?''

''நீங்கள்...''

''பலர்மத்தியில் கதைப்பவள் கூடாது.இரகசியமாகத் தனியே சந்தித்துக் கதைப்பது பண்பு. அப்படித்தானே?''

''என்னைக் குற்றஞ் சுமத்துவதில் உங்களுக்கு என்ன தான் லாபம்?''

''அதே போல மற்றவர்களை நீர் நினைத்துப் பார்க்கணும் உமா. அவள் கள்ளம் கபடமின்றி என்னேடு கதைத்ததை நீர் விகல்பமாய் நினைக்கின்றீர். அவளை

மட்டுமல்ல, அவளோடு கதைத்ததால் என்னையும்சேர்த்து இல்லையா?''

''உங்களை நான் அப்படி நினைக்கவில்லை. நீங்கள் ஏன் உங்கள் தலையில் தூக்கிப் போடுறியள்?''

''உமா! உனக்கு என்னில் நம்பிக்கையில்லை. அதற்காக ஏன் ஒரு அப்பாவிப் பெண்ணை இகழ்வாகப் பேசுகின்றீர்?''

''அப்படிநான் உங்களை நினைக்கவில்லை.''

''அப்படி என்னை நீர் நினைக்கவில்லையானால் எமக்கிடையில் ஏன் இந்தப் பிரிவினை வாழ்க்கை?''

''..........'' உமாதேவி மௌனமாகக் கீழே பார்த்துக் கொண்டு நின்றாள். எப்படியெல்லாமோ கேள்விகளைக் கேட்டுக்கொண்டு வந்து கடைசியில் தன்னைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்திவிட்டானே என்று குமுறியது அவள் உள்ளம்.

''என்ன உமா? உண்மை உன்னை ஊமையாக்கிவிட்டதா? மற்றவர்களைப் பற்றி அவதூறாக நினைக்க முன்பு கதைக்கமுன்பு தீர ஆராய வேண்டும். அதுதான் பண்புடையவர்களுக்கு இருக்கவேண்டிய அழகு.''

''இப்ப நான் என்ன சொல்லிவிட்டேன்?'' அவளின் அழகிய விழிகள் கலங்கிவிட்டன.

''எதையும் தீர ஆலோசிக்காமல் கதைக்கக் கூடாது என்றுதான் கூறுகின்றேன். இதற்காக என்மீது வைத்திருக்கும் கொள்கையை மாற்றும்படி நான் கூறவில்லை. உன் மனம் என்றைக்கு உனக்கு உண்மையை உணர்த்துகின்றதோ அன்று திருந்தினால் சரி. எனக்கு உன்மீது கோபமோ வெறுப்போ கிடையாது. உன் அறியாமையின் மீது எனக்கு அனுதாபமே தவிர ஆத்திரமில்லை. அன்று உன்னிடம் நான் கொண்ட அன்பு இன்னும் மாறவில்லை. ஆனால் உமா! உன்னுடைய அன்பை உண்மை வழியில் தான் பெற்றேன். அதை நேர்மையற்ற வழியில் என்றும்

பயன்படுத்தமாட்டேன்'' என்று கூறிவிட்டு முகம் கழுவச் சென்றான்.

''பெண்கள் சுலபத்தில் ஏமாறக்கூடியவர்கள்'' என்பதைத் தெரிந்து வைத்துக்கொண்டு நல்லவர்கள் போல நயம்படப் பேசித் தமது காரியத்தினைச் சாதித்துக்கொள்வதில் ஆண்கள் அசகாய சூரர்கள்'' என்று அறிந்திருந்த உமாதேவிக்கு அவன் கூறியவை வெறும் வெற்று வார்த்தைகளாகவே பட்டன. அதே சமயம் உள்ளே திரும்பி வந்த சங்கர், அவள் உடைகூட மாற்றாமல் ஆழ்ந்த சிந்தனையில் இருப்பதைப் பார்த்துவிட்டு, ''என்ன உமா? உடைகூட மாற்றவில்லையே! அப்படி என்ன சிந்தனை? நான் ஏதும் தவறாகச் சொல்லியிருந்தால் மன்னித்துவிடு'' என்று கூறிச் சிரித்தான்.

''அப்படி ஒன்றுமில்லை.''

''நீர் என்ன நினைத்தீர் என்று கூறட்டுமா?''

''ஒன்றுமில்லை.''

''பொய் சொல்லாதே உமா! உண்மையை நான் கூறட்டுமா?''

''நீங்கள் என்னப்பா? எதற்கும் நீங்கள் கூறுவது தான் சரியென்று நிற்கின்றீர்கள்.''

''நான் கூறுவதெல்லாம் சரியென்று நிற்கவில்லை. உண்மை என்பதைத் துணிவுடன் கூறுகின்றேன். அவ்வளவுதான்.''

''சரி, நான் என்ன நினைத்தேன்? கூறுங்கள் பார்க்கலாம்.''

''நான் கூறுவதிருக்கட்டும். நான் சரியாகக் கூறினால் நான் கேட்பதற்கு உடன்படனும்.''

''சரி, என்ன கேட்பீர்கள்? சரி எதுகேட்டாலும் நான் ஒத்துக்கொள்ளுகின்றேன்'' என்றாள்.

அவள் மனதிலும் ஒரு நப்பாசை. அவனைக் கேட்டு உறவு கொள்ளனும் என்பது அவள் ஆசை. ஏதோ ஆரம்பத்தில் அப்படி வீம்பு பேசினாலும் நாளாக நாளாக அவள் மனம் தடுமாற்றமடைந்தது. எப்படியாகிலும் நன்

கூற்றை மெய்ப்பித்துவிடனும் என்றே நினைத்தாள் உமா தேவி.

''உமா! நீர் என்ன நினைத்திரோ அது உமக்குத் தான் தெரியும். ஆனால் உமது மனதை நன்கு புரிந்து வைத்திருக்கின்ற காரணத்தினால் கூறுகின்றேன். ஆண்கள் நயமாகப் பேசித் தங்கள் காரியத்தைச் சாதிப்பவர்கள். சிலர் அழகாக, அடுக்காகப் பேசக்கூடியவர்கள். அது போல இவரும் பேசுகின்றார். பேசிவிட்டுப் போகட்டுமே என நினைத்தாய். இல்லையா?'' என்றான்.

அவள் சிரித்தாளே தவிர எதுவும் பேசவில்லை. நிமிர்ந்து அவனை நோக்கினாள். தனது எண்ணம் ஈடேறும் நேரம் நெருங்கிவிட்டதென்று பூரித்தாள்.

''என்ன உமா? நான் கூறியது சரியா?''

''சரிதான் நீங்கள் என்ன கேட்கப்போகின்றீர்கள்?''

''பயப்படாதே! நான் அப்படி ஒன்றும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தக் கூடியவனில்லை. உன்னை அணைக்க என் கரங்கள் துடிக்கின்றன. ஆனால், உன் வார்த்தையை மீறி நான் உன்னை அணைக்கமாட்டேன். நீயாக... அதை இப்ப எதற்காகக் கிள்ளுவான். உமா! உன்னோடு இரண்டொரு ஆசிரியைகள் நின்று கதைத்ததை அவதானித்தேன். எனக்கு அவர்கள் குணம் தெரியும். ஆகவேதான் நீர் எனது உத்தியோக விடயத்தில் தலையிடக் கூடாது என்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.''

''சங்கர்! ஐ ஆம் சொறி'' என்றாள்.

''பரவாயில்லை. அப்படி நீ வாய் நிறைய அழைப்பதை நான் விரும்புகின்றேன் உமா. ஆனால், என் வேண்டுகோள் இதுதான்'' என்றான்.

தன் உள்ளத்தினை அவன் எப்படியெல்லாம் புரிந்து வைத்திருக்கின்றான் என்பதை நினைத்த போது அவளுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

தன்னோடு கதைத்த ஆசிரியைகள் கேட்ட உதவியை எப்படி அவன் மூலம் நிறைவேற்ற முடியும் என்ற சிந்த

னயே அவள் உள்ளத்தைப் புதிதாக வாட்டியது. அது வரை தானே மறந்துபோன ஒரு விடயத்தை நினைவில் வைத்துத் தன்னை மடக்கிவிட்டானே என நினைத்த பொழுது பெரும் ஏமாற்றமாகவும் வருத்தமாகவும் இருந்தது அவளுக்கு.

## 17.

மாலையின் மந்தகாசமான இனிமைப் பொழுதில் வானொலி கேட்டுக்கொண்டிருந்தாள் உமாதேவி. சௌந்தரம்மாள் நல்லூருக்கு சுவாமி தரிசனத்துக்காகச் சென்றிருந்தாள். குமார் முன் ஹாலில் ஏதோ பாடம் படித்துக்கொண்டிருந்தான். அதே சமயம் வெளிக் கேற்றடியில் இருவர் வந்துநின்றதைப் பார்த்துவிட்டு எழுந்து சென்றான் குமார்.

"தம்பி! உமாதேவி இருக்கின்றார்களா?"

"ஆமாம்" என்று கூறிவிட்டு, உள்ளே ஓடி வந்து உமாதேவியிடம் கூறினான். உமாதேவி வெளியே வந்து அவர்களை வரவேற்று உட்காரவைத்தாள்.

"என்ன உமா அத்தை வீட்டில் இல்லையா?" வந்தவர்களில் வயதான அம்மாள் விசாரித்தாள்.

"இல்லை! நல்லூருக்குப் போயிருக்கின்றார்கள். ஏன் வசுமதி பேசாமல் இருக்கின்றாய்?" என்று வசுமதியிடம் கேட்டாள் உமாதேவி.

"நான் என்ன பேசுவது உமா? இவர்கள் 'ருன்ஸ்வர்' விஷயமாக உன்னைக் காணவேண்டும் என்றார்கள்" என்று திருமதி செல்லையாவைச் சுட்டிக்காட்டினாள்.

"ஆமாம் உமா! மிஸ்டர் சங்கர் 'றெக்கமெண்ட்'பண்ணினால் மிகுதியை நான் பார்த்துக்கொள்ளுகின்றேன்" என்றாள் திருமதி செல்லையா.

''உமா, இதில் என்ன தயக்கம்? உன் கணவர் சும்மா 'றெக்கமென்ட்' செய்வதுதானே'' என்று வசுமதி அவளை ஊக்கினாள்.

''சரி சொல்லிப் பார்க்கிறேன்'' என்றாள் உமா தேவி.

பின்னர் வேறு உலக விடயங்களைப் பற்றிக் கதைத்து விட்டு அவர்கள் விடைபெற்றுச் சென்றார்கள்.

இதற்கிடையில் குமாரைப் பார்த்த திருமதி செல்லையா, ''இவனைப் பார்த்தால் மிஸ்டர் சங்கரைப் போலவே இருக்கின்றான் இல்லையா வசுமதி?'' என்று வசுமதியைக் கேட்டபொழுது, தேநீர் கொண்டுவரச் சென்றிருந்த உமாதேவியின் காதிலும் அது விழுந்தது. அதற்கு வசுமதி ஏதோ இரகசியமாகச் சொல்லிவிட்டு இருவரும் சேர்ந்து சிரித்ததை நினைத்தால் அவளுக்கு அழுகை வரும் போலிருந்தது. அதேவேளையில், வசுமதியினால் எதுவும் கதைக்க முடியவில்லை. அவளுடைய சிந்தனையை அதிகம் வளர்க்கவிடாமல் இருக்கவோ என்னவோ செளந்தரம்மாள் கோவிலிலிருந்து வந்து சேர்ந்தாள்.

''என்ன உமா இன்னும் சங்கர் வரலை?'' என்றாள் செளந்தரம்மாள்.

''இல்லை. அத்தை இன்று ஏதோ பூஜைக்கிரும் இருக்கென்று கூறினார்'' என்று கூறிய சமயம்தான் சுமித்திராவின் ஞாபகம் வந்தது. அவளுடைய மகளிர்கலாசாரப் பேரவையில் கலந்து கொள்ளவே சென்றிருக்க வேண்டுமென்று தீர்மானித்தவளாய் உள்ளே சென்று ஒரு புத்தகத்தை எடுத்துக் கொண்டு வந்து உட்கார்ந்தாள்.

எட்டரை மணியளவில் சங்கர் வீட்டுக்கு வந்தான். வரும்போது கையில் கொண்டுவந்த மாலையைக் குமாரின் கழுத்தில் போட்டுவிட்டுக் கைதட்டினான்.

''சித்தப்பா! ஏன் மாலை வாங்கி வந்தீங்க? சொக்லேட் வாங்கிவரலை?'' என்றான் குமார்.

''இதோ!'' என்று பாக்கெட்டிலிருந்து சாக்லேட்டை எடுத்துக் கொடுத்துவிட்டு உள்ளே சென்றான்.

"உமா!" என்று புத்தகம் படித்துக்கொண்டிருந்த உமாவை அழைத்தான்.

"ம்" என்ருள்.

"இதோ" என்று அவளுக்கும் ஒரு பாக்கெட் சாக்லேட்டை எடுத்து நீட்டினுன்.

"நானும் குமாரும் ஒன்ரு?" என்ருள்.

"என்னைப் பொறுத்தவரை அப்படியென்று நினைத்துக்கொள்ளேன்" என்று கூறிவிட்டு, உடையை மாற்றிக் கொண்டு வந்தான்.

படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை வைத்துவிட்டு எப்படி விடயத்தை ஆரம்பிப்பது என்று சிந்தித்துக் கொண்டிருந்தாள் உமாதேவி.

"என்ன உமா! ஏதும் தவருகச் சொல்லிவிட்டேனு?"

"இல்லை. உங்களிடம் ஒரு ஹெல்ப் வேண்டியிருக்கு. அதுதான் கேட்கலாமா? இல்லை...... என்று யோசிக்கிறேன்."

"நீர் கேட்டு நான் மறுப்பேனு? ஆனல், உமக்குத் தெரியும் என் கொள்கை பற்றி..."

"என்ன பெரிய வேலை? சும்மா ஒரு சிபார்சுதானே?"

"பாத்திரமறிந்து பிச்சையிடு என்று கூறியுள்ளார்கள். சிபார்சு என்ருல் சாதாரணமா?"

"நான் கேட்டால் நீங்கள் மறுக்க மாட்டீர்கள் என்ற நம்பிக்கையில் ஓம் என்று கூறிவிட்டேன்.

"யார் உம்மிடம் சிபார்சுக்கு வந்தவர்கள்? அன்று அரங்கேற்ற விழாவுக்கு வந்தவர்களா?"

அவர்களில்லை. வசுமதி கூட்டிவந்தாள்."

"வசுமதியா? ஓ உமது சிநேகிதி. அவள் கூட்டி வந்தாள் நிச்சயமாய் சிபார்சு செய்யத்தான் வேண்டும்..." என்று அவன் கூறியபொழுது உமாதேவிக்கு மகிழ்ச்சியாக இருந்தது. அந்த சந்தோஷத்தில் யாருக்குச் சிபார்சு என்ற விடயத்தைக் கூறிவிட்டாள்.

"யார் மிஸஸ் செல்லையாவா?"

"ஆமாம்!"

"அந்த விடயம் சரிவராது உமா. தயவுசெய்து என்னை மன்னித்துவிடும்."

"ஏன்?"

"சுருக்கமாகக் கூறப்போனால், சிலர் உத்தியோகத்தை ஒரு பொழுது போக்காக நினைக்கின்றார்கள். சிலர் பணத்துக்காகக் கட்டி அழுகின்றார்கள். இவர்களில் இந்தம்மாள் இரண்டாவது ரகம். மிஸ்டர் செல்லையாவின் உழைப்பே போதும். பெரிய குடும்பத்தை நிர்வகிக்கலாம். மகன் ஒருவன் நல்ல பதவியில் இருக்கின்றான். மகள் படிக்கின்றாள்! இந்தம்மாள் வீட்டுக்கு முன்னாலுள்ள பாடசாலையில் படிப்பித்துக்கொண்டு சுகமாய் பணம் சம்பாதிக்க நினைக்கிறார்கள். ஏற்கனவே அந்த ஸ்கூலில் 'ஓவஸ்ராவ்' இவர்கள் போனால் அங்கேயுள்ள ஒரு ஏழைப் பெண் பாதிக்கப்படுவாள். ஆகவே இது சரிவராது" என்றான் அமைதியாக.

"யார் எப்படிப் போனால் என்ன? வீடு தேடி வந்து கேட்கும் பொழுது நீங்கள் ஏன் குறைகேட்கணும்?"

"இது உத்தியோக அலுவல். வீட்டுக்கு வரவேண்டியதில்லை. அதுவும்..."

"சொல்லுங்களேன். என் மூலமாய் வந்ததால்தான் நீங்கள்..."

"உமா நீ வந்து கேட்டபொழுது நான்..."

"அது அப்போ. இப்போவென்றால் நான் உங்களுக்கு..."

"மனைவி."

"உங்களுக்கு அந்த மனிசி மீது ஆத்திரம், அதனால்தான் மறுக்கின்றீர்கள்."

"அவர்கள் மீது எனக்கென்ன ஆத்திரம்?"

"அவவுடைய மிஸ்டர் உங்களோடு இன்ஸ்பெக்டர் வேலைக்குப் போட்டி போட்டவர்."

"யார் போட்டி போட்டால் என்ன? எனக்குத்தானே வெற்றி. நான் ஏன் ஆத்திரப்படனும்."

"அதுமட்டுமல்ல, உங்களுடைய அந்தரங்கமெல்லாம் அந்தம்மாளுக்குத் தெரியும்."

"என் அந்தரங்கமென்ருல்?"

"உங்களுடைய ஊழல்கள்தான்."

"உமா வார்த்தையை அளவுடன் பேசு. ஆத்திரப் பட்டுக் கண்டபடி கதைத்தால் பின்பு வருத்தப்பட நேரிடும்."

"நான் கதைத்தால் ஆத்திரப்படுவீர்கள். மற்றவர் கள் கதைப்பதற்கு என்ன செய்வீர்கள்?"

"நாய்கள் குரைத்தால் நான் கவலைப்படப் போவ தில்லை. உன்னை அந்த வரிசையில் நான் இதுவரை நினைக்க வில்லை. அதனுல்தான் கூறுகின்றேன். உமா! நான் என்ன லஞ்சம் வாங்கினேனு? சட்டத்துக்கு மாருன செயல்கள் செய்தேனு? என்ன ஊழல் செய்தேன்?"

"உங்கள் சொந்த வாழ்வில் நடந்தவற்றைக் கூறி னேன், உத்தியோகத்திலல்ல."

"ஒன்றில் இருக்கும் நேர்மை மற்றதில் இல்லாமல் போய்விடுமா?"

"பெண்ணுசை முனிவர்களையே விடவில்லையே"

"ஓ! நீ அங்கே வருகின்ருயா? அப்படி வந்தாலும் மிஸஸ் செல்லையா எனக்கு என்ன யாரையாவது...?"

"உங்கள் வீட்டில் நடந்தவைதான்."

"வீட்டில் நடந்ததென்ருல்?"

"சாட்சி வேண்டுமா? குமாரைப் பார்த்தால் தெரிய வில்லை."

"குமார். அவனில் என்ன தெரிகின்றது?"

"அவன் உங்களைப் போலிருக்கின்ருன்."

"என்னைப் போலிருக்காமல் வேறு உன்னைப் போலவா இருப்பான்? என் அண்ணன் மகன் என்னைப் போல் இருப்பதில் தவறு என்ன?"

''நீங்கள் என் வாயை மூடலாம். ஊர் வாயை மூட முடியுமா?''

''உமா!''

உண்மையைக் கூறினால் உங்களுக்குக் கோபம் வருகுது. அவர்கள் கூறும் பொழுது எனக்கு எவ்வளவு ஆத்திரம் வருகின்றது தெரியுமா?''

''உமா! ஒழுக்கமுடையவர்க்கு ஒல்லாவே தீயவை வழக்கியும் வாயாற் சொலல் என்று வள்ளுவரே கூறியுள்ளார். நல்லவர்கள் இப்படிக் கூறமாட்டார்கள்.''

''அப்படியானால் நானும் ஒழுக்கம் கெட்டவளா?''

''உமா! உண்மையைக் கூறினால் உனக்கேன் கோபம் வருகுது? நான் உன்னைக் கூறவில்லையே உமா. உண்மையைக் கூறினேன்.''

''நீங்கள் அழகாகப் பேசுவீர்கள்.''

''அந்தப் பேச்சில் யார் மயங்கினாலும் நீர் மயங்க மாட்டீர் என்பது எனக்குத் தெரியும்.''

''ஏன் வீண் பிரச்சினை. நீங்கள் இது செய்யமாட்டீர்களா?''

''முடியாது. உனக்காக நான் சிபார்சு செய்து தந்தாலும் ருன்ஸ்வர் போர்ட்டில் உள்ளவர்கள் என் றெக்கமென்டேஷனைக் கான்சல் செய்துவிடலாம். எனக்கு ஆபீஸிலிருக்கும் நற்பெயரை, செல்வாக்கை, நேர்மையைக் கெடுப்பதுதான் உனக்கு விருப்பமென்றால் உன் விருப்பம் போலவே செய்கிறேன் உமா'' என்றான்.

அவன் அப்படிக் கூறியதும் உமாவுக்குத் தர்மசங்கடமாகப் போய்விட்டது. அவள் மௌனமாக இருந்தாள்.

''உமா! உனக்காக நான் இது செய்யணும் என்று நீ நிச்சயமாக விரும்பினால் இதோ'' என்று எழுந்து சென்றவன், ஆபீஸ் அறையிலிருந்து ஐந்து நிமிடங்களின் பின்பு திரும்பி வந்து இரண்டு கடித உறைகளை அவளிடம் நீட்டினான்.

"நான் விரும்பாத காரியம் ஒன்றை நீர் செய்யும் பொழுது, நான் விரும்பும் இதையும் நீரே செய்யும்" என்று கூறிவிட்டுப் போய்ப் படுக்கையில் படுத்தான்.

உமா கடிதங்களைப் பிரித்துப் படித்தாள். ஒன்று மாற்றத்துக்கான சிபார்சு. மற்றது அவனது ராஜிநாமாக் கடிதம். இரண்டையும் கிழித்துவீசிவிட்டுச் சென்று அவளும் படுத்தாள்.

## 18.

இரவின் அமைதியில் அவள் இதயம் அடிக்கும் சப்தம் அவளுக்கே கேட்டது. மல்லாந்து படுத்தவள் திரும்பிப் புரண்டு படுத்தாள். அவளையே பார்த்துக்கொண்டு படுத்துக்கிடந்த சங்கரின் மனம் சற்று அமைதியடைந்தது. என்ன இருந்தாலும் தன்னுடைய கௌரவத்திற்கு பங்கம் ஏற்பட அவள் விரும்பமாட்டாள் என்று தீர்மானித்தவனாக எழுந்து அவளுடைய கட்டிலுக்குப் பக்கத்தில் சென்று அமர்ந்தான்.

''உமா என்மீது கோபமா? என்றான்.

''எனக்கென்ன கோபம்?'' உங்களுக்குத் திருப்தி தானே?'' என்று எழுந்திருந்தாள்.

''சாப்பிட்டாச்சா?''

''இல்லை! அத்தை கேட்டாங்க. நான் நீங்கள் வரட்டும் என்று கூறினேன். அத்தை தூங்கிவிட்டார்கள் போலும்! சரி வாருங்கள்'' என்று எழுந்து சென்றாள். அப்பொழுதே அவள் மனதில் ஓர் தீர்மானம் நிறைவேறியிருந்தது.

சாப்பிட்டுக் கொண்டிருக்கும் பொழுது சங்கர் தன் பாட்டுக்குச் சிரித்தான். அவன் எதற்காகச் சிரித்தான் என்று புரியாவிட்டாலும், அதை எப்படியும் அறிந்து கொள்ள வேண்டுமென்று துடித்தது அவள் மனம். சௌந்

தரம்மாள் வெளியே போகும் வரைக்கும் காத்திருந்தாள். ஆனால், அவர்களும் அன்று சேர்ந்திருந்தே சாப்பிட்டார்கள்.

சாப்பாடு முடிந்து படுக்கைக்குச் சென்ற பொழுது "அது சரி! ஏன் சிரிச்சீங்க?" என்றாள் உமாதேவி.

"நான் சிரிக்கக் கூடாதா உமா?"

"உங்களைச் சிரிக்கவேண்டாமென்று கூறவில்லை. ஆனால், சிரிச்ச மூட் சரியில்லை, அதுதான் கேட்கிறேன். விரும்பினால் சொல்லுங்கள். இல்லையெனில் வற்புறுத்தவில்லை" என்று கூறிவிட்டுப் படுக்கையைச் சரிசெய்தாள்.

"உமா! நான் ஏன் சிரித்தேன் என்று கூறினால் நீ கோபப்பட மாட்டாயே."

"நான் கோபித்து ஆவதென்ன?"

"இருந்தாலும் நீர் தவறாக நினைக்கக் கூடாதல்லவா? நான் ஒன்று சொன்னால் நீர் வேறு ஒன்றாக நினைத்துக்கொண்டு என்னோடு வீண் சச்சரவுப்பட நேரிடும். ஆகவேதான் சில விடயங்களைக் கூறுவதிலும் பார்க்கக் கூறாதிருப்பது நல்லது என்று பேசாமல் விட்டுவிடுகின்றேன்"

"நீங்கள் பேசாமல் இருந்தால் அதுவே உங்களைப் பாதிக்கும் ஒரு காரணியாகின்றது என்பதை ஏன் நினைக்காது இருக்கின்றீர்கள்?" என்று எல்லாவற்றையும் சேர்த்து ஒரு போடு போட்டாள்.

"உமா! நீர் புத்திசாலிதான். ஆனால், இரு பக்கத்து நியாயத்தையும் உணர மறுக்கின்றீர். நாணயம் இரு பக்கங்களையுடையது. ஒரு பக்கம் மட்டும் நன்றாக இருந்தாலும் அது செல்லாது. உமக்குத் தெரியாத விடயத்தை தெரிந்ததாக நினைக்காமலிருந்தால் எதுவும் வராது. அது போகட்டும். நான் ஏன் சிரித்தேன் என்றால் இருவரும் நிமிடத்துக்குள் எதிர்க்கட்சி, ஆளுங்கட்சி அரசியல்வாதிகள் போலக் குமுறிவிட்டு அப்புறம் சாந்தமாகி விடுகின்றோம். எங்கள் இருவருக்குள்ளும் நடக்கும்

அரசாங்கமே இப்படி என்றால் இந்த நாட்டை ஆளும் அரச சபை எப்படி இருக்கும் என்று நினைத்தேன். சிரிப்பு வந்தது. அவ்வளவுதான். வேறு ஒன்றுமில்லை'' என்று கூறி விட்டு, ''கண்டோஸ் சாப்பிடலையா உமா?'' என்றான்.

''உங்களுக்கும் வேண்டுமா?''

''நீர் விரும்பித்தந்தால் சரி. இல்லையென்றால்......'' என்று கூறிச் சிரித்தான்.

''உங்கள் சிரிப்பில் எத்தனையோ கருத்திருக்கு. அதுதான்எனக்கு......'' என்றவள் சாக்லேட்டைப் பிரித்து ஒரு பகுதியை அவனுக்குக் கொடுத்தாள்.

அதே சமயம் அவள் உள்ளத்தில் தீவிரமான ஒரு திட்டம் உதயமானது. அந்தத் திட்டத்தினைச் செயற்படுத்த முதலில் அவள் உள்ளம் தயங்கியதாயினும், ஈற்றில் நிச்சயமாக அதைத் தவிர வேறு வழியில் அவனைத் தான் வெற்றி கொள்ள முடியாதென்று தீர்மானித்தவளாக படுக்கையில் சாய்ந்தாள்.

அன்று வெள்ளிக்கிழமை சௌந்தரம்மாள் சிறுவன் குமாருடன் நல்லூருக்குச் சென்றுவிட்டாள். எப்பொழுதும் வெள்ளிக்கிழமை காலையிலேயே குளிக்கும் உமா தேவி அன்று குளிக்கவில்லை. வெள்ளிக்கிழமைகளில் பதினொன்றரை மணிக்குச் சிவசங்கரன் வீட்டுக்கு வந்துவிடுவான். சமையல் வேலைகளை முடித்துவிட்டு அவனுடைய வரவை எதிர்பார்த்து நின்றிருந்தாள் உமாதேவி.

பதினொன்றரை மணிக்கு அவனுடைய கார் வந்து நின்றதும் உமாதேவி முன்ஹோலைவிட்டு எழுந்து சென்று விட்டாள்.

உள்ளே வந்த சங்கர் வீட்டில் எவரும் இல்லாமல் இருக்கவே, எல்லோரும் கோவிலுக்குச் சென்றுவிட்டனராக்கும் என நினைத்துக் கொண்டே உடையை மாற்றிக் கொண்டு குளியலறைக்கு முகம் கழுவச் சென்றான்.

எப்பொழுதும் போலக் குளியலறைக் கதவு சாத்தப்பட்டிருந்தது. திடீரெனக் கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே சென்றவன் அதிர்ச்சிக்குள்ளாகி நின்றுவிட்டான்.

"ஐ ஆம் வெறி சொறி உமா" என்று கூறித் திரும்ப முயன்ருன்.

"பரவாயில்லை. கூப்பிட்டீங்களா?" என்ருள். அவள் நின்ற நிலையைப் பார்க்கவே அவன் கண்கள் கூசின. உடைகளைக் களைந்துவிட்டுக் குளிப்பதற்காக நின்றிருந்த வேளையில்தான் அவன் கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்திருந்தான்.

ஆனல், உமாதேவி அவன் வரவினுல் கவலைப்பட்டவளாகவோ, பதட்டமடைந்தவளாகவோ தெரியவில்லை. முதலில் நினையாப்பிரகாரமாக நடந்துவிட்ட நிகழ்ச்சி என்றுதான் சங்கரும் நினைத்து வெளியேற முயன்ருன். உமாதேவி கதை கேட்க ஆரம்பித்ததும், அவள் வேண்டுமென்றே அன்று காலையில் குளிக்காமல் விட்டிட்டு இப்படியொரு சந்தர்ப்பத்தை உருவாக்கியிருக்கின்ருள் என்று தீர்மானித்தவனுய், "கூப்பிட்டேன். யாரும் பதில் சொல்லவில்லை. அதனுல்தான் உள்ளே வந்தேன். கதவைப் பூட்டியிருக்கலாமே உமா" என்ருன்.

"ஏன் இங்கே வேறுயாரும் வரமாட்டாங்களே. தெரியும். அதனுல்தான் பூட்டவில்லை. பிளாஸ்கில் காப்பி ஊற்றி வைத்திருக்கிறேன்" என்ருள்.

அவன் நிற்கின்ருனே என்று உடலை மறைக்கவோ, உங்களைத் தவிர வேறுயாரும் வரமாட்டாங்களென்று திரும்பிநிற்கவோ அவள் முயற்சிக்கவில்லை. அதேவேளையில் திரும்பிச் சென்ருலும் அவள் தன்னைக் கோழை என்று முடிவுகட்டிவிடக் கூடும் என்பதால் நிமிர்ந்து அவளைப் பார்த்துச் சிரித்தான்.

"ஏன் சிரிக்கிறீர்கள்?" என்ருள். அவள் இதழ்களில் குறுநகை மின்னியது. அதே சமயம் ஒரு புதிய சக்தி அவள் முகத்தில் பளிச்சிட்டது.

"உமா நான் துறவியோ முனிவனே அல்ல. சாதாரணமான மனிதன். உணர்ச்சிகள் மரத்துவிட்ட மரக் கட்டையில்லை நான்" என்று அவன் கூற ஆரம்பித்ததும் உமா தன் எண்ணம் வெற்றி பெற்றதாகவே எண்ணி

ளுள். ஆனல் அவன் அடுத்துக் கூறியவை அவள் எண்ணத்தில் மண்ணையள்ளிப் போட்டது.

''உமா இந்த அழகான உடலைப் பார்த்துவிட்டும் நான் சிலையாக நிற்கின்றேனே. ஏன் தெரியுமா? நான் சாதாரணமான மனிதனுயினும் என் அறிவு உணர்ச்சிகளைக் கட்டியாளவல்லது. உணர்வுக்கு அடிபணிந்து அமிழ்ந்துவிடும் சிற்றறிவு எனக்கில்லை. ஆயிரம் ஆண்டுகள் தவமிருந்த மாமுனிவர்களே அரை நொடியில் பெண்ணுக்கு அடிமையானதாக நீர் அன்று கூறினீர். ஆனல், இந்தச் சிவசங்கரன் எந்த அழகுக்கும் தன்னை அடிமையாக்கிவிட மாட்டான். பேய்க்குப் படையலிடும் பிரசாதமாக நான் உன்னை நினைக்கவில்லை. இது தெய்வத்துக்குரியது. அந்த முறையில் அதை ஆட்கொள்ளவே விரும்புகின்றேன்'' என்று கூறிக் கதவைப் படாரென அடித்துச் சாத்திவிட்டுச் சென்ருன்.

உமா திகைத்துப் போய் அப்படியே நின்றுவிட்டாள். தன்னுடைய திட்டம் அவனுக்குப் புரிந்துவிட்டதே என்று வருந்திய அதே வேளையில் தன் செயல் கீழ்த்தரமான ஒன்ருக இருக்குமோ என்றும் பயந்தாள்.

''பேய்க்குப் படையலிடும் பிரசாதமாக நான் உன்னை நினைக்கவில்லை. தெய்வத்துக்கு அர்ப்பணமாகவேண்டியவள் நீ'' என்று அவன் கூறிய வாக்கியத்தில் எத்தனையோ கருத்துக்கள் அடங்கிக் கிடந்தன. அதேசமயம் இப்படிக் கீழ்த்தரமான முறையில் நடக்க முயற்சிக்காதே என்று அவன் இடித்துக்கூறியதாகவும்பட்டது,

அன்ெருருநாள் தான் பெண்கள் விடயத்தில் எவரும் தவறு செய்திருக்க முடியாது என்று கூறியதை வைத்துக்கொண்டே இப்படிக் கூறியிருக்கின்ருன் என்று நினைத்த பொழுது அவளுக்கு அழுகை வந்தது. அவள் உடல் நீரில் நனைந்துகொண்டிருந்தாலும் உள்ளம் அழுதுகொண்டிருந்தது. அவள் உள்ளத்தில் அதுவரை உறங்கிக் கொண்டிருந்த இயற்கையான கர்வம் விழித்துக்கொண்டது. தன் தோல்வியை வெற்றியாக்கிக் காட்ட வேண்டும்

என்று கறுவியபடி அவசரமாகக் குளித்து உடைமாற்றிக் கொண்டு வந்தாள்.

சங்கர் கோப்பி பருகிவிட்டு, அன்றைய தினசரி ஒன்றைப் பார்த்தபடி சாய்வு நாற்காலியில் படுத்துக் கிடந்தான்.

''அது சரி! தங்கள் தவறை மறைப்பதற்காக உங்களைப் போன்ற பெரிய மனிதர்கள் மற்றவர்கள் மீது குற்றம் சுமத்துவதுதான் வழக்கமா?'' என்றாள்.

''உமா தவறு என்று தெரிந்துகொண்டும் அதை மறைத்துத் தன்னைப் பெருமைப்படுத்த நினைப்பவர்களைப் போன்றவனில்லை நான்.''

''இங்கே பாருங்கள். அத்தையின் முன்னிலையில் அவங்கள் இங்கிருக்கும் பொழுது நான் கதைத்தது நமக்கிடையேயுள்ள வேறுபாட்டை வெளிக்காண்பிக்கக் கூடாது என்பதற்காகவே நான் பேசாமல் ஒதுங்கி ஒதுங்கிப் போனேன். நீங்கள் அதை உணர்ந்தவராகத் தெரியவில்லை. நீங்கள் செய்யும் தவறைக்கூட முடிவில் என் தலை மீது சுமத்திவிடுகின்றீர்கள்.''

''அப்படி என்ன செய்தேன் உமா?''

''இப்போ என்ன நடந்தது?''

''என்ன நடந்தது?''

''குளிக்கும் அறைக்குள் நான் உங்களை அழைத்தேனு? நீங்களாக வந்தீர்கள். அப்புறம் என்ன கூறினீர்கள்?''

''உமா? தூக்கத்தில் இருப்பவனை எழுப்பலாம். தூங்குவதுபோல் பாசாங்கு செய்பவனுக்கு யார் என்ன செய்ய முடியும்?''

''பாசாங்கு செய்வது நீங்களா? நானு?'' அவளுக்கும் உண்மையிலேயே ஆத்திரம் ஏற்பட்டுவிட்டது.

''உமா ஏன் இப்போ கத்துறுய்?''

''ஏன் உங்களுக்குப் பயமாயிருக்கா? நான் கூடாதவள். உங்களைக் கீழ்த்தரமான முறையில்... அப்படித் தானே பேசிவிட்டு வந்தீர்கள்? என்னை ஏமாற்றியது

போதாதென்று, இப்போ என்னைக் கெட்டவளாக வும்...'' அவள் குலுங்கி அழுதாள்.

''உமா! நீ தவருக நினைக்கின்ருய். நான் உன்னை ஏமாற்றவில்லை.''

''அப்படியாயின் உங்கள் அண்ணி எப்படி இறந் தாள் என்று சொல்லுங்கள். ஊரெல்லாம் உங்களைப் பற்றி கண்டபடி கதைக்கும் பொழுது நான் கேட்டால் மட்டும் துடிக்கின்றீர்கள்.''

''உமா! அப்படி என்னதான் கதைக்கின்ருர்கள் என்று சொல்லேன். சும்மா அடிக்கடி கதைக்கிருர்கள் என்று என்னை மிரட்டிக்கொண்டிருக்கிருயே.''

அவன் அப்படிக் கேட்டதும் உமாவுக்குத் துன்பத்தி லும் ஓர் ஆவேசம் பிறந்துவிட்டது. தன் மனதுக்குள் வைத்துக்கொண்டிருந்த சில விடயங்களைத் திறந்து கொட்டக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த நினைத் துக்கொண்டாள்.

''உங்கள் அண்ணன் இறந்தது உங்களால் என்று கூறுகிருர்கள்'' என்று ஆரம்பித்தாள்.

''உமா!''

''நீங்கள் ஏன் கத்துகிறீர்கள்? கேள்விப்பட்டதைத் தான் கூறுகின்றேன். உங்களுக்கும், அண்ணிக்கும் இடை யில் இருந்த உறவு உங்களண்ணனுக்குத் தெரிந்து......'' அவளால் தொடர்ந்து பேச முடியாமல் குரல் தழுதழுத் தது.

''உமா பைத்தியம் மாதிரி உளருதே! யாரோ வேண்டு மென்று உனக்குக் கூறியுள்ளனர். நான் அப்படிப்பட்டவ னில்லை உமா.

''உங்களண்ணியின் நடத்தைகெட்டதனத்தால் தானே அவர் இறந்தார்?''

''அது பற்றி எதுவும் கதைக்காதே உமா. பிளீஸ் உன்னை மன்ருடிக் கேட்கின்றேன். இறந்துபோனவர்கள் விடயம் பற்றிக் கதைக்காதே!''

''ஏன் பயமாயிருக்கா? சிறுவன் குமார்கூட உங்கள் மகன் என்றுதான் எல்லோரும் கதைக்கின்றூர்கள். இவற்றையெல்லாம் மறைக்கத்தானே இந்தவேடம்?''

''நான்சென்ஸ். உனக்கென்ன பைத்தியமா?''

''அப்படிப் பிடித்திருந்தால் நான் இப்படிக் கலங்கத் தேவையில்லையல்லவா?''

''உமா மனிதர்கள் தேவர்களல்ல. தவறு செய்வது இயல்பு. அதில் நமக்கு ஈடுபாடில்லாத போது அதுபற்றி நாம் ஏன் அக்கறைகொள்ள வேண்டும்?''

''எதில் உங்களுக்கு ஈடுபாடில்லை. வருவோர் போவோர் எல்லாம் இவன் உங்கள் மகன் என்று குமாரைப் பார்த்துக் கூறுகிறூர்களே! அதை இல்லையென்று கூறுவீர்களா? நான் பேசாதிருக்க வேண்டுமா?''

''உமா பைத்தியமாய்க் கதைக்காதே.''

''எது பைத்தியம்?''

''குமாரைப் பற்றி நீ கூறுவது பைத்தியத்தனமான கதை. அப்படிச் சொல்வது உனக்கு நல்லதல்ல.''

''ஏன் இப்படி என்னை ஏமாற்றுகின்றீர்கள்?''

''உமா உனக்கு நான் சொல்வதில் நம்பிக்கை ஏற்படவில்லை. நீ நினைப்பதை நான் சொல்லவில்லை. ஒப்புக்கொள்ள வேண்டும். அப்படித்தானே?''

''உண்மையை ஒப்புக்கொள்ளுங்கள். என் வாழ்வை நாசமாக்காதீர்கள்.''

''எந்த உண்மையை ஒப்புக்கொள்ளச் சொல்லுகிறூய்?'' அவனுக்கும் குரலில் கோபம் ஏறிவிட்டதை உணர்ந்தாள் உமா. கோபத்தில் சிலர் உண்மையைக் கூறிவிடுவார்கள் என அறிந்திருந்தாள் உமாதேவி.

''குமார் பற்றிய விடயத்தையாவது தெளிவாக்குங்கள்.''

''அவன் என் மகன்தான். யாருக்குப் பிறந்தாலும் எங்கள் வம்ச விளக்கு அவன்தான். அவனுக்கு எல்லாமே நான்தான்.''

''குளறுபடியான பதில். இதிலிருந்தே தெரிகின்றது அவன் உங்களுக்குப் பிறந்தவன்...'' என்று அவள் கூறி முடிக்குமுன்பு பளீரென அவள் கன்னத்தைப் பதம் பார்த்தது அவன் கரம்.

அவன் அப்படிச் செய்வான் என்று சிறிதும் எதிர்பார்க்காத உமாதேவி அதிர்ச்சியடைந்தவளாகக் கன்னத்தைத் தடவியவாறு தலை குனிந்து நின்றாள்.

''ஐ ஆம் வெறி சொறி உமா. உன்னுடைய அழகினால் தூண்டமுடியாத என் உணர்ச்சிகளை உன் தகாத வார்த்தையால் தூண்டிவிட்டாய். என்னை எது வேண்டுமானாலும் சொல். ஏற்றுக்கொள்ளுகிறேன். நீ கூறுவது எங்கள் குடும்பத்தினையே... சீச்சீ நீயும் ஒரு பெண் என்று தான் இதுவரை நினைத்தேன். நீ சாதாரணப் பெண்களைவிடக் கேவலமானவளாக மாறிவிட்டாயே உமா!'' என்று கூறிவிட்டு, கட்டிலில் அருகேயிருந்த சிறு மேசை மீது வைக்கப்பட்டிருந்த வானொலியைத் திருகினான்.

''போனால் போகட்டும் போடா— இந்த
பூமியில் நிலையாய் வாழ்ந்தவர் யாரடா?''

என்ற சினிமாப் பாடல் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது. கவிஞன் என்ன நோக்கத்துடன் பாடினானோ தெரியாது. ஆனால், அதேவேளையில் அவனுக்கு அந்தப் பாடல் மனதுக்கு ஆறுதலளிப்பதாக இருந்தது.

## 19.

மன நிம்மதி உடையவனுக்குத்தான் சந்தோஷம் இருக்கும். அது இல்லாதவர்களுக்கு எதுவுமே இல்லாத ஒரு வெற்றுநிலை ஏற்படும். அந்த நிலை வரும்பொழுது உளத்தாக்கம் உடலையும் பாதித்துவிடும். உமாவின் செயலால் அதுவரை பாதிக்கப்படாதிருந்த சங்கரின் உடலும்

உள்ளமும் குமாரின் பிரச்சினையால் பாதிக்கப்பட்டு, சில நாட்கள் அவனைப் படுக்கையிலேயே போட்டுவிட்டது. அவன் அப்படிப் படுக்கையில் கிடந்த சமயம், உமா அதுபற்றி அக்கறைப்பட்டவளாகத் தெரியவில்லை. அவனுடைய செயலால் அவள் மேலும் தன் நிலையைப் பலப் படுத்திக் கொண்டாளே தவிர, சிறிதும் மாறவில்லை. சங்கர் உடலும் மனமும் தேறி பழையபடி கலகலப்பாக உலாவத் தொடங்கியிருந்தான். உமா அவனுடன் முன்பு போல அதிகம் கதைப்பதில்லை. அவன் ஏதாவது கேட்டால் மட்டுமே பதில் கூறுவாள். இல்லையெனில் தன் பாட்டில் பேசாமடந்தையாக இருப்பாள். சிறுவன் குமாருடனும் அவள் கதைப்பதை நிறுத்திவிட்டாள்.

மாதங்கள் பல கடந்துவிட்டன. மன மகிழ்ச்சியில்லாத வாழ்க்கை அவளைச் செல்லரித்த மரமாக்கிவிட்டது. அவள் உடல் நலம் பாதிக்கப்பட்டு ஒருநாள் குளிக்கும் அறையில் விழுந்துவிட்டாள். சப்தம் கேட்டு ஓடிப்போய்ப் பார்த்த சங்கர் பதறிவிட்டான். அவளைத் தூக்கிவந்து கட்டிலில் கிடத்தி, ஈரம் துடைத்து, உடை அணிவித்துவிட்டுத் தாயாரைக் கூப்பிட்டான்.

''என்னடா நடந்தது?'' என்றாள் சௌந்தரம்மாள்.

''மயங்கி விழுந்துவிட்டாளம்மா,''

''கடவுளே! ஆண்டவன் கண் திறந்திருக்கிறான்'' என்று மகிழ்ச்சி பொங்க கூறினாள் சௌந்தரம்மாள்.

''என்னம்மா கூறுகின்றீர்கள்?''

''கர்ப்பமாயிருக்க வேண்டுமடா சங்கர்.''

''போங்கம்மா. அவள் ஏன் மயங்கினாளோ தெரியாது.'' என்று கூறிவிட்டு டாக்டரை அழைத்துவர வெளியே சென்றான்.

டாக்டர் வந்து பார்த்து பலவீனம் என்று கூறிவிட்டுச் சென்றார். அவரைக் கூட்டிச் சென்றுவிட்டுவிட்டு மருந்துப் போத்தல், குளிகை மருந்துகளோடு வந்தான். அப்பொழுது உமா மயக்கம் நீங்கி எழுந்தாள்.

அதுவரை நடந்ததெதுவும் நினைவில்லாது படுத்துக் கிடந்த உமாவுக்கு, தான் குளிக்கும்பொழுது மயங்கி விழுந்தது ஞாபகத்துக்கு வந்தது. தன்னை யார் தூக்கிப் படுக்க வைத்திருப்பார்கள் என்று எண்ணி வெட்கினாள். யாரென்று யாரிடம் கேட்பது?

''உமா என்னம்மா நடந்தது? அவன் பதறிப்போய் விட்டான்'' என்றாள் சௌந்தரம்மாள்.

''என்னமோ மயக்கமாய் வந்தது. அப்புறம் ஒன்றுமே தெரியவில்லை அத்தை'' என்று அவள் கூறிக்கொண்டிருக்கையில் அங்கே வந்தான் சங்கர்.

''அம்மா, இவ்வளவு மருந்தையும் மணித்தியாலத்துக்கு ஒருதடவை கொடுக்கும்படி டாக்டர் கூறினார்'' என்று கூறிவிட்டு மருந்துகளைத் தாயிடம் கொடுத்தான். அப்பொழுது உமாதேவி அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவனோ அவளைத் திரும்பியே பார்க்காமல் வெளியே சென்றுவிட்டான்.

இரவு பதினொரு மணிக்கு சில நிமிடங்கள் இருக்கும்பொழுது உமாதேவி கண்விழித்தாள். அவளருகே சாய்வு நாற்காலியில் புத்தகம் படித்துக்கொண்டிருந்தான் சங்கர். அதுவரை அவன் தாயாரே அவளுக்கு மருந்து கொடுத்துக்கொண்டிருந்தாள். உமா எதுவும் தெரியாதவள் போன்று திரும்பவும் கண்களை மூடிக் கொண்டு பேசாமல் கிடந்தாள். சுவர்க் கடிகாரம் பதினொன்று அடித்து ஓய்ந்ததும், புத்தகத்தை மூடி வைத்து விட்டு, ''உமா, உமா'' என்று அழைத்தான். உமா விழித்துப் பார்த்தாள்.

''மருந்து'' என்று கூறி ஒவ்வொன்றாக எடுத்துக் கொடுத்தான்.

''நீங்கள் தூங்கவில்லையா?''

''நீ இப்படிக் கிடக்கும்பொழுது எனக்கு எப்படித் தூக்கம் வரும்?'' என்று கூறிவிட்டு மீண்டும் புத்தகத்தை எடுத்தான்.

''சாப்பிட்டீர்களா?''

''ஏதோ கொஞ்சம் சாப்பிட்டேன்.''

அன்றிரவு முழுவதும் அவன் விழித்திருந்து அவ ளுக்கு மருந்து கொடுத்துக் கவனித்தான். விடியற்காலை நான்கு மணியளவில் அவள் விழித்துப் பார்த்தபொழு தும், அவன் அருகிலேயே இருப்பதைக் கண்டாள்.

''என்னங்க, நீங்கள் இப்படி இருந்தால், உங்களுக்கு ஏதும்...''

''வந்தால் என்ன உமா? எனக்கு ஏதும் வந்தால் அம்மா பார்ப்பாங்க. இது என் கடமையில்லையா?''

''கடமைக்காகத்தான் விழித்திருந்து இப்படிக் கவ னிக்கின்றீர்களா?''

''உமா, நான் உன்னை மனமார விரும்பினேன். அன்பு கொண்டேன். அந்த அன்பு புனிதமானது. அதற் கிடையில் உனக்கும் எனக்கும் கொள்கை மோதல் ஏற் பட்டு விட்டதால் உன்னிடம் நான் வைத்த அன்பு இல்லையென்று ஆகிவிடுமா?'' என்றான்.

அவன் கூறும் ஒவ்வொரு வார்த்தையும் அவள் இத யத்தில் சம்மட்டி கொண்டு அடிப்பதுபோலிருந்தது. அவன் இரண்டொருநாள் படுக்கையில் கிடந்தபொழுது, தான் பாராமுகமாக இருந்ததையிட்டு வெட்கினாள். அந்த நிகழ்ச்சிகளையெல்லாம் மனதில் வைத்திருக்காமல் தனக் குப் பணிவிடை செய்யும் அவனுடைய நற்பண்பை நினைத்தபொழுது அவள் விழிகள் குளமாகிக் கண்ணீர் சொரிந்தது.

''உமா, ஏன் இந்தக் கண்ணீர்? நான் ஏதும் தவறாக...''

''இல்லை. என்னை நினைத்துத்தான்...''

''உமா, என்ன இது? குழந்தைப்பிள்ளை மாதிரி. அழாதே உமா'' என்று துவாயினால் அவள் கண்ணீரைத் துடைத்துவிட்டான்.

''நீங்கள்தான் என்னை 'பாத் ரூமில்' இருந்து தூக்கி வந்து...'' என்று கேட்டாள்.

''ஜேஸ், ஜேஸ். நானேதான். நீ தொடக்கூடாது என்று கூறியதை நான் மறக்கவில்லை. ஆபத்துக்கு பாப மில்லை. அதற்காகத்தான் அழுதியா? பிளீஸ், உமா அதை மறந்துவிடு. நான் உன்னை என் மனைவி என்று நினைத்து அப் படிச் செய்தேனில்லை. எனக்கொரு மகளிருந்து அப்படி மயங்கி விழுந்திருந்தால் எவ்வித உணர்வோடு நடந்து கொள்வேனே அப்படித்தான்'' என்று அவன் கூறிய பொழுது, உமாவின் இதயமே வெடித்துவிடும்போலிருந் தது. குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

''உமா, என்ன இது?''

''ஒன்றுமில்லை'' என்று தன் கண்களைத் துடைத்துக் கொண்டாள். அந்தக் கணமே தன் பிடிவாதத்தைக் கைவிட்டு விட்டு அவன் மார்பில் விழுந்து கதறவேண் டும் போலிருந்தது அவளுக்கு. கண்ணீர் பெருகும் விழி களைத் துடைத்துக்கொண்டே, ''சங்கர், நான் அதற்காக அழவில்லை. என்னால் உங்களுக்கு எவ்வளவு கஷ்டம்'' என்றாள்.

''இது என் கடமைதானே'' என்று கூறிவிட்டு மேலும் பல நகைச்சுவைக் கதைகள் கூறி அவளைச் சிரிக்க வைத்து மகிழ்வித்தான்.

மறுநாட் காலை எட்டு மணியளவில் அறைக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்த சங்கர், ''உமா, மருந்து எடுத்தாச்சா?'' என்றான்.

''ஆமா. நீங்கள் ஆபீசுக்குப் போகலையா?''

''இல்லை.''

''ஏன்?''

''லீவு போட்டிருக்கின்றேன். இன்று வெள்ளிக்கிழமை இல்லையா? அம்மா கோவிலுக்குப் போவார்கள். அவர் களுக்கு ஏன் கஷ்டத்தைக் கொடுப்பான்'' என்று கூறிக் கொண்டே நாற்காலியில் அமர்ந்தான். உமா அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

''ஏன் சிரிக்கிருய் உமா?''

''எனக்காகத்தான் வேலைக்குப் போகாமல் விட்டீர்கள்?''

''வேறு யாருக்காக உமா? உன்னைவிட எனக்கு வேலை பெரிதா என்ன?''

''உண்மையாகத்தான் கேட்கின்றேன். இப்படியே நான் ஒரேயடியாகக் கிடந்தால் நீங்கள் வேலைக்குப் போகாமல் விட்டுவிடுவீர்களா?''

''பைத்தியம். ஏன் அப்படிச் சொல்கிருய். உனக்கு அப்படி ஒன்றும் வந்திடாது. உமா! நான் உன்னிடம் வைத்துள்ள அன்பு உண்மையான புனிதம் நிறைந்ததாகும். கேவலம், எமக்கு இடையில் தாம்பத்தியம் இல்லையென்ருல் அன்பில்லையென்று அர்த்தமா? அதனுல்தான் அன்பு வளர்கிறதா? சுயநல நோக்கம் எதுவுமில்லாதஅன்புதான் தூய அன்பு. நீ என்னிடம் எப்படியோ நான் அறியேன். நான் நிச்சயமாக உன்னை வெறுக்கவில்லை. கோபிக்கவில்லை'' என்ருன்.

''நான் தவருக நினைத்துவிட்டேன் சங்கர்.''

''இல்லை, உன் கொள்கையை அதற்காக நீ விடத் தேவையில்லை. சந்தேகம் என்ற கருமேகம் உன்னை அறியாமை இருளில் தள்ளிவிட்டிருக்கின்றது. அந்த இருளில் நீ நிரந்தரமாய் இருக்கமாட்டாய் என்று எனக்குத் தெரியும். உண்மை என்றும் ஒளித்திருக்க மாட்டாது. அது ஒருநாளைக்கு வெளிப்படும் பொழுது, நீ அந்த இருளில் இருந்து வெளிவருவாய். அப்பொழுது நீ முன்பு என்னிடம் வைத்திருந்த அன்பைவிட இரு மடங்கு கூடுதலான அன்பைச் செலுத்துவாய் என்ற நம்பிக்கை எனக்கிருக்கின்றது. அதனுல்தான் நான் உன்னுடன் கோபிக்கவில்லை'' என்று ஒரு பிரசங்கமே நிகழ்த்திஞன்.

உமாவுக்கு என்ன கூறுவதென்றே புரியவில்லை. தன்னுடைய பலவீனமான எண்ணத்தின் விளைவு தன்னை

நிர்க்கதிக்கு ஆளாக்கிவிட்டதை உணர்ந்தாள். சந்தேகம் ஒரு விஷநோய் என்று தெரிந்தும் தான் அதற்காளாகி விட்டோமே என்று எண்ணியபொழுது அவள் உள் இருந்த இயல்பான கர்வம் அதனை ஏற்க மறுத்தது. தனக்கு அவன் உதவி செய்கிறானே என்பதற்காக அவன் செய்த வைகள் இல்லையென்றாகிவிடுமா? என்று நினைத்தபொழுது அவள் பேசாமடந்தையாகி விட்டாள்.

ஒன்பது மணியளவில் தபால்காரன் கடிதங்களைக் கொண்டுவந்து ஒப்படைத்துவிட்டுச் சென்றபின்னர், ஒவ்வொரு கடிதமாகப் படித்தவன், ஒரு கடிதத்தைப் படித்தபொழுது ஆழ்ந்த யோசனையில் ஆழ்ந்தான்.

''என்ன யோசிக்கின்றீர்கள்?''

''ஞாயிற்றுக்கிழமை கொழும்புக்குப் போகணும் போலிருக்கு. நமக்குத் திருமணம் முடிந்தபின்பு உம்மை விட்டுப் பிரிந்துபோகும் முதற் சந்தர்ப்பம். இதில் எனக்கு வெற்றி கிடைத்தால், உனக்கும் சந்தோஷமாயிருக்கும் உமா.''

''அப்படி என்னதான் நடக்கும்?''

''அப்புறம் கூறுகின்றேன்'' என்று கூறிவிட்டு சாய்வு நாற்காலியில் சாய்ந்தவன் அப்படியே தூங்கிவிட்டான்.

அவன் நித்திரை கொள்வதைப் பார்த்த உமாவின் மனதில் பல்வேறு சிந்தனைப் போராட்டங்கள் எழுந்தன. அவள் கட்டிலில் எழுந்திருந்து அவன் நெற்றியைத் தடவ கையை நீட்டினாள். திடீரென அவள் மனக்கண்ணில் ஒரு பயங்கரக் காட்சி. குமாரின் தாயின் மரணத்துக்குக் காரண மான கொலையாளியாகக் காட்சியளித்தான் சங்கர். நீண்ட அவளுடைய கரங்கள் தாமாகவே பின்வாங்கின. பேசா மல் கட்டிலில் மீண்டும் படுத்துவிட்டாள்.

அவன் கொலைக்குக் காரணமாக இருப்பான் என் பதை மறக்க எவ்வளவோ முயற்சி செய்தபொழுதும், திடீரென அவன் கொலைகாரனாகக் காட்சியளிப்பது போன்ற ஓர் பிரமைத் தோற்றம் அவள் புதை மனதில்

இருந்து தோன்றுகின்றதே. அவளால் ஒன்றுமே செய்ய முடியாத பரிதாப நிலை. விழிகள் குளமாகிப் பெருகப் படுத்துக் கிடந்தாள்.

## 20.

சங்கர் கொழும்புக்குப் போவதற்கு முன்பே உமாவின் உடல் நிலை தேறிவிட்டது. அவன் எதற்காகச் செல்கின்றான் என்ற விடயத்தைப் போய்வந்து கூறுவதாகக் கூறிவிட்டுச் சென்று விட்டான்.

அவன் கொழும்புக்குப் போனதும் உமாவுடைய மனதில் புதிய சிந்தனைகள் பல உருவாகின. அவனுடைய சொந்தப் பாவிப்புக்கென இருந்த அலுமாரியைத் திறந்து பார்த்தால் என்ன என்று எண்ணினாள். மற்றும் இடங்களையெல்லாம் நாளுக்கு நாள் பார்த்திருந்தாளாயினும், அந்த அலுமாரித் திறப்பை மட்டும் அவன் தன்னுடனேயே வைத்திருந்தான். கொழும்புக்குப் புறப்படுவதற்கு முன்பும் அந்தத் திறப்புக் கோர்வையை அவளிடம் கொடுக்காமல் ஒரு மேசை லாச்சிக்குள் போட்டுப் பூட்டி விட்டு, ஏனைய திறப்புகளை மாத்திரம் அவளிடம் கொடுத்திருந்தான்.

உமா தனது சிந்தனையைச் செயலாக்க முனைந்தாள். அலுமாரியைத் திறந்தவளுக்கு பெருத்த ஏமாற்றமே ஏற்பட்டது. அலுமாரிக்குள் இருந்த ஒரு சிறிய அறைக்கு எந்தத் திறப்புமே பொருந்தவில்லை. கடைசியில் எங்கும் தடவி ஓர் லாச்சியினுள் கிடந்த ஒரு திறப்பை எடுத்துத் திறந்து பார்த்தாள். அந்த அறைக்கதவு உடன் திறந்து கொண்டது.

அதற்குள்ளே பழைய டயறிகள் அடுக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு டயறியாக எடுத்துப் பார்த்தாள். அவற்றைப்

படித்தவளுக்கு வியப்பூட்டும் பல செய்திகள் அம்பலமாயின.

ஒரு டயறிக்குள் சில கடிதங்கள் ஒட்டப்பட்டுக் கிடந்தன. அவற்றை எடுத்துக் கிழித்துப் படித்துப் பார்த்தபொழுது அவள் திடுக்கிட்டாள். அவளுக்குத் திருமணத்துக்கு முன்பு சங்கரைப்பற்றி அவதூறாக எழுதப்பட்டு வந்த கடிதம் போன்று, ஒரு கடிதமும் அதனுள் இருந்தது. உமாவைப்பற்றிப் பல அவதூறுகள் அக்கடிதத்தில் எழுதப்பட்டிருந்தன. அவற்றைப் படித்து விட்டு தன்னிடம் எதுவும் கேளாமல் திரிந்த சங்கரைப்பற்றி எப்படி நினைப்பதென்றே அவளுக்குப் புரியவில்லை. அந்தக் கடிதத்தின் முடிவில் சங்கரின் குறிப்பொன்றும் காணப்பட்டது. அவசர அவசரமாக அதைப் படிக்கலானாள்.

''எனக்கு என்னிடம் நம்பிக்கை இருப்பது போலவே உமாவையும் நான் நம்புகின்றேன். யாரும் என் மனதைக் குழப்ப முடியாது'' என்று அவன் எழுதி இருந்ததைப் படித்தபோது அவள் உள்ளம் குலுங்கியது. உணர்வுகள் சிலிர்த்தன.

அந்த வருடத்திய நாட்குறிப்பும் அதனுள் இருந்தது. எடுத்து ஒவ்வொன்றாகப் படித்தாள். அவளுடைய திருமணத்துக்கு முன்பிருந்து, முதல் நாள் வரையில் நடைபெற்ற விடயங்கள் யாவும் எழுதப்பெற்றிருந்தன.

அந்த நாட்குறிப்பிலிருந்த வாசகங்கள் அத்தனையும் அவள் மனதில் பதிவாகி விட்டிருந்தன. அதற்கிடையில், சௌந்தரம்மாளின் குரல் கேட்டதும் யாவையும் அப்படியே போட்டுவிட்டுப் படுக்கையில் வந்து வீழ்ந்தாள். அவனுடைய நாட்குறிப்பில் எழுதப்பட்டிருந்த வசனங்கள் ஒன்றன்பின் ஒன்றாக அவள் மனவானில் சுழன்று கொண்டிருந்தன.

''உமாவின் மனதை யாரோ கெடுத்து விட்டிருக்க வேண்டும். இல்லையெனில் உமா என்னுடன் வீண் சண்டையிடமாட்டாள். அவளுடைய பலவீனம் என்றைக்காவது

ஒரு நாள் முடிவுக்கு வரும். அதுவரை பொறுமையுடன் இருப்பதுதான் எனக்கு அழகு'' என்று ஒரு பக்கத்தில் எழுதப்பட்டிருந்தது.

இன்னொரு பக்கத்தில் ''அண்ணியின் மரணம் எப்படி நிகழ்ந்தது? ஏன் நிகழ்ந்தது என்பது எனக்கு மட்டுமே தெரிந்த இரகசியமாக இருக்க வேண்டும் என்ற அண்ணியின் வேண்டுகோளை என் சுயநலனுக்காக நான் என்றுமே மீறப்போவதில்லை'' என எழுதப்பட்டு இருந்தது.

அப்படியாயின் அவள் மரணத்தில் ஏதோ ஓர் மர்மம் இருக்க வேண்டும். அதற்கு அத்தாட்சி எதுவும் இல்லையே. நாளைக்குத் தெரிந்து விடும் என்று நினைத்தவாறே படுத்துத் தூங்கிவிட்டாள்.

மறுநாட் காலை விடிந்ததும் இதே வேலையாக அந்த அலுமாரி அறையிலுள்ள சகல நாட் குறிப்புக்களையும், கடிதங்களையும் படித்து முடித்து விட்டாள். அவளுடைய ஆர்வம் அடங்கவில்லை. அந்த அறையினுள் ஒரு பக்கத்தில் கிடந்த சிறு பலகையை நகர்த்தினாள். அதற்குள் ஒரு சிறு அறை இருந்தது. அதற்குள் ஒரு நீண்ட கடித உறை கிடந்தது. அதை ஆவலோடு எடுத்துப் பிரித்தவளுடைய கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன.

குமாரினுடைய அம்மாவினால் சங்கருக்கு எழுதப்பட்ட நீண்ட கடிதம் அது. அவசர அவசரமாக ஒரே மூச்சில் படித்து முடித்தாள் உமாதேவி. படித்து முடித்ததும் கடிதத்தை நெஞ்சோடு அணைத்துக்கொண்டே, ''என் தெய்வமே! என்னை மன்னிப்பாயா?'' என்று கேட்டுக் கலங்கினாள்.

''உமா நீ என்றுமே அறியாமை இருளில் மூழ்கி இருந்துவிடமாட்டாய். என்றைக்காவது ஒரு நாள் உண்மை என்ற ஒளிக்குள் நீ வரும்பொழுது என்மீது உள்ள வெறுப்பெல்லாம் இரட்டிப்பு விருப்பாக மாறும்.'' என்று சங்கர் கூறிய வார்த்தைகள் அவள் உள்ளத்துள் ஒலித்தன.

அந்தக் கணமே தனக்கும் அவனுக்குமிடையே நடைபெறப் போகும் இன்ப வாழ்வுபற்றிக் கற்பனைபண்ணத் தொடங்கி விட்டாள். அதுநாள்வரை அனுபவித்தறியாத புதுமை உணர்வுகள் அவள் உள்ளத்துள் புது மணம் வீசின. காலையில் தோட்டத்தில் மலர்ந்த பல்வேறு மலர்களின் சுகந்த வாசனை அவள் மன நினைவுகளுக்கு மேலும் ஊக்கமூட்டின.

திருமணமான முதலிரவன்று சங்கர் தன் பக்கத்தில் வந்து நின்று, ''உமா'' என்று கரம்பற்றிய காட்சி அவள் மனவானில் நிழலோவியமாக விரிந்தது. அதேசமயம் அவன் வீடு திரும்பியதும், அவன் கால்களில் விழுந்து, கண்ணீரால் தன் பாபங்களைக் கழுவி மன்னிப்புக் கோர வேண்டும் என்று நினைத்தாள். அவ்வாறு தான், காலில் விழுந்தால் அவன் என்ன செய்வான் என்று நினைத்துப் பார்த்தபொழுது அவளுக்குச் சிரிப்பு வந்தது. என்றைக்கு அவன் வருவான் எனக் கணக்கிட்டவாறே யாவையும் எடுத்து வைத்துப் பூட்டினாள்.

அன்று பகல் உணவுக்குப் பின்பு கட்டிலில் சாய்ந்தவாறே கற்பனைக் கனவு கண்டுகொண்டிருந்தாள் உமாதேவி. அதேசமயம், வசுமதி அவளைத் தேடிக் கொண்டு வந்தாள். வசுமதி வந்திருக்கின்றாள் என்று அறிந்ததும் ஏதோ சினிமாப் பாட்டை முணுமுணுத்தவாறு வெளியே வந்தாள்.

''என்ன உமா! உனக்குச் சுகமில்லையென்று பார்க்க வந்தேன், நீ...'' என்றாள் வசுமதி.

''என்னைப் பிடித்திருந்த எல்லா நோயும் தீர்ந்து விட்டது. எனக்குச் சுபகாலம் பிறந்து விட்டதடி வசு''

''என்ன உமா! உன் கதை இன்று புதிய மாதிரி இருக்கே''

''ஆமாம்! எனக்கிருந்த சந்தேகமெல்லாம் தீர்ந்து விட்டது. எனக்கு வந்ததாகக் கூறினேனல்லவா கடிதம், அதேபோல ஒரு கடிதம் அவருக்கும் என்னைப்பற்றி அவ

தாருக எழுதி அனுப்பியுள்ளனர். அவர் அதை நம்ப வில்லை. நான் ஒரு அறிவிலி. அவர் மனம் நோகும்படி செய்து விட்டேன்''

''அவர்தான்...'' என்று ஏதோ கூறவந்த வசுமதி வேறு பல விடயங்களைப்பற்றிக் கதைத்துவிட்டு திருமதி செல்லையா கூறியதாகவும் பல கதைகள் கூறினுள்.

''பொருமைக்காரர்கள் எதை வேண்டுமானுலும் கூறட்டும். இனி நான் எதையுமே கேட்கப்போவதில்லை. அவர் அண்ணி பற்றிய விடயமும்...அதை நான் சொல்ல மாட்டேன்'' என்று கூறி நிறுத்திவிட்டாள் உமாதேவி.

வசுமதி விடைபெற்றுச் சென்றபின்பு அவளிடம் பழைய உற்சாகம் கரை புரண்டோடியது. குமாரை அழைத்து வைத்துக்கொண்டு விளையாடினுள். அடிக்கடி அவன் கன்னத்தில் முத்தமிட்டு மகிழ்ந்தாள்.

நாட்கள் இரண்டு, மூன்று நகர்ந்து விட்டன. அன்று சங்கர் வருவதாகக் கூறிச் சென்ற நாள். அதிகாலை யிலேயே குளித்துவிட்டுப் புதிய ஆடையணிந்து ஆனந்த வெள்ளம் கரைபுரண்டோட நின்றிருந்தாள் உமாதேவி. அன்று காலை மெயில் போய் இரண்டு மணித்தியாலங் களாகி விட்டன. அவன் வரவேயில்லை. உமாதேவி ஒரு நாளுமில்லாதவாறு வருத்தமடைந்தாள். யாராவது எதும் கேட்டால்கூட அழுது விடுவாள் போலிருந்தது.

''சங்கர் இன்னும் வரவில்லைப் போலிருக்கே'' என்று கூறிய சௌந்தரம்மாள், மருமகளின் கோலத்தைக் கண்டு மகிழ்ச்சியும், வருத்தமும் அடைந்தாள்.

ஒன்பது மணியளவில் கடிதங்கள் இரண்டு உமா தேவியின் பெயருக்கு வந்திருந்தன. அதிலொன்று சங்கரி டமிருந்து வந்ததென்று தெரிந்ததும் அவசர அவசர மாகப் பிரித்துப் படித்தாள்.

அன்புள்ள உமா!

நீர் என்னிடம் அன்பு வைக்காதிருந்தாலும், நீர் எனக்கு அன்புள்ளவள்தான். நான் இங்கே வந்த

விடயம் வெற்றியாகவும், மகிழ்ச்சியாகவும் முடிந்துள்ளது. அதாவது, எனக்கு வெளிநாட்டில் படிப்பதற்கு புலமைப் பரிசில், அதாவது, 'ஸ்கொலசிப்' கிடைத்திருக்கின்றது. இது அம்மாவுக்குப் பிடிக்காத விடயம். ஆனால், உமக்கு மகிழ்ச்சியளிக்கும் என்று நினைக்கின்றேன். உமா! எமக்குக் கல்யாணமாகிப் பத்து மாதங்களாகப் போகின்றன. இருவரும் ஒருமித்திருந்தால் உமக்கு எவ்வளவோ கஷ்டம். இனி மூன்று வருடங்களுக்கு நீர் நிம்மதியாக இருக்கலாம். இந்த மாதமுடிவுக்குள் நான் புறப்பட வேண்டுமாகையினால் இங்கே அவசரமாகச் செய்து முடிக்க வேண்டிய சில வேலைகள் இருக்கின்றன. அவற்றை முடித்துக் கொண்டே வர வேண்டும். ஆகவே, அம்மாவிடம் விடயத்தைக் கூறவும். குமாரைக் கவனமாகப் பார்க்கவும்.

அன்புள்ள,
சங்கர்

கடிதத்தைப் படித்தபொழுது தலையிலே கைவைத்துக் கதறி அழ வேண்டும் போலிருந்தது. அவளுக்கு இந்த உலகமே இருண்டுபோய் விட்டது போன்ற வெறுமை உணர்வே ஏற்பட்டது. பல தடவைகள் சௌந்தரம்மா அழைத்தும் எதுவித உணர்வுமின்றி மரம்போலவிரு... தாள் உமாதேவி.

''உமா என்னம்மா எழுதியிருக்கின்றான்?'' எ... அவள் தோள்களைப்பற்றி உலுப்பினாள் சௌந்தரம்...

''அம்மா!'' என்றபடி திடுக்கிட்டுச் சுய உ... பெற்றாள் உமாதேவி.

''என்ன எழுதியிருக்கின்றான்?''

''சந்தோஷச் செய்திதான்'' என்று விடய... கூறினாள்.

''நீ ஏனம்மா...'' என்று சிரித்தவள், ''... காரன். வரட்டும் பேசிக்கொள்கிறேன்'' என்று க... உள்ளே சென்றாள்.

உமாதேவிக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. தன் மனக் கருத்தையெல்லாம் கடிதத்தில் கொட்டி எழுதலாமோ என நினைத்தாள். அறைக்குள் சென்று கதவைப் பூட்டிவிட்டுக் கதறி அழுது தீர்த்தாள்.

அதன் பின்புதான் மற்றக் கடிதத்தை எடுத்துப் பிரித்தாள். அதைப் படித்ததும் அவளுக்கு வசுமதிமீது ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. திருமதி செல்லையா கூறியதாக சங்கரைப்பற்றி அவதூறாகப் பல விடயங்களை வசுமதி எழுதியிருந்ததுடன், சங்கரின் அண்ணியின் தங்கையை, சங்கர் கெடுத்துவிட்டது பற்றி அவளை தனக்குக் கூறியது பற்றியும் எழுதியிருந்தாள். அதைப் படித்து முடித்ததும் அவளுள் ஒரு ஆவேச உணர்வு பிறந்தது. அவசர அவசரமாகப் புறப்பட்டுத் தன் வீட்டுக்குப் போய் வருவதாக சௌந்தரம்மாளிடம் கூறி விட்டுச் சென்றாள்.

நேராகத் திருமதி செல்லையாவைச் சென்று சந்தித்த பொழுது அவளுக்கு மேலும் பல உண்மைகள் வெளியாயின. அவளிடமே குமாரின் தாய்வீட்டு விலாசத்தைப் பெற்றுக் கொண்டு அங்கே சென்றாள்.

அவர்கள், அவளை யாரென்று தெரிந்து கொண்டதும் ...லல முறையில் வரவேற்று உபசரித்ததுடன், அவளு... ...ய சந்தேகங்களுக்கும் விடையளித்தனர். அடுத்து ...ளுடைய இலக்கு வசுமதி மீது திரும்பியது. ...ளை என்ன செய்வதென்று அவளுக்குப் புரியாவிட் ..., அவள் தனக்கு இழைத்துவிட்ட கொடுமையை ...க் குமுறியவாறே அவள் வீட்டுக்குச் சென்றாள். ... அவளுக்குக் கிடைத்த செய்தி மனநிம்மதி அளிப்ப... ...ருந்தது. அத்துடன் கடவுள் அவளுக்கு அளித்த ... எண்ணி மகிழ்ந்தவளாய்க் கைக்கடிகாரத்தைப் ...ள். பெரிய ஆஸ்பத்திரிக்குப் போவதற்குப் நேரம் ...இருந்தது.

யாழ். பெரியாஸ்பத்திரியில் வசுமதி தங்கியிருந்த வார்ட்டுக்குச் சென்றாள் உமாதேவி. அவளைச் சுற்றிவரச் சனங்கள் கூட்டமாக இருந்தார்கள். உடலெல்லாம் கட்டுகள் போடப்பட்ட நிலையில் படுத்துக் கிடந்தாள் வசுமதி.

கிணற்றில் தண்ணீர் அள்ளிக்கொண்டு நின்றபொழுது கால் சறுக்கிக் கிணற்றுக்குள் விழுந்துவிட்டாள். கிணற்று உட்சுவரோடு தலை மோதுப்பட்டு விட்டதால் பெரும் காயம் ஏற்பட்டு நினைவின்றிக் கிடந்தாள். உமாதேவி அங்கு வருவதற்கு இரண்டு நிமிடங்களுக்கு முன்புதான் அவளுக்கு நி[illegible]ம்பியிருந்தது. உமாவைக் கண்டதும் சைகை [illegible] அருகில் அழைத்தாள். உமா வேண்டா வெறுப்பாக அவளருகில் சென்று நின்றாள்.

"உமா! நீ அறியாமலேயே உனக்குப் பல தீமைகள் செய்து விட்டேன். சங்கர் உத்தமர். நான்தான் உன் வாழ்வில் பொறுமைப்பட்டு அனுமதேயக் கடிதங்கள் எழுதி உன்னை..." என்று கூறும்பொழுது மூச்சு முட்டிப் பேச முடியாது தடுமாறினாள் வசுமதி.

"எனக்கு எல்லாம் தெரியும் வசு. எல்லோரிடமும் விசாரித்து விட்டுத்தான் வந்தேன்" என்றாள் உமாதேவி.

"என்னைக் கடவுள் தண்டித்து விட்டார். என்னை நீ... நீ..." என்றவள் பேச்சை முடித்துக் கொண்டு இவ்வுலகிலிருந்தே விடைபெற்றுச் சென்று விட்டாள்.

## 21.

வசுமதியின் மரணம் உமாதேவியைப் [illegible] குழப்பிவிட்டிருந்தது. என்ன இருந்தாலும் அவளுக்[illegible] படி ஒரு மரணம் நேர்ந்திருக்கக் கூடாதென்று [illegible] தினாள்.

இரவு பல பயங்கரக் கனவுகளைக் கண்டு அழுது புலம்பினுள். பத்து மாதமாக தான் அவனைத் தண்டித்ததிற்கு அவன் தன்னை மூன்று வருடங்கள் தண்டிக்க ஏற்பாடு செய்துவிட்டானே என்று நினைத்தபொழுது... கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போய்விடுமோ என்று கலங்கினுள்.

விடிந்து எழுந்தபோது அவளுக்குத் தலையை வலித்தது. தலையைவிட மனவலியே கூடுதலாக இருந்தது. வெளியே கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டது. உமா கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தாள். குமாரைக் கட்டி அணைத்தபடி சிரித்துக்கொண் ... ர் சங்கர்.

''ஏன்டா சங்கர், நீ வெளிநா... ...வதாகத் தீர் மானித்துவிட்டு, அதை உன் மனைவி மூலமாக எனக்கு அறிவிக்க வேண்டுமென்று எத்தனை நாளாக நினைத்திருந் தாய்?'' என்று கேட்டுக்கொண்டே வந்தாள் சௌந்தரம் மாள்.

''அம்மா, நான் வெளிநாடு போவதினுல் உங்களுக் குப் பெருமையும், புகழும் ஏற்படுமே தவிர, சிறுமை இல்லையே. எஸ். எஸ். ஸி. மூன்று திறடிற்ருடை பாஸ் பண்ண முடியாதவங்களெல்லாம் காணியை விற்று, வீட்டை விற்று லண்டனுக்குப் போகின்ருர்கள். இது அர ...ாங்கமே என்னை அனுப்புகின்றது. நீங்கள்......''

''டேய் சங்கர்! நீ வெளிநாடு போக முனைந்த ...ழுதெல்லாம் தடுத்தேன் என்பதற்காகத்தானே ...குத் தெரியாமல் இந்த ஏற்பாட்டைச் செய்திருக் ...ய். நீ போனுல் இங்கே யாரடா எங்களுக்குத் ...''

...ரண்டி பாட்டி, நான் இல்லை'' என்ருன் குமார்.

...ஆமாம். இவர் பெரிய இவரு. போடா மடையா ...ங்கர், நான் எனக்காகச் சொல்லவில்லை. நீ போவ ...ன் தடை சொல்லவில்லை. ஆனுல், உன் மனைவி ... அழைத்துக்கொண்டு போ'' என்று கூறிவிட்டுப் ...ள்.

"என்ன உமா, அம்மா கூறியதைக் கேட்டாயா? நீ நிம்மதியாக இருக்க வேண்டும் என்பதற்காகவே நான் இந்த முடிவுக்கு வந்தேன். அம்மா என்னடாவென்ருல்....." என்று கூறிவிட்டு, உடைகளை மாற்றிக் கொண்டு குளியலறைக்குச் சென்ருன்.

உமாவுக்கு என்ன பேசுவது, என்ன செய்வதென்று எதுவுமே விளங்கவில்லை. அவளுடைய மனம் தடுமாறியது. சங்கரிடம் எப்படித் தன் கருத்தைத் தெரிவிப்பது? தனக்காகத்தானே இப்படி ஒரு முடிவுக்கு வந்திருக்க வேண்டுமென்று நினைத்தபோதே அவளுக்கு மயக்கம் வரும்போலிருந்தது. அந்த மயக்கத்திலும் குமாரின் தாய், சங்கருக்கு எழுதிய கடிதம் ஞாபகத்துக்கு வந்தது.

அன்புள்ள தம்பி,

என்னை உன் அக்காளாகவே நீ நினைத்தாய்—பழகிளுய். எவ்வளவோ உதவிகள் செய்தாய். உங்கள் அண்ணனை திருமணம் செய்யுமுன்னரே நான் ஒருவரைக் காதலித்தேன். ஆனல், காதல் எல்லாம் கலியாணத்திலா முடிகின்றது? உங்கள் குடும்பத்தில் கடவுள் தந்த வாழ்வு எனக்குப் பெருமகிழ்ச்சியையே தந்தது. நான் பிறந்த வீட்டில்கூட அனுபவித்தறியாத வாழ்வை உங்கள் வீட்டில் வாழ்ந்து அனுபவித்தேன். பலரும் என்னைப் பார்த்துப் பொருமைப் பட்டதாலோ என்னவோ உங்கள் அண்ணு என்னை விட்டுப் பிரிந்துவிட்டார். அதன்பின்னர் எங்கள் வீட்டுக்கு அடிக்கடி போய் வந்தபொழுது, என்னை முதலில் காதலித்தாரே, அவர் மீண்டும் என்னோடு பழக ஆரம்பித்தார். இளமை உணர்வுகள் மனதுக்கு அடங்கியதல்லவே. அறிவுக்கு அடங்கிய உணர்வுகள் உன்னைப் போலவே எல்லோருக்கும் வந்துவிடுமா? காலம் என் வாழ்வில் விளையாடிவிட்டது. நானும் சறுக்கிவிட்டேன். இயற்கைக்கு எதிரான செயற்கை முறையோடு என்னைக் காப்பாற்றிக்கொண்டே என்

வெறியுணர்வைத் தீர்த்திருக்கலாம். ஆனால், காமத்துக்குக் கண் இல்லையே. என் வயிற்றில் ஓர் கரு வளர்கிறது. இதை அழித்துவிட்டு வாழவோ, வாழ்ந்து கொண்டு உங்கள் குடும்பத்துக்கு அபகீர்த்தி தேடித் தரவோ நான் விரும்பவில்லை. ஆகவே இந்த உலகை விட்டுப் போக முடிவு செய்துவிட்டேன். என் குமாரை உன் மகனாகப் பாவித்துக்கொள். நீ திருமணம் செய்து உனக்குப் பிள்ளைகள் பிறந்தாலும் குமார் உனது மூத்த மகன் என்பதை மறந்துவிடாதே. இப்படி ஒரு கேடுகெட்ட தாய் இருந்ததாக அவன் நினைக்காதபடி பார்த்துக்கொள். உன் சகோதரியின் இறுதி வேண்டுகோள் ஒன்று, நான் ஏன் இறந்தேன் என்ற உண்மை இந்த உலகத்துக்குத் தெரியக் கூடாது. காரணம், உனக்கும் உன் குடும்பத்தினருக்குமே அபகீர்த்தி ஏற்பட்டுவிடும். நீ உண்மைக்கு மாறாகச் செயற்படமாட்டாய் என்பது எனக்குத் தெரியும். ஆனாலும், இந்த உண்மையை மறைத்து, உன் செல்வாக்கைப் பயன்படுத்தி மரணவிசாரணை எதுவும் வைக்காது, மாரடைப்பால் இறந்துவிட்டதாய் என்னை... உன் தாய்மீது ஆணை. என்னைக் காட்டிக் கொடுத்துவிடாதே.

அக்கா ளி.

வசனத்துக்கு வசனம் சிவசங்கரின் நேர்மையும், உயர்ந்த குணமும் பளிச்சிட்டு மின்னியது. 'அற்ப நினைவுகளை லட்சியம், கொள்கை என்று மனதிற் கொண்டு என் தெய்வத்தின் மனதை வருத்திவிட்டேனே! நான் கடிதம் பார்த்த விடயத்தினை அவர் தெரிந்துகொள்ளக் கூடாது. என் தெய்வம் தூய்மையானது. எப்படியும் இன்றிரவு என்னை......' என்று எண்ணியவாறே அவன் ஆபீசுக்குச் செல்ல வேண்டியதற்கான ஒழுங்குகளைச் செய்து முடித்தாள்.

சில கணப்பொழுது மட்டும் நீர்மட்டத்தின்மேல் நின்று அழகாக அசைந்தாடும் காகித ஓடம் போன்று சில நினைவுகளை மனதில் வைத்துக்கொண்டு கொள்கை, லட்சியம் என்று அர்த்தமற்ற கூப்பாடு போட்டாலும் உண்மைக்கு முன்பு அவை என்னவாகுமென்பது அவள் அனுபவத்தில் கண்டறிந்துவிட்ட ஒன்றுகிவிட்டபொழுது அதுவரை அவளுக்கு இருந்துவந்த மன எரிச்சலும், உளைச்சலும் மறைந்துவிட்டன.

மாலை கழிந்து இரவு வந்தது. பூசைக்கு வந்த புனித மலர்போல, பனிப் பதுமையாய் சகல அலங்காரங்களுடனும் வந்து அவன் முன் நின்ருள் உமாதேவி.

''என்ன உமா? இன்றைக்கு என்ன விசேடம்?''

''என்னை மன்னித்துவிடுங்கள். என் தவறுகளை நான் உணர்ந்துவிட்டேன். என் அறியாமை இருள் நீங்கிவிட்டது'' என்று அவன் பாதங்களில் விழுந்தாள்.

சங்கர் சிலையாக வீற்றிருந்தான். என்ன பேசுவதென்று அவனுக்குப் புரியவில்லை. அலைகடலில் தத்தளிக்கும் ஓடம் போன்று அவன் மனமும் தத்தளித்து மிரண்டது.

''உமா, நீ......?''

''நான் திருந்திவிட்டேனுங்க.''

''வேதாளம் திரும்பவும் முருக்கமரம் ஏருதே?''

''இல்லீங்க. நீர்மேல் ஆடும் காகித ஓடம்போல சில நாட்கள் என் மனம் பைத்தியக்காரத்தனமாக ஆடியது உண்மைதான். அந்த ஓடம் நீரில் நனைந்து சமுத்திரத்திலேயே அமிழ்ந்து அழிந்துவிட்டது. ஏட்டிக்குப் போட்டியாக நீங்களும் என்னேடு மோதாது, வெள்ளத்தில் ஓடம் விட்டு விளையாடும் சிறுவனைப்போல என்னை வைத்து வேடிக்கை பார்த்தீர்கள். இதற்குக் காரணம் என்மீது நீங்கள் வைத்துள்ள உண்மையான அன்புதான் என்பதை நானுகவே உணர்ந்திட்டேன்'' என்று அவன் மார்பில் முகம் புதைத்து விம்மினுள்.

"உமா, உமா" என்று அவளை இறுகத் தழுவி அவள் இதழ்களில் முத்தமிட்டான்.

அந்த ஆனந்த சுகத்தில் அவள் அமிழ்ந்துவிட்டாள். அகோரப் பசிகொண்ட குழந்தை தாயின் முலையில் பால் உண்ணும்பொழுது எப்படியான நிலையில் தவிக்குமோ, ருசிக்குமோ அப்படி இருந்தது அவளுக்கு. அவளை விடவா அவனுக்கு இந்த உலகம் பெரிது?

★

# "தீக்குள் விரலை வைத்தால்"



நாவலை அளித்த
பிரபல
நாவலாசிரியர்

**கே. எஸ். ஆனந்தனின்**

பேனாவில் இருந்து
இன்னோர்
வெற்றிப் படைப்பு...

இன்ப வாழ்வை எதிர்நோக்கும் இரு இள நெஞ்சங்கள், வாழ்க்கையின் முதல் படியிலேயே சந்தேகம் என்னும் கொடிய சூறாவளியினால் தாக்குண்ட போது, அவர்களின் உள்ளப் போராட்டங்களை அழகுறச் சித்திரிக்கின்றது இந் நாவல்!

குடும்ப நாவல்: வீரகேசரி பிரசுரம்.